
# கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்

## நகைச்சுவை

## ஆளுமை

## தீர்க்கதரிசனம்



வெளியீடு

இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம்

+

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அறக்கட்டளை நிதியம்

# கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்

## நகைச்சுவை - ஆளுமை - தீர்க்கதரிசனம்

தொகுப்பு

சண்முக சுப்பிரமணியம்

வெளியீடு

இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம்,
கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அறக்கட்டளை நிதியம்

| | | |
|---|---|---|
| நூல் | : | **கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் நகைச்சுவை—ஆளுமை— தீர்க்கதரிசனம்** |
| தொகுபாசிரியர் | : | சண்முக சுப்பிரமணியம் |
| வெளியீடு | : | இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்<br>18, 6/1, கொலிங்வூட் பிளேஸ்<br>கொழும்பு - 06<br>இலங்கை |
| விநியோகஸ்தர் / விற்பனையாளர்: | | பூபாலசிங்கம் புத்தகசாலை<br>202, செட்டியார் தெரு, கொழும்பு - 11<br>தொலைபேசி இல. 011 2422321 |
| வெளியீட்டுத் திகதி: | | 19.09.2010 |
| அச்சுப் பதிப்பு | : | ஆர்.எஸ்.ரி. என்டர்பிறைஸ்ஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்<br>114, டபிள்யு.ஏ.சில்வா மாவத்தை,<br>கொழும்பு 6,<br>தொ.இல. 2501715 |
| விலை | : | ரூபா 200/= |

## சமர்ப்பணம்

தோழர் மு.கார்த்திகேசன் அவர்களுடன் இணைந்து, தமிழ் மக்கள் மத்தியில் முதன் முதலில் **கம்யூனிஸ்ட் இயக்க** விதைகளை ஊன்றியவர்களுக்கும், அவர்களது அடிச்சுவட்டில் உழைத்து, அதைப் பயிராக வளர்த்தெடுத்தவர்களுக்கும்.

# தொகுப்பாளர் குறிப்பு

**தோ**ழர் கார்த்திகேசனுடனான எனது அனுபவங்களை ஒரு நூலாக வெளியிட வேண்டும் என்ற, எனது நீண்ட நாள் அவா இன்னமும் நிறைவேறாத ஒரு சூழ்நிலையில், இந்த வகையான ஒரு தொகுப்பையாவது முதலில் வெளியிடுவோமே என்ற நினைப்பின் ஒரு முயற்சி தான் இச்சிறு நூல்.

தோழர் கார்த்திகேசன் அவர்களுடனான எனது தொடர்பு, நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த 1965ம் ஆண்டில், எனது பதினேழாவது வயதில் ஏற்பட்டது.

அன்றிலிருந்து தோழர் கார்த்திகேசன் மரணித்த 1977 செப்ரெம்பர் மாதம் வரை, நான் அவரது அரசியல் மாணவனாக, கட்சித் தோழனாக, அவரது இறுதி மூச்சு வரை, அவருடன் ஒன்றாக வேலை செய்து, பழகி வந்துள்ளேன். என்னைப் பொறுத்தவரை, இந்தக் காலம் முழுவதும் அவர் எனக்கு ஒரு பல்கலைக்கழகமாக இருந்து வந்துள்ளார் என்பதை இப்பொழுது பெருமையுடன் நினைவுகூர முடிகிறது.

தோழர் கார்த்திகேசன் வெறுமனே ஒரு கட்சிக்காரரோ, அரசியல்வாதியோ அல்ல. அவர் தான் ஏற்றுக் கொண்ட மார்க்சிய நெறிமுறையின் நடைமுறை உதாரணமாகத் திகழ்ந்தார். சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளி இல்லாத ஒரு மனிதராக, மனித விழுமியங்களின் உன்னத புருஷராக, அவரது வாழ்வு பல முன்னுதாரணங்களை எதிர்காலச் சந்ததிக்காக விட்டுச் சென்றிருக்கிறது.

அவருடனான எனது நெருக்கமான தொடர்பின் அனுபவங்களினாலும், அவருடன் பழகியவர்கள் எனக்கு தந்த தகவல்களினாலும்தான், என்னால் இந்த சிறு பிரசுரத்தை உருவாக்க முடிந்தது.

வாசகர்களின் சிந்தனைக்கு இந்த சிறு வெளியீடு விருந்தளிக்குமாக இருந்தால், அதுவே எனது முயற்சியினதும், எதிர்பார்ப்பினதும் வெற்றியுமாக இருக்கும்.

அவரது 33 ஆவது நினைவு தினத்தையொட்டி, இப் பிரசுரத்தை மனமுவந்து வெளியிட முன் வந்த, கார்த்திகேசன் நினைவுக் குழுவினருக்கும், இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்திற்கும் என்றும் எனது நன்றி உரித்தாகுக.

அன்புடனும் தோழமையுடனும்
**சண்முக சுப்பிரமணியம்**

# பதிப்புரை

*1947 ஆம் ஆண்டு இறுதிக்காலத்தில் தோழர் கார்த்திகேசனுடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. அன்றில் இருந்து அவர் இறக்கும்வரை அவருடன் நெருக்கமாக இணைந்து கட்சிப் பணிகளிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளேன். கட்சிப் பணிகளில் அவரது அர்ப்பணிப்பும், கட்சி உறுப்பினர்களுடன் அவருக்கிருந்த தோழமை உணர்வும் எமக்கு முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் அமைந்திருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது மனிதநேயம் அளப்பரியது. அவர் உறுதிமிக்க கம்யூனிஸ்ட்.*

*2002 ஆம் ஆண்டில் தோழர் கார்த்திகேசனது 25 ஆவது ஆண்டு நினைவாக ஒரு நூலை வெளியிட்டோம். அந்த நூல் 408 பக்கங்களைக் கொண்டது. அந்த நூலை வெளியிடுவதற்கு முன் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கார்த்திகேசனது நகைச்சுவைகளை ஒன்று திரட்டி ஒரு நூல் வெளியிடப்பட வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது. அது உடனடியாகச் சாத்தியப்படவில்லை. இப்பொழுது தோழர் சண்முக சுப்பிரமணியம் அந்த ஆலோசனையை நிதர்சனமாக்கியுள்ளார். தோழர் கார்த்திகேசனுடன் அவருக்கிருந்த நெருக்கமான உறவும், மார்க்ஸிஸ, லெனிஸ தெளிவான சிந்தனையும் இப்படிப்பட்ட ஒரு சிறந்த நூலை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.*

*தோழர் கார்த்திகேசனுடைய நகைச்சுவைகள் அர்த்தபுஸ்டியானவை. சுவைமிக்கவை. அவை சமயோசிதமானவை. அதாவது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமானவை. இரண்டாவதாக தோழர் கார்த்திகேசனது நகைச்சுவைகள் கருத்தாளம் மிக்கவை. மூன்றாவதாக அவை மற்றவர்களது மனதை புண்படுத்தாதவை. சிந்தனையைத் தூண்ட வைப்பவை. அத்துடன் சிரிக்கவைக்கத் தக்கவையாகவும் மகிழ்ச்சியூட்டத் தக்கவையாகவுமுள்ளன. தோழர் கார்த்திகேசனுடைய நகைச்சுவைகள் அனைத்தையும் திரட்டி ஒரு முழுமையான நூலாக வெளியிடுவதற்கான முயற்சியை எமது முற்போக்கு கலை இலக்கிய மன்றம் தொடர்ந்தும் மேற்கொள்ளும். தோழர் மணியத்தால் தொகுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் நகைச்சுவை ஆளுமை. தீர்க்கதரிசனம் என்ற இந்த நூலை வெளியிடுவதில் இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் பெருமை கொள்கின்றது.*

***நீர்வை பொன்னையன்***

# பொருளடக்கம்


1. கார்த்திகேசனின் கல்விச் சேவைக்கு கால்கோள் இட்டயோகர் சுவாமிகள் 1
2. தண்ணீரைப் பிரித்த தமிழன்! 5
3. வெள்ளைக்காரன் பூசிய சேறு 7
4. கதியால் குத்தும் கத்தியால் குத்தும் 8
5. முருகக் கடவுளின் மூன்று கோலங்கள 10
6. கார்த்திகேசனின் வாழ்க்கையில் மறக்க முடியாத மூன்று 'P'க்கள் 12
7. நற்போக்கு இலக்கியமல்ல அது, 'இடைப்போக்கு' இலக்கியம்! 14
8. காங்கேசன்துறை சென்று 'கோணர் சீற்' பிடித்த அமிர்தலிங்கம்! 15
9. செல்வம் அங்கே! நாயகம் இங்கே!! 17
10. நான் போகமுடியாத இடத்துக்குச் சென்ற எனது பாதணிகள்! 19
11. பெண்களும் தோசையும் 21
12. குறள் கண்ட தமிழனுக்கு கறள் கண்ட பேணியா? 22
13. 'மா'(குதிரை) விட்ட புரத்தில் மனிதனை விட்டால் என்ன? 24
14. ஹோசிமின் இரும்பு – ஜோன்ஸன் துரும்பு 25
15. மாஓவின் அறைகூவலைத் தவறாக விளங்கிய தோழர்! 27
16. பண்டாரநாயக்கவை தூக்கிலிட்ட சோவியத்காரர்! 29
17. School Master – Road Master ஆன கதை 31
18. ஆணவ மலமும் அழுக்கு மலமும் 33
19. அலையலையாக தாக்கியவனும்,குலைகுலையாக குந்தி இருந்தவனும்! 34
20. தமிழனைத் தட்டி எழுப்பியவன் யார்? 36

| | | |
|---|---|---|
| 21. | எம்.ஜீ.ஆர். உருவிய ஆயுதம்! | 38 |
| 22. | தமிழனுக்கு 'கணக்கு விட்ட' கணிதப் பேராசிரியர்! | 40 |
| 23. | கொழும்பு செல்லும் வண்டியில் ஏறி, காங்கேசன்துறை நோக்கி நடக்கும் செல்வநாயகம்! | 42 |
| 24. | வெள்ளையன் குடியும், தமிழன் குடியும | 44 |
| 25. | கார்த்திகேசனின் Poor Rose அல்லது பூவரசம் பூ | 45 |
| 26. | வான் பயிராய் வளர்ந்த பிள்ளைகள் | 47 |
| 27. | கட்சிக் கொள்கை மீதும், கட்டுப்பாடு மீதும் கொண்ட உறுதிப்பாடு | 49 |
| 28. | ஜீ.ஜீ. – சீ...சீ! விண்ணன் பொன்னன் பண்ணியதென்ன? | 52 |
| 29. | நல்லூர் கந்தனுக்கு எதிர்ப்பக்கம் தலைசாய்க்கும் கார்த்திகேசன்! | 55 |
| 30. | செல்வநாயகம் விரும்பாத இரண்டு தமிழர்களும், கார்த்திகேசனின் தீர்க்கதரிசனமும் | 58 |
| 31. | பள்ளிச் சுவரில் நொள்ளைச் சுலோகம் | 62 |
| 32. | காங்கிரஸ் வேட்பாளரின் பல குழிகளும், கார்த்திகேசனின் ஒரு குழியும் | 64 |
| 33. | கார்த்திகேசனை ஏற்ற, கட்சிக் கொடியை காரிலிருந்து இறக்கிய தமிழரசு எம்.பி! | 66 |
| 34. | பனங்காட்டுத் தமிழன் கறுவாக்காட்டுத் தமிழனானான் | 69 |
| 35. | குருவிச்சைத் தலைமைகள் | 71 |
| 36. | கார்த்திகேசனின் ஒப்பற்ற வழிகாட்டல்கள | 73 |
| 37. | முஸ்லீம் ஒருவரை யாழ். நகர முதல்வராக்கிய கார்த்திகேசனின் சாணக்கியம்! | 78 |
| 38. | கூட்டம் குழப்ப வந்தவர்களை, திரும்பிப்போக வைத்த சாதுரியம் | 80 |
| 39. | எழுத்துத்துறை ஜம்பவான் கார்த்திகேசன் | 82 |
| 40. | கம்யூனிஸ்ட் அரசியல் நாகரீகத்தின் முன்னோடியாக வாழ்ந்த கார்த்திகேசன் | 88 |

# 1. கார்த்திகேசனின் கல்விச் சேவைக்கு கால்கோள் இட்ட யோகர் சுவாமிகள்

தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் கல்விப் பணிப் பயணம், ஒரு நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது. அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்தபின், கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக இணைந்து செயற்பட ஆரம்பித்தார். வட்டுக்கோட்டையில் தனது உறவினரான, ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை தனது துணைவியாராக வரித்துக்கொண்ட அவர், கொழும்பு - பொரளை கொட்டா வீதியிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், ஏனைய கட்சித்தோழர்களுடன் சேர்ந்து 'கம்யூன்' (கிடைத்த பணத்தைக்கொண்டு கட்சித்தோழர்கள் எல்லோரும் ஒன்றாக சமைத்து உண்டு வாழ்ந்த) வாழ்க்கை வாழத்தொடங்கினார்.

1943 ஜூலை 3ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிக்கு, ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கிளைகள் எதுவும் இல்லாமல் இருந்தது. யாழ்ப்பாணம் தமிழ்மக்களின் முக்கியமான ஒரு வாழ்விடமென்றபடியால், அங்கு கிளையொன்றை அமைப்பதற்கு கட்சி விரும்பியது. அதற்கு பொருத்தமானவராக கார்த்திகேசனையே கட்சி தேர்ந்தெடுத்தது. எனவே, கார்த்திகேசன் கட்சிப்பணிக்களை அங்கு மேற்கொள்வதன் நிமித்தம் தனது இளம் மனைவியுடன் யாழ்ப்பாணம் புறப்பட்டார். யாழ்ப்பாணம் சென்ற கார்த்திகேசன், அங்கு நகரின் மத்தியிலிருந்த விக்ரோறியா வீதியில் வாடகைக்கு வீடு ஒன்றை எடுத்து தங்கினார். (இந்தவீட்டில்தான், இந்திய கம்யூனிஸ்ட் (தமிழக) கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவரான ப.ஜீவானந்தம் அவர்கள், பிரிட்டிஸ் ஆட்சியின் அடக்குமுறை காரணமாக, சிறிதுகாலம் தலைமறைவாக இருந்த காலத்தில் வந்து தங்கினார்.)

யாழ்ப்பாணம் சென்ற தோழர் கார்த்திகேசன், அங்கு இராமசாமி ஐயர், எம்.சி.சுப்பிரமணியம், டாக்டர் சு.வே.சீனிவாசகம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், அரசடி இராசையா போன்றோரின் உதவியுடன் கட்சி வேலைகளை

முன்னெடுக்க ஆரம்பித்தார். அதேவேளையில், தனது ஜீவனோபாயத்தை கொண்டு நடாத்துவதற்காக, தொழில் ஒன்றைத் தேடவேண்டிய நிர்ப்பந்தமும் அவருக்கு இருந்தது. எனவே யாழ். இந்துக்கல்லூரியில் ஆசிரிய வெற்றிடம் இருப்பதை அறிந்து அதற்கு விண்ணப்பித்தார்.

கார்த்திகேசனின் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த இந்துக்கல்லூரி நிர்வாகம், இந்து பரிபால்னசபையால் நடாத்தப்படும் ஒரு பாடசாலையில், கம்யூனிஸ்ட்டான கார்த்திகேசனை ஆசிரியராக ஏற்றுக்கொள்வதா எனத் தயங்கியது. இதுசம்பந்தமாக எவ்வித முடிவும் எடுக்கமுடியாத நிர்வாகம், இறுதியில் யாழ்ப்பாணத்தில் சைவசமயிகளின் ஆன்மீக குருவாக, கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்துவந்த, யோகர்சுவாமி அவர்களிடம் சென்று ஆலோசனை கேட்டனர். அவர்களது பிரச்சினையை செவிமடுத்த யோகர்சுவாமிகள், " அட, அவன் கார்த்திகேசன் கணிதத்தில் ஒரு விண்ணன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவனும் படிப்பித்துவிட்டுப் போகட்டுமே?" என பதிலளித்தாராம்! அதன்பின்னரே கார்த்திகேசன் இந்துக்கல்லூரியில் ஓர் ஆசிரியராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்!

கார்த்திகேசன் 1944ம் ஆண்டுமுதல் சுமார் 30 ஆண்டுகள் யாழ்.இந்துக்கல்லூரியில் ஆசிரியராகவும், பின்னர் சிறிதுகாலம் பதில் அதிபராகவும் பணியாற்றினார். அங்கு பணியாற்றிய காலத்தில், சக ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், பெற்றோர்களினதும் ஏகோபித்த அன்பையும், ஆதரவையும் பெற்றவராக அவர் விளங்கினார். குறிப்பாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் 'காத்தாராக' அவர் விளங்கினார். (மாணவர்கள் அனைவரும் அவரை 'காத்தார்' என்றே அழைப்பதுண்டு. பெயருக்காக மட்டுமின்றி, அவர்கள் பரீட்சைக்கட்டணம் செலுத்துவதிலிருந்து, இன்னும் பல்வேறுவழிகளில் அவர் அவர்களுக்கு உதவியதால் அந்த அடைமொழி வந்தது எனலாம்)

ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், அவர் உரை நிகழ்த்தாத கல்லூரி வைபவமோ, பொது நிகழ்வோ எதுவும் இல்லையெனும் அளவுக்கு, அவரது உரைகளுக்கும் அங்கு ஒரு மவுசு இருந்தது. எப்பொழுதும் நகைச்சுவையாகப் பேசும், உரையாடும் அவர், அதனூடாக தனது முற்போக்கு அரசியல் கருத்துகளையும், அறிவியல் கருத்துகளையும் எல்லோர் மத்தியிலும் வலுவாகப் பரப்பினார்.

கார்த்திகேசனின் முதல்நாள் இந்துக்கல்லூரி அனுபவம் மறக்கமுடியாதது என்று அவர் கூறுவார். ஏனெனில் அவர் அங்கு கல்வி கற்பிக்கச் சென்றபோது, காரைநகரைச் சேர்ந்த பிரபல கல்விமான் ந.சபாரத்தினம்

அங்கு கற்பித்துக் கொண்டிருந்தார். (அவர் பின்னர் அங்கு அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது) அவரைச் சந்திப்பதில் கார்த்திகேசன் விசேச ஆவல் கொண்டிருந்தார். அதற்குக் காரணம், கார்த்திகேசன் கொழும்பில் இருந்தகாலத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார வெளியீடான 'போர்வாட்' (Forward) பத்திரிகையின் ஆசிரியகுழுவில் முக்கியமான ஒருவராக பணியாற்றியிருந்தார். (கார்த்திகேசன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தகாலத்தில், தான் ஆசிரியராக இருந்து 'மாணவர் செய்தி' - Student News என்றொரு ஆங்கில ஏட்டை நடாத்திவந்தார். அதுவே பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் 'போர்வாட்'டாக பரிணமித்தது. அந்தப் பத்திரிகையை சந்தா செலுத்தி பெற்று, வாசித்த, இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஒரேயொரு நபராக என்.சபாரத்தினம் இருந்தார். எனவே முதல்நாள் சந்திப்பின் பின், பாடசாலை நேரம் முடிந்த பின்னரும், இருவரும் நீண்டநேரம் பாடசாலையில் இருந்தபடியே உரையாடலைத் தொடர்ந்தனர்.

உரையாடல் முடிந்து சபாரத்தினம் வீடு சென்றபோது, வெகுநேரமாகிவிட்டது. வீட்டில் எல்லோரும் அவரது தாமதத்துக்காக கடிந்து கொண்டனர். காரணம், அன்றுதான் அவரது மனைவி பெரும் சிரமத்துக்கு மத்தியில், தனது முதல் பிரசவமாக ஒரு ஆண் குழந்தையை (இன்று பலருக்கும் மிகப் பரிச்சயமான டாக்டர் சிவகுமாரன் அவர்களை) பெற்றெடுத்திருந்தார். இருந்தும் தனது தாமதத்திற்கு காரணம், தான் பெரிதும் மதிக்கும் கார்த்திகேசனின் வருகை என்பதைச்சொல்லி, அவர்களைச் சமாதானப்படுத்தியதாக, பின்னர் கார்த்திகேசன் மரணமடைந்த சந்தர்ப்பத்தில், சபாரத்தினம் எம்மிடம் நினைவுகூர்ந்தார். பெரும் காந்தீய பக்தரான சபாரத்தினம், ஒருமுறை எம்மிடம் கூறும்போது, உலகில் தன்னலமற்று மக்களுக்காக வாழ்பவர்கள் எல்லோருமே 'மகாத்மாக்கள்' என்றும், அந்தவகையில் இந்தியாவின் மகாத்மா காந்தி மட்டுமின்றி, கார்த்திகேசனும் ஒரு மகாத்மா என்றும் எடுத்துரைத்தார். அவர் இன்னொன்றையும் கூறினார். கார்த்திகேசனை தான் முதன்முதலில் சந்தித்த அன்று பிறந்த, தனது மூத்த புதல்வர் டாக்டர் சிவகுமார் தான், 1977 செப்ரெம்பர் 10ம் திகதி நல்லூர் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா அன்று, கார்த்திகேசன் காலமான செய்தியை தனக்கு வந்து தெரியப்படுத்தியதாக குறிப்பிட்டார். (அப்பொழுது சபாரத்தினம் சிறிது சுகவீனமுற்று யாழ்.அத்தியடி பிள்ளையார் கோவில் வீதியிலிருந்த தனது வீட்டில் தங்கியிருந்தார்)

கார்த்திகேசனை பொறுத்தவரையில், அவரது இந்துக்கல்லூரி வாழ்க்கைதான், அவரது வாழ்வின் அச்சாணி என்று சொல்லலாம். அவரது அரசியல் - சமூக வாழ்வு அதைச் சுற்றியே அமைந்திருந்தது எனலாம். அந்தக்கல்லூரிக்கும் அவருக்கும் உள்ள உறவைப்பொறுத்தவரையில், அவர் அங்கேயே இறுதிவரை அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றிருக்க வேண்டும். ஆனால் அந்தக்கல்லூரியின் வளர்ச்சியுடனோ, அல்லது எந்தவொரு முற்போக்கு அரசியல் இயக்கத்துடனோ சிறிதும் சம்பந்தமில்லாத, இன்னொரு கல்லூரியில் அதிபராக இருந்த ஒருவர், அங்கு அதிபராக வரவிரும்பியதால், கார்த்திகேசனை அங்கிருந்து கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கு மாற்றினார்கள். அதை அறிந்து இந்துக்கல்லூரி சமூகமே கொதித்தெழுந்தது. குறிப்பாக மாணவர்கள் குமுறிப்போனார்கள்.

கார்த்திகேசன் இடமாற்றப்பட்ட சமயம், சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் சிறிலங்கா - சமசமாஜ - கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் பதவியில் இருந்தது. கட்சியில் கார்த்திகேசனுக்கு மிகவும் இளையவரான மாத்தறையைச் சேர்ந்த பி.வை.துடாவை, அரசாங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பிரதி கல்வி அமைச்சராக இருந்தார். பிரதமர் சிறிமாவோ உட்பட அரசின் உயர்மட்ட உறுப்பினர்கள் பலர், கார்த்திகேசன் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த சூழல் இருந்தது. கார்த்திகேசன் விரும்பியிருந்தால், ஒரு சிறுமுயற்சி எடுத்திருந்தால் போதும். இந்துக்கல்லூரியிலேயே அதிபராக தொடர்ந்திருக்கலாம். பலர் அவ்வாறு செய்யும்படியும் வலியுறுத்தினார்கள். ஆனால் தனது வாழ்க்கையில் ஒருபோதும் தனக்காக மற்றவர்களிடம் கைநீட்டிப் பழக்கப்படாத, ஒரு உண்மைக் கம்யூனிஸ்ட்டான கார்த்திகேசன் அவ்வாறு செய்யவில்லை. தனது இடமாற்றத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கு அதிபராக சென்று பணியாற்றியதுடன், பின்னர் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கும் அதிபராக இருந்து, இறுதியாக அங்கிருந்தே தனது பாடசாலைக் கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

ஒரு உன்னத கம்யூனிஸ்ட் எப்படி இருப்பான் என்பதை, கார்த்திகேசன் தனது வாழ்நாள் முழுவதும் நிரூபித்தே வந்துள்ளார். அதனால்தான் போலும் யாழ்ப்பாணத்தவர்கள் பலர் கார்த்திகேசனை 'பிழைக்கத் தெரியாத மனிதன்' என 'நற்சான்றிதழ்' வழங்குகிறார்கள்!

# 2. தண்ணீரைப் பிரித்த தமிழன்!

தமிழர்கள் உலகில் தம்மைவிட விஞ்சியவர்கள் யாரும் இல்லை என மார்தட்டுவதில் எப்பொழுதும் பெருமை கொள்பவர்கள். இன்று விஞ்ஞானம் எவ்வளவோ தூரம் முன்னேறி, புதிய புதிய கண்டுபிடிப்புகள் எல்லாம் வந்துவிட்டன. இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் ஏற்பட்ட வசதிகளை எல்லாம் நமது தமிழர்கள் ஒருபுறம் வசதியாக அனுபவித்துக் கொண்டு, மறுபுறம் தமது பழமைவாத பத்தாம் பசலிக் கருத்துகளையும் வலியுறுத்தவும் பின்நிற்பதில்லை. அவர்கள் தமது பெருமையை பறைசாற்றுவதற்கு அடிக்கடி உபயோகிக்கும் ஒரு சொற்றொடர் தான், 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த குடி தமிழன்' என்ற கருத்து. (உலகில் மண் தோன்றுவதற்கு முன்னர், இந்தத் தமிழன் கல்லை மட்டும் வைத்துக் கொண்டு, தன்னந்தனியனாய் இருந்து என்ன செய்தான் என்றோ, அந்தக் காலத்திலும் அவனுக்கு தந்தைகளும், தளபதிகளும், தேசியத் தலைவர்களும் இருந்தார்களோ என்றோ, தயவுசெய்து கேட்டு விடாதீர்கள்)

அதுமாத்திரமல்ல, உலகில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றும் வெளிவரும் போதும், அது ஏற்கெனவே தமிழனின் புராதன வாழ்வில் இருந்ததுதான் என அவன் பெருமை பேசுவான். ஆகாயவிமானம் கண்டு பிடிக்கப்பட்ட போது, அது இராமயண காலத்தில் 'புஸ்பக விமானம்' என்ற வடிவத்தில் இருந்தது என்றும், இதில்தான் இராவணன் சீதையைக் கவர்ந்து வந்தான் எனவும் கூறிப் பெருமை பேசினர். தமிழனின் இந்த தற்பெருமையைக் கிண்டலடிப்பதற்காகத்தான், தமிழகத்தின் மறைந்த மாபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்கள் ஒருமுறை "குரங்கிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என டார்வின் சொன்னதை எமது தமிழனிடம் சொன்னால் என்ன சொல்லுவான் தெரியுமா? 'அந்த முதல் குரங்கும் தமிழ் குரங்கு தான் எனச் சொல்லுவான்" என்று நகைச்சுவையுடன் குறிப்பிட்டார்.

இந்த வரிசையில், தமிழனின் தற்பெருமைக் கண்டுபிடிப்புகளின் ரகத்தை, இன்னொரு நகைச்சுவை வடிவத்தில் கூட்டமொன்றில் பேசும்போது தோழர் கார்த்திகேசன் கூறினார். அவர் இந்த நகைச்சுவையைக் கூறும்போது, வடக்கில் தீண்டாமைக்கெதிரான போராட்டம் உச்சக்கட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ள முடியாது என்பதுடன், தேநீர்க்கடைகளில் உயர் சமூகத்தினருடன் சமதையாக இருந்து தேநீர் அருந்தவும் முடியாது. அவர்களுக்கு என்று கடைக்கு வெளியே, கறள் பிடித்த தகர மூக்குப்பேணி அல்லது பாவித்த வெற்றுச் சோடாப் போத்தல் வைக்கப்பட்டிருக்கும்.

தமிழனின் இந்தத் தண்ணீர்ப் 'பிரிப்பை' நையாண்டி செய்வதற்காக கார்த்திகேசன் சொன்ன கருத்து என்னவென்றால், " நீரைப் பிரித்துத்தான், அணு விஞ்ஞானிகள் பல புதிய கண்டு பிடிப்புகளைச் செய்து, விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டார்கள். ஆனால் அவர்களுக்கு முன்னரே தமிழன் தனது பாணியில் தண்ணீரைப் பிரித்து சாதனை படைத்திருக்கிறான், அதாவது வெளிப்பேணி, உள்பேணி'' எனக் கூறினார்.

❋

# 3. வெள்ளைக்காரன் பூசிய சேறு

'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்'' என ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட பிரித்தானியா நமது இலங்கையை சுமார் 250 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது காலனித்துவப் பிடியில் வைத்திருந்ததை பலரும் அறிவர். நாம் மட்டுமல்ல, இந்தியா உட்பட பல தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளும் பிரித்தானிய ஆதிக்கப் பிடியிலேயே நீண்ட காலம் இருந்து, பல போராட்டங்களின் பின்னரே சுதந்திரத்தைப் பெற்றன.

பிரித்தானியர் தாம் கைப்பற்றிய நாடுகளை சுலபமாக ஆட்சி செய்வதற்காக, அந்தந்த நாடுகளிலிருந்த நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படுவதே வழமை. அவ்வாறு தமக்கு ஆதரவாகச் செயற்படும் உள்ளூர் பிரமுகர்களுக்கு, பிரித்தானியாவில் நடைமுறையிலுள்ள 'சேர்' (SIR) பட்டம் வழங்கும் நடைமுறையை அவர்கள் பின்பற்றினர். அவ்வாறு சேர் பட்டம் பெற்றவர்கள் அதை ஒரு வாழ் நாள் கொடையாகவும், பெருமையாகவும் இறுமாப்புக் கொண்டு வாழ்ந்தனர். சேர். பொன்.இராமநாதன் போன்றவர்கள் அவ்வாறானவர்களில் சிலர். இத்தகையவர்களது 'சேவையை' எடுத்து நோக்கினால், அவர்கள் ஒருபக்கத்தில் உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்கும், மறுபக்கத்தில் அந்நிய எஜமானர்களுக்கும் தம் வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றியது தெரிய வரும்.

எனவே, இப்படியானவர்களுக்கு வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் 'சேர்' பட்டம் வழங்குவது, நாய்களுக்கு அவற்றை வளர்ப்பவன் ஒரு செல்லப் பெயர் வைப்பது போன்றதுதானேயொழிய, அது பெருமைக்குரிய ஒன்றல்ல என கார்த்திகேசன் கூறுவார். அவர் கூறுவார், ''இன்னும் சொல்லப் போனால், வெள்ளைக்காரன் செய்வது, நம்மவர்களுக்கு 'சேர்' பட்டம் வழங்குவது அல்ல, உண்மையில் அவன் அவர்களுக்கு 'சேறு' பூசி, நீ எனது அடிமை என முத்திரை குத்துகிறான்'' என்பார்.

*

# 4. கதியால் குத்தும் கத்தியால் குத்தும்

யாழ்ப்பாணத்தில் காணி எல்லைச் சண்டைகள் வெகு பிரபலம். கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் அதன் வீச்சு மிகவும் அதிகமாக இருந்தது எனலாம். கடந்த 35 வருடங்களாக நடந்த தமிழீழப் போராட்டத்திலும் கூட, சிங்களவருடனான எல்லைச் சண்டை பற்றியும், வவுனியாவில் எல்லைக்கதியால் போடுவது குறித்தும் பேசப்பட்டு வந்ததை நாம் அறிவோம். இந்த காணி எல்லைச் சண்டைகள் பெரும்பாலும் பெற்றோர் மற்றும் சகோதரர்கள் என நெருங்கிய உறவினர்களுக்கிடையில் நடைபெறுவதுடன், அவற்றில் சில கொலைகளில் கூட முடிந்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் அநேகமான காணிகளுக்கு முள் கிளுவை, பால் கிளுவை, சீமைக்கிளுவை, பூவரசு, முள்முருக்கு, வாதநாராணி போன்ற மரங்களிலிருந்து வெட்டப்படும் தடிகளைக் கதியால்களாகக் கொண்டே எல்லை வேலிகள் போடப்படுவது வழமை. இந்தக் கதியால்கள் போடப்படும் போதே, அருகருகாக உள்ள காணிக்காரருக்கிடையில் எல்லைச்சண்டை களும் ஆரம்பமாகிவிடும். யாழ்ப்பாணத்தின் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது, அங்கு பலருக்கு (குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள்) சொந்தக்காணி இல்லாதிருப்பதுடன், காணி வைத்திருப்பவர்களும் கூட, மிகக் குறைவாக ஒரு சில பரப்புக் காணிகளே வைத்திருப்பர். எனவே எல்லை போடும்போது, அருகிலிருப்பவரின் காணியை அரை அங்குலம் ஒரு அங்குலம் என தமதாக்கிக் கொள்ள முனைவர்.

எனவே ஒருவர் எல்லைக்கதியால் போட்டால், மற்றக் காணிக்காரர், முன்னையவர் தனது காணியை அபகரித்துவிட்டார் எனக் கூறிக்கொண்டு, அவர் போட்ட கதியாலை மறுபக்கம் தள்ளி விடுவார். பின்னர், முதல் கதியால் போட்டவர் வந்து பார்த்துவிட்டு, தனது கதியாலை மீண்டும் மறுபக்கம் தள்ளி விடுவார். பின்னர் மற்றக் காணிக்காரர் வந்து மீண்டும் மறுபக்கம் தள்ளி விடுவார். இவ்வாறு மாறி மாறி கதியால் தள்ளும் வேலை தொடரும். இதை கார்த்திகேசன் மாஸ்டர் நகைச்சுவையாக 'கியர்' போடும் வேலை என வர்ணிப்பார். அதாவது வாகனங்களுக்கு முதல் கியர், இரண்டாம் கியர், மூன்றாம் கியர் போடுவது போல இங்கும்

நடைபெறுவதால், அவர் இவர்கள் இருவருடைய வேலையையும், மாறி மாறிக் கியர் போடுகிறார்கள் என வர்ணிப்பார்.

இந்த கியர் போடும் வேலை ஒருபக்கம் நடந்து கொண்டிருக்க, மறுபக்கத்தில் காணி எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக இருவரும் நீதிமன்றம் சென்று வழக்காடவும் தொடங்குவார்கள். இந்த இடத்தில் தமிழரசுக்கட்சி தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரபலமான சிவில் அப்புக்காத்து (Civil Advocate) என்றபடியால், பலர் அவரை நாடிச் செல்வார்கள். ஆனால் காணி வழக்குகள் விரைவில் தீர்த்து வைக்கப்படுவதில்லை. பல ஆண்டுகள் இழுபடும். இந்தக் காணி வழக்குச் செலவுகளுக்காக இருதரப்பினரும் தமது வேறு காணிகளை விற்று வழக்காடுவர். ஆனால் வழக்கு முடிவடைவதற்கிடையில், இரு தரப்பினருக்கும் இடையிலான 'கதியால் குத்து', வன்முறை வடிவமெடுத்து, கத்தியால் குத்துப்படும் அளவுக்குச் சென்று 'கத்தியால் குத்தாக' மாறிவிடும்.

கதியால் குத்து, கத்தியால் குத்தாக மாறிய பின்னர், காணி சம்பந்தமாக சிவில் வழக்குடன், கிரிமினல் (Criminal) வழக்கொன்றுக்கும் அவர்கள் செல்லவேண்டி வந்துவிடும். கிரிமினல் வழக்கு என்று வரும் போது, தமிழர்களிலேயே மிகவும் பிரபலமானவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தான். எனவே அவரை எப்படியும் தமது சார்பில் வாதாட பிடித்துவிட வேண்டும் என இரு தரப்பும் ஓடித்திரிவர். இறுதியில் யாரோ ஒரு தரப்பு அவரைப் பிடித்துவிடும்.

இவ்வாறு காணி எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக ஒருபுறம் சிவில் வழக்கும், மறுபுறம் கிரிமினல் வழக்கும் நீண்டகாலம் இழுபட்டுச் செல்லும். இறுதியில் எந்தக் காணிக்காக நெருங்கிய உறவினர்கள் இருவர் சண்டை பிடித்தனரோ, அந்தக்காணி பல வருடங்கள் கழித்து இருவரில் ஒரு தரப்புக்குச் சாதகமாக தீரும்போது, வழக்காடிய இருவருமே வழக்குச் சம்பந்தமான செலவுகளால் நிரந்தரக் கடனாளிகளாகி இருப்பர். எனவே காணி கிடைத்தவரும் தனது கடனை அடைப்பதற்காக அந்தக் காணியை விற்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்.

இந்த விடயம் வெறுமனே நகைச்சுவைக்குரியது மட்டுமல்ல. இது ஒருபுறத்தில் யதார்த்தத்தில் நடைபெற்று வந்தது மட்டுமின்றி, தமிழரசு – காங்கிரஸ் தலைவர்களின் அரசியல் மற்றும் தனிப்பட்ட கபட நாடகங்களையும் அம்பலப்படுத்தக் கூடியது என்ற வகையிலேயே, கார்த்திகேசன் பல இடங்களில் இதை நகைச்சுவையுடன் கூடிய ஒன்றாக எடுத்துக் கையாண்டார்.

# 5. முருகக் கடவுளின் மூன்று கோலங்கள்

**வ**டபகுதியைப் பொறுத்தவரை, தமிழ் மக்களின் பிரசித்தி பெற்ற முருகக் கடவுளுக்கு மூன்று முக்கியமான ஆலயங்கள் உள்ளன. அவையாவன – நல்லூர் கந்தசாமி கோவில், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் என்பனவாகும்.

இவற்றில் நல்லூர் கந்தசாமி கோவில் தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டுக்காக நீண்டகாலத்துக்கு முன்னரே திறந்துவிடப்பட்டுவிட்டது. அதன் பின்னர் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் திறந்துவிடப்பட்டது. ஆனால் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மிக நீண்டகாலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் திறந்துவிடப்படாமல் இருந்து வந்தது.

எனவே மாவிட்டபுரம் கோவிலைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் திறந்துவிட வைப்பதற்கான போராட்டம் ஒன்றை, புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது வெகுஜன அமைப்பான 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின்' மூலம் 1960களின் நடுப்பகுதியில் ஆரம்பித்து நடாத்தியது. தீவிரமான சாதி வெறியரான இந்தக் கோவிலின் பிரதம பூசகர் துரைச்சாமி குருக்கள் மற்றும் முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழக் கோரிக்கையை ஆரம்பம் முதலே கிளப்பி வந்தவரும், சாதி வெறியருமான சி.சுந்தரலிங்கம் ஆகியோர் தலைமையில் ஒன்று திரண்ட வட பகுதி சாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மாவிட்டபுரம் கோவிலுக்குள் நுழைந்து விடாதவாறு, வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு தடுத்து வந்தனர். ஆனாலும் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான தலைமைத்துவத்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் விடாப்பிடியான போராட்டத்தாலும், 1969ல் அப்போராட்டம் வெற்றியீட்டியது.

அக்காலகட்டத்தில், புரட்சிகர கம்யூனிஸ்ட் கடசியின் வட பிரதேசக்குழுவின் முக்கிய தலைமைக்குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்த கார்த்திகேசன், இப்போராட்டத்தை வழி நடாத்துவதில் முக்கிய பங்களிப்புகளை வழங்கினார். அதேநேரத்தில், இந்தப் போராட்டம் குறித்து மார்க்சிய அடிப்படையில், நகைச்சுவை கலந்த கருத்துக்களையும் முன்வைத்து வந்தார்.

மார்க்சிய கோட்பாட்டின் படி, சமுதாய வளர்ச்சிப் படிகளை எடுத்து நோக்குகையில், புராதன காலத்து அடிமை முறையைவிட, அதற்குப் பின்வந்த நிலப்பிரபுத்துவ முறை மேம்பட்டதாகவும், நிலப்பிரபுத்துவத்தைவிட, அடுத்து வந்த முதலாளித்துவ அமைப்புமுறை மேம்பட்டதாகவும், அதற்கு அடுத்ததாக அமைந்த தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான சோசலிச அமைப்புமுறை, முதலாளித்துவ முறையை விட மேலும் மேம்பட்டதாகவும், முற்போக்கானதாகவும் இருக்கும் என்பதே மார்க்சியத்தின் அரிச்சுவடிப் பாடமாகும்.

இதற்கு உதாரணமாக, தோழர் கார்த்திகேசன் இந்த மூன்று கோவில்களின் ஆலய நுழைவுப் போராட்டங்களையும் குறிப்பிடுவார். 'யாழ்ப்பாண நகரின் முதலாளித்துவ சக்திகளின் பிடியில் இருந்த நல்லூர் முருகனுக்கு, சாதியத்தைக் கட்டிக்காப்பதை விட பொருளீட்டுவதே முக்கியமாக இருந்ததினால், அவரது கோவில் நேரகாலத்துடனேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்பட்டது' என கார்த்திகேசன் கூறுவார்.

அதேபோல, 'தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் கிராமப்புறத்தில் ஏழை எளிய மக்கள் மத்தியில் அமைந்திருந்த தினாலும், ஆகம முறைப்படி அல்லாது இந்தக் கோவிலில் மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்களே பூசை செய்து வருவதாலும், அந்த முருகனின் வழிபாடும் பரந்த மனதுடன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நேரகாலத்தோடேயே திறந்துவிடப்பட்டது' என்பார் கார்த்திகேசன்.

'ஆனால் மாவிட்டபுரக் கந்தனைப் பொறுத்த வரை, அது அதைச் சுற்றிவர உள்ள தடித்த நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால், அந்தக் கோவில் நீண்டகாலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடப்படாமல் இருந்ததுடன், இறுதியில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடியே அதை திறக்க வைக்க முடிந்தது' எனவும். கார்த்திகேசன் கூறுவார்.

முருகக் கடவுள், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒருவரே என்றாலும், தமிழ் மக்கள் மத்தியில் இருந்த வெவ்வேறு வர்க்க சக்திகள் கடவுளைக்கூட, தமது தேவைகளுக்கு ஏற்ப பிரித்து வைத்திருந்தனர் என தோழர் கார்த்திகேசன் இதற்கு விளக்கம் கூறுவார். இதை அவர் நகைச்சுவை கலந்த அர்த்தபுஸ்டியுடன் இப்படிக் கூறுவார்: "நல்லூர் முருகன் முதலாளித்துவ முருகன், சந்நிதி முருகன் ஏழைகளின் முருகன், மாவிட்டபுர முருகன் நிலப்பிரபுத்துவ முருகன்."

# 6. கார்த்திகேசனின் வாழ்க்கையில் மறக்க முடியாத மூன்று 'P'க்கள்

**கா**ர்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக வேலை செய்ய யாழ்ப்பாணம் சென்ற ஆரம்பகாலத்தில்(1944), தான் பின்பற்றிய வாழ்க்கைமுறை, தனது பழக்க வழக்கங்கள் பற்றி, பிற்காலத்தில் நகைச்சுவையாகக் கூறுவதுண்டு. அதில் மூன்று 'P'க்கள் பற்றி அடிக்கடி கூறுவார்.

அதில் ஒன்று சிகரெட் பற்றியது. பிற்காலத்தில் அவர் இறக்கும் வரை புகையிலைச் சுருட்டுப் புகைத்து வந்தார் என்பது அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். ஆனால் ஆரம்ப காலத்தில் அவர் 'வெண்சுருட்டு' என யாழ்ப்பாணத்தாரால் சிலேடையாகக் குறிப்பிடப்பட்டு வந்த, சிகரெட்டையே விரும்பிப் புகைத்தார். அதிலும் அந்தக் காலத்தில் மிகவும் பிரபல்யமாக இருந்த 'Peacock" சிகரெட்டையே (அதன் விலை அப்பொழுது வெறுமனே 2 சதம் மட்டுமே) அவர் புகைத்து வந்தார். அதையே அவர் தனது 'P'க்களில் ஒன்று என வர்ணிப்பார்.

இரண்டாவது 'P' என வர்ணிப்பது, 'பொடி நடை' (Podi Nadai) யையே. ஆரம்ப காலத்தில் சைக்கிள் என்று அழைக்கப்படும் துவிச்சக்கர வண்டி கூட பணம் படைத்த சிலரிடம் மட்டுமே சொந்தமாக இருந்தது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்ந்த சாதாரண மக்கள் பல மைல்கள் தூரத்தை நடந்து சென்றே தமது கடமைகளை மேற்கொண்டனர். எனவே கார்த்திகேசன் போன்ற கம்யூனிஸ்ட்டுகளும், அந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கால்நடையாகச் சென்றே, தமது கட்சி வேலைகளை மேற்கொண்டனர். அதையே தோழர் கார்த்திகேசன் தனது மூன்று 'P'க்களில் ஒன்றாக வர்ணிப்பார்.

கார்த்திகேசனின் மூன்றாவது 'P' என்பது 'Plain Tea' (வெறும் தேநீர்) ஆகும். கார்த்திகேசனினதும், அந்தக் காலத்தில் அர்ப்பணிப்புடன் கட்சி

வேலை செய்த பெரும்பாலான கட்சித் தோழர்களினதும், ஒரு நேரச் சாப்பாடாகத் திகழ்ந்தது பெரும்பாலும் வெறும் தேநீர் மட்டுமே. கார்த்திகேசனைப் பொறுத்தவரை தனது கடைசிக் காலம் வரை, இந்த வெறும் தேநீர் பழக்கத்தை அவர் விட்டுவிடவே இல்லை.

அந்த வகையில் பார்க்கையில், 'Peacock, 'Podi Nadai', 'Plain Tea' - இந்த மூன்றுமே கார்த்திகேசனின் அந்க் காலத்துத் தாரக மந்திரங்கள் என்று கூறலாம்.

❊

# 7. நற்போக்கு இலக்கியமல்ல அது, 'இடைப்போக்கு' இலக்கியம்!

எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) நாடறிந்த தமிழ் எழுத்தாளர். அவர் வடக்கில் மு.கார்த்திகேசனுடன் இணைந்து கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவர், சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவராகவும் திகழ்ந்த, எம்.சி. சுப்பிரமணியம் அவர்களின் மைத்துனர் (மனைவியின் சகோதரர்) ஆவார்.

எஸ்.பொ. ஆரம்ப காலங்களில் கம்யூனிஸ்ட் கட்சியினதும், அதன் பின்னணியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினதும் செயற்பாடுகளில் பங்கெடுத்துக் கொண்டாராயினும், பின்னர் அவர் முன்வைத்து வந்த கருத்துக்கள் மற்றும் நடைமுறைகள் காரணமாக, முரண்பாடு ஏற்பட்டு அவற்றிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். எஸ்.பொ. கம்யூனிஸ்ட் கட்சியின் தவறுகளை விமர்ச்சிப்பதாகப் புறப்பட்டு, இறுதியில் கம்யூனிசத்தையே நிராகரித்து, அதற்கு விரோதமாக மாறிச் செயல்படத் தொடங்கினார்.

இலக்கியத்துறையைப் பொறுத்தவரை, பிற்போக்கு இலக்கியங்களுக் கெதிராக, முற்போக்கு எழுத்தாளர்கள் முன்னிறுத்திய 'முற்போக்கு இலக்கியம்' என்ற கருதுகோளையும் எஸ்.பொ ஏற்கவில்லை. இரண்டு போக்குகளுமே தவறு என எஸ்.பொ. விமர்ச்சித்தார். அதற்குப் பதிலாக தனது பாதை 'நற்போக்கு இலக்கியம்' எனப் பிரச்சாரம் செய்தார்.

எஸ்.பொவின் பெரும்பாலான இலக்கியப் படைப்புகள், யதார்த்தவாத இலக்கியங்கள் என்ற தலைப்பில், வக்கிரத்தனமான பாலியல் இலக்கியங்களாக இருப்பதை அவதானித்து வந்த கார்த்திகேசன், 'எஸ்.பொ கூறுவது போல, அவரது இலக்கியங்களை நற்போக்கு இலக்கியங்கள் என்று நாம் அழைப்பதை விட, அவற்றை 'இடைப்போக்கு' வக்கிர பாலியல் இலக்கியம் என்று அழைப்பது மிகப்பொருத்தமாக இருக்கும்' என கூட்டமொன்றில் பேசும்போது அர்த்தபுஸ்டியுள்ள நகைச்சுவையுடன் கூறினார்.

❊

# 8. காங்கேசன்துறை சென்று 'கோணர் சீற்' பிடித்த அமிர்தலிங்கம்!

ஒரு காலத்தில் இலங்கை புகையிரத சேவைக்கு அதிக வருமானம் ஈட்டித்தந்த வழித்தடம், கொழும்பு – காங்கேசன்துறை மார்க்கமாகும். அதிவேக சேவை முதல் மெதுவான சேவை வரை, தினசரி சுமார் 6 புகையிரத சேவைகள் அந்த மார்க்கத்தில் நடைபெற்றன. வட பகுதியில் தொழில் வாய்ப்புகள் மிகக் குறைவாக இருந்ததினாலும், உத்தியோகம் புருச லட்சணம் என்ற ஒரு நிலை வடபகுதித் தமிழர்களிடம் ஒரு எழுதப்படாத விதியாக இருந்ததினாலும், வேலை நிமித்தம் கொழும்பு செல்லும் பயணிகளின் தொகை அதிகமாக இருந்ததினால் இந்த நிலை உருவாகி இருந்தது.

இருந்தும் வட பகுதி புகையிரதங்களில் எப்பொழுதும் மக்கள் கூட்டம் அலைமோதிக்கொண்டே இருக்கும். அத்துடன் புகையிரதங்களில் 'கோணர் சீற்' எனப்படும் மூலை இருக்கையைப் பிடிப்பதிலும் பலத்த போட்டி இருக்கும். கோணர் சீற் பிடிப்பதற்காகவும், குறைந்தபட்சம் ஏதாவது ஒரு இருக்கையைத் தன்னும் பிடிப்பதற்காகவும், பாய்ந்து ஓடி, தமது உயிரை இழந்தவர்களும், கை கால்களை இழந்தவர்களும் பலர் உண்டு.

இந்த சூழ்நிலையில், சில 'விண்ணர்கள்' இருக்கை பிடிப்பதற்கு வேறு சில வழிவகைகளை நாடுவதும் உண்டு. அதாவது யாழ்ப்பாணம், கொடிகாமம் புகையிரத நிலையங்களில் கூட்டம் எப்பொழுதும் அதிகமாக இருப்பதால், யாழ்ப்பாணத்தையும், வடமராட்சியையும் சேர்ந்த பயணிகள் பலர், சுலபமாக இருக்கைகள் பிடிப்பதற்காக, புகையிரதம் பயணத்தை ஆரம்பிக்கும் காங்கேசன்துறைக்கே சென்று, ஆசனம் பிடித்து வருவது உண்டு.

தமிழர்கள் சிலரின் இந்த யுக்தியை, கார்த்திகேசன் ஒருமுறை, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் நடவடிக்கையுடன் ஒப்பிட்டு நகைச்சுவையுடன் பேசினார்.

1970 பொதுத்தேர்தலில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் பெருந்தலைகளான அ.அமிர்தலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், மு.சிவசிதம்பரம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகியோர் தோற்றுப் போயினர். அதற்குப் பிரதான காரணம், இவ்விரு கட்சிகளும் வடபகுதியில் நடந்த தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களின் போது, சாதி வெறியர்களின் பக்கம் நின்றமையும், அதே காலகட்டத்தில் ஆட்சியிலிருந்த மக்கள் விரோத ஐ.தே.க அரசாங்கத்தில் பங்காளிக் கட்சிகளாக இருந்தமையும் ஆகும். தனது சொந்த ஊரான பண்ணாகம் அமைந்திருந்த வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுலபமாக வெற்றியீட்டி வந்த அ.அமிர்தலிங்கம், அடுத்த (1977) பொதுத்தேர்தலிலும் தான் அந்தத் தொகுதியில் போட்டியிட்டால் தோற்றுவிடுவோமோ என்ற அச்சத்தில் இருந்தார். அவரது அதிஸ்டமோ என்னமோ, 1976ல் காங்கேசன்துறைமுகத் தொகுதியைப் பல வருடங்களாகப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த, ‘தந்தை’ செல்வநாயகம் இறந்து போனார்.

‘தந்தை’யின் மரணம், மைந்தன் அமிர்தலிங்கத்துக்கு ஒரு வரப்பிரசாமாக அமைந்துவிட்டது. அவர் உடனும் காங்கேசன்துறை தொகுதிக்கு ஓடோடிச்சென்று, அநேக தமிழர்கள் புகையிரத ஆசனம் பிடித்த பாணியில், தானும் காங்கேசன்துறையில் உத்தரவாதமான ஒரு ஆசனத்தைப் பிடித்துக் கொண்டார். அதன் மூலம் பாராளுமன்றம் என்ற புருஸனை இழந்த விதவைக்கோலம் நீங்கி, 1977ல் நடந்த பொதுத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று, புது மாப்பிள்ளையாக பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்தார்.

கார்த்திகேசன் கூறிய இந்த ஒப்புவமை, அன்றைய காலகட்டத்தில் பலராலும் மிகவும் விரும்பி ரசிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது.

# 9. செல்வம் அங்கே! நாயகம் இங்கே!!

**வ**டபகுதியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் ஊர்வலங்களில் அடிக்கடி 'செல்வம் அங்கே – நாயகம் இங்கே' என்ற ஒரு சுலோகம் ஓங்கி ஒலித்து வந்ததைப் பலரும் அவதானித்து வந்திருப்பர். இந்த சுலோகத்தை உருவாக்கி வழங்கியவர் வேறு யாருமல்ல. நமது கார்த்திகேசன் அவர்களே.

அந்தக்காலத்தில் பிரபலமான தமிழ் தலைவர்களாக இருந்த, தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இருவரும், எப்பொழுதும் தலைநகர் கொழும்பு வாசிகளாகவே இருந்து வந்தனர். தேர்தல் நடைபெறும் நேரங்களில் மட்டும் 5 வருடங்களுக்கு ஒருமுறை வடபகுதிக்கு வந்து, இன – மொழி கோஸங்களை முழங்கி, தமிழ் மக்களை உசுப்பேத்தி, அவர்களது வாக்குகளைப் பெற்று, மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களாகி, கொழும்பு சென்று விடுவார்கள்.

அவர்களது வாழ்க்கை மட்டுமல்ல, அவர்களது பெருமளவிலான சொத்துகள், அவர்களது அப்புக்காத்து தொழில் என்பனவும், கொழும்பை மையப்படுத்தியே அமைக்கப்பட்டிருந்தன. மலையகத்தில் பெட்டியாகல என்ற இடத்தில் செல்வநாயகத்துக்கு தேயிலைத்தோட்டம் ஒன்று சொந்தமாக இருந்தது. (தமிழ்த் தலைவரான இவரது தோட்டத்தில், தமிழில் நிர்வாகம் நடாத்தப்பட வேண்டும் என ஒருமுறை தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்த சுவாரசியமான சம்பவமும் நடந்தது இங்கு குறிப்பிடத்தக்கது) அதேபோல பொன்னம்பலத்துக்கு லப்புகம பகுதியில் 'ஸ்ரீநிவாச எஸ்டேட்' என்ற பெயரில் ரப்பர் தோட்டம் ஒன்று சொந்தமாக அமைந்திருந்தது.

இந்த இரு தலைவர்களும், தமது சொத்துகளைப் பாதுகாப்பாக தென்னிலங்கையில் வைத்துக்கொண்டு, உயர்வர்க்க சிங்கள அரசியல் தலைவர்களுடன் நெருங்கிய நட்புறவையும் பேணிக்கொண்டு, வடக்கில்

வந்து சாதாரண சிங்கள மக்களுக்கு எதிராக, தமிழ் மக்கள் மத்தியில் இனவாதம் பேசி, தமது அரசியல் தலைமைத்துவத்தை தந்திரமாக அங்கு நிலைநாட்டி வந்தனர்.

தமிழ் தலைவர்களின் இந்த இரட்டை வேட நிலையை சிலேடையாகவும், எளிமையாகவும் மக்களுக்கு விளக்குவதற்காகவே, தோழர் கார்த்திகேசன், செல்வநாயகத்தின் பெயரை, 'செல்வம்' - 'நாயகம்' என்ற இரண்டு பகுதிகளாகப் பிரித்து, 'செல்வம் அங்கே' (அதாவது சொத்துகள் தெற்கில்), 'நாயகம் இங்கே' (அதாவது தலைமை வடக்கில்) என்று நகைச்சுவையுடன் கூறினார்.

# 10. நான் போகமுடியாத இடத்துக்குச் சென்ற எனது பாதணிகள்!

1977 பொதுத்தேர்தலில், இலங்கை அரசியலில் 'குள்ளநரி' என்றும், ஏகாதிபத்திய விசுவாசம் காரணமாக 'அமெரிக்க யங்கி டிக்கி' என்றும் 'புகழ்' பெற்றிருந்த, ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி, ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. அவர் ஆட்சிக்கு வந்த காலத்தில், தமிழ் தலைமைகளினால், முன்னைய சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட மறுப்புப் போராட்டங்கள் உச்ச கட்டத்தை அடைந்திருந்தன.

இயல்பாகவே, எப்பொழுதும் தமிழர் விரோத நிலைப்பாட்டைப் பின்பற்றி வந்த ஜே.ஆர்., தனது ஆட்சிக்காலத்திலும் இந்த நிலைமை தொடரக்கூடாது என எண்ணி, அதை முளையிலேயே கிள்ளிவிடத் தீர்மானித்தார். எனவே தமிழர்களைப் பார்த்து, "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று சவால் விட்டு முழங்கிவிட்டு, தலைநகர் கொழும்பிலும், தென்னிலங்கையின் இதர பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான பாரியளவிலான இன வன்முறையைத் தூண்டிவிட்டார். அதனால் பல தமிழர்கள் தமது உயிர்களை இழந்ததுடன், கோடிக்கணக்கான பெறுமாதியான சொத்துக்களையும் இழந்தனர்.

இந்த வன்செயல் நடந்த காலப்பகுதியில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)யின் செயலாளர் குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்த தோழர் மு.கார்த்திகேசன், கட்சிப் பணிகள் காரணமாக கொழும்பில் தங்கியிருந்துவிட்டு, இரவுத் தபால் புகையிரதம் மூலம் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் பிரயாணம் செய்த புகையிரதம், அனுராதபுரம் நிலையத்தை நள்ளிரவு அடைந்த போது, ஐ.தே.க. காடையர்களினால் அது தாக்கப்பட்டது. தமிழ்ப் பயணிகள்

மோசமாகத் தாக்கப்பட்டதுடன், அவர்களது சொத்துகளும் சூறையாடப்பட்டன.

இந்த வண்டியில் பிரயாணம் செய்த கார்த்திகேசன் தாக்கப்படவில்லையாயினும், அவர் அணிந்து வந்த பாதணிகளை யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள். பாதணிகளை இழந்த கார்த்திகேசன், வெறும் காலுடன் அடுத்த நாள் காலை தனது வீடு வந்து சேர்ந்தார்.

அவரது வருகையை அறிந்த இந்த நூலின் தொகுப்பாளரும், விசவமடுவிலிருந்து வந்த விவசாயத் தோழர் ஒருவரும், தோழர் கார்த்திகேசனை அவரது வட்டுக்கோட்டை வீட்டில் சென்று சந்தித்தோம். அவரது பிரயாண அனுபவங்களை விளக்கிய தோழர் கார்த்திகேசன், வழமையான நகைச்சுவையுடன், "பரவாயில்லை இன்று தென்னிலங்கைப் பகுதிகளுக்கு நாம் செல்லக்கூடிய சூழல் இல்லை. ஆனால் நான் போகமுடியாத இடத்துக்கு எனது காலணிகளாவது போக முடிந்தது பெரும் பாக்கியம். இராமாயணம் உட்பட பல பண்டைய இதிகாசங்களில், இந்தக் காலணிகள் மனிதர்களை விட பெரும் பெரும் காரியங்களைச் சாதித்திருக்கின்றன" எனக் கூறி, எம்மையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார்.

ஐ.தே.க அரசால் உருவாக்கப்பட்ட தமிழர் விரோத இன வன்செயல் பற்றிக் குறிப்பிட்டு மிகவும் மனம் வருந்திய கார்த்திகேசன், ஏகப்பெரும்பான்மையான தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இன ஒற்றுமையையே விரும்புகிறார்கள் என்றும், எனவே பிற்போக்கு சக்திகளின் சதி நடவடிக்கைகளை நாம் முறியடித்து, மக்களை ஐக்கியப்படுத்த வேண்டும் எனவும், மிகவும் நம்பிக்கையுடன் குறிப்பிட்டார்.

# 11. பெண்களும் தோசையும்

**ச**முதாய விடயங்களில் பெண்களின் சமத்துவமான பங்களிப்புக் குறித்து தோழர் கார்த்திகேசன் எப்பொழுதும் அதீத அக்கறை கொண்டிருந்தார். பெண்களால் அனைத்துத் துறைகளிலும், ஆண்களைப் போல சரிநிகர் சமானமாக செயலாற்ற முடியும் என அவர் உறுதியாக நம்பினார். எனவே பெண்களுக்கு ஒவ்வொரு வேலைகளிலும் சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என அவர் அடிக்கடி வலியுறுத்துவார்.

பெண்களின் பங்களிப்பு இல்லாமல் எந்தவொரு விடயமும் பூரணத்துவம் அடையாது என்பதை விளக்க, அவர் அடிக்கடி ஒரு உதாரணத்தைக் கூறுவதுண்டு.

அதாவது, தமிழர்களின் விருப்பத்துக்குரிய விசேட உணவு வகைகளில் ஒன்று தோசை. இந்தத் தோசையை தோசைக்கல்லில் வார்த்துச் சுடும்போது, முதலில் ஒரு பக்கம் வெந்தபின், பின்னர் மறுபக்கத்தைப் புரட்டிவிட்டு வேக வைப்பார்கள். அவ்வாறு இரு பக்கத்தையும் வேக வைத்தால் தான், அது ருசித்து உண்ணக்கூடிய பதத்தை அடையும்.

அதுபோலத்தான் எந்தவொரு விடயத்திலும், ஆண்களின் பங்களிப்பு என்ற ஒருபக்கம் மட்டும் வெந்தால் போதாது, பெண்களின் பங்களிப்பு என்ற மறுபக்கமும் வேக வேண்டும் என கார்த்திகேசன் கூறுவார்.

இன்னொரு விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டுவதுண்டு. அதாவது வீட்டிலும் சரி, பொது வைபவங்களிலும் சரி, பெண்களே பெரும்பாலும் சமையல் வேலை செய்வதுண்டு. ஆனால் ஆண்கள் உணவருந்திய பின்னரே பெண்கள் உணவருந்தும் வழமை தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. இந்த நிலைமையும் மாற்றப்பட்டு, ஆண்களும் பெண்களும் ஒன்றாக அமர்ந்திருந்து, மகிழ்ச்சியுடன் உணவருந்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்திக் கூறுவார்.

❋

# 12. குறள் கண்ட தமிழனுக்கு கறள் கண்ட பேணியா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த 'திருக்குறள்' என்ற அறநெறிப் பாக்களை தமிழினம் கொண்டுள்ளது எனப் பெருமை பேசுவதில், தமிழன் என்றும் பின்நின்றதில்லை. இதற்காக திருக்குறளை இயற்றிய வள்ளுவனுக்கு விழாக்களும், திருக்குறள் மாநாடுகளும் எடுப்பதற்கும் அவன் என்றும் பின் நின்றதில்லை.

ஆனால் திருக்குறள் சுட்டிய அறநெறிக்கொப்ப தமிழன் வாழ்கிறானா என ஆராயப் புகுந்தால், அங்கேதான் பிரச்சினையே ஆரம்பமாகும்.

"கற்க கசடற, கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்று வள்ளுவன் சொன்னதற்கு மாறாக,

"கற்க கசடற, கற்ற பின் நிற்க அதற்குத் தலைகீழாக" என்ற புதுக்குறளின்படி தான், நமது இன்றைய தமிழன் வாழ்கிறான் என்று சொன்னால் அது மிகையாகாது.

இலங்கையின் வடபகுதியான, யாழ்ப்பாணத்தானின் பூமியில், இன்றுவரை கோலோச்சி வரும் சாதியமைப்பு முறை பற்றி அனைவரும் அறிவர். இன்றும் கோலோச்சுகிறது என்னும் போது, அன்றைய காலகட்டத்தில் அது எப்படி கொடுங்கோலோச்சி இருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. முன்பெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள், உயர் சமூகத்தினர் போல் கோவில்களுக்குள் சென்று இறைவனை வழிபட முடியாது. தேநீர்க்கடைகளில் உள்ளே சென்று ஆசனங்களில் உயர் சமூகத்தினருடன் சமதையாக அமர்ந்து தேநீர் அருந்த முடியாது. பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ள முடியாது. தேநீர்க் கடைகளில் உயர் சமூகத்தினருக்கு உள் பேணி என்றும் (அது பித்தளையில் செய்யப்பட்டதாக இருக்கும்), தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வெளிப்பேணி (அது தகரத்தில்

செய்யப்பட்டதாகவும், கறள் பிடித்ததாகவும் இருக்கும்) என்றும் வைக்கப்பட்டிருக்கும்.

சாதியமைப்பை உடனடியாக ஒழித்துக்கட்ட முடியாதுவிட்டாலும், அதனால் எழுந்த தீண்டாமையைத் தன்னும் ஒழித்துவிட, தாழ்த்தப்பட்ட மக்களின் பல்வேறு இயக்கங்கள் முயன்றும்கூட, அது முடியாமல் போய்விட்டது. ஆனால் தோழர் மு.கார்த்திகேசன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்த கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகரப் பிரிவு (கம்யூனிஸ்ட் கட்சி சித்தாந்த மோதல்களால் 1963ம் ஆண்டுக்குப் பின்னர் சோவியத் சார்பு, சீன சார்பு என இரண்டு பிரிவுகளாக இயங்கியதினால், கார்த்திகேசன் அங்கம் வகித்த சீன சார்புப் பிரிவு இங்கு புரட்சிகரப் பிரிவு எனக் குறிப்பிடப்படுகிறது) 1960களின் நடுப்பகுதியில் ஆரம்பித்த தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டம் காரணமாக இன்று அந்த நிலைமை பெரும்பாலும் ஒழிக்கப்பட்டுவிட்டது.

தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள் உக்கிரமாக நடந்த அக்காலகட்டத்தில், அன்று இருந்த உள்பேணி, வெளிப்பேணி என்ற வேறுபாட்டை நையாண்டி செய்யவே கார்த்திகேசன், "குறள் கண்ட தமிழனுக்கு கறள் கண்ட பேணியா?" என கிண்டலாகக் கேள்வி எழுப்பினார்.

இந்த கோசம் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள் உச்சக்கட்டத்தில் இருந்த போது, நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் ஓங்கி ஒலித்த ஒன்றாக இருந்ததுடன், மக்களுடைய கவனத்தையும் பெரிதும் ஈர்த்தது.

❋

# 13. 'மா'(குதிரை) விட்ட புரத்தில் மனிதனை விட்டால் என்ன?

**வ**டபகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப்பிரவேசப் போராட்டங்களில், 1960களின் நடுப்பகுதியில் ஆரம்பித்து, சுமார் 3 வருடங்கள் வரை நடைபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலய நுழைவுப் போராட்டமே, மிக நீண்டதும், பிரசித்தி பெற்ற ஒன்றுமாகும். இந்தப் போராட்டத்தை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' என்ற அமைப்பு தலைமைதாங்கி நடாத்தி வந்தது.

மாவிட்டபுரக் கோவிலின் பிரதான பூசகரான துரைச்சாமி குருக்களும், முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர்களுக்கென்று ஆரம்ப காலத்திலேயே தனிநாடு கோரி, 'அடங்காத் தமிழர் இயக்கம்' என்ற அமைப்பை உருவாக்கியவருமான சி.சுந்தரலிங்கம் தலைமையில் சாதி வெறியர்கள் திரண்டு நின்று, தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேசப் போராட்டத்தை மூர்க்கமாக எதிர்த்ததாலேயே, இப்போராட்டம் நீண்டகாலம் நடைபெற வேண்டிய சூழல் உருவானது.

இப்போராட்டத்தின் போது, சம காலத்திலேயே, பல்வேறு பகுதிகளில் தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்ங்களையும், பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளும் போராட்டங்களையும் வெகுஜன இயக்கம் நடாத்தி வந்தது. இப்போராட்டங்களுக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் கட்சியும், வெகுஜன இயக்கமும் பல ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும், பொதுக் கூட்டங்களையும் வடபகுதியெங்கும் நடாத்தியது.

போராட்டத்தின் பொது சுலோகமாக 'சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற கோசம் இருந்தது. அதேவேளையில் 'மா (அதாவது குதிரை) விட்ட புரத்தில் மனிதனை விட்டால் என்ன?', 'குறள் கண்ட தமிழனுக்கு கறள் கண்ட பேணியா?', 'போகட்டும் போகட்டும் போத்தலும் பேணியும்', 'துரைச்சாமி ஐயனைத் தூக்கிலிடு' போன்ற கோசங்ககள் கோசிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை கார்த்திகேசனின் சிந்தனையில் உருவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

# 14. ஹோசிமின் இரும்பு – ஜோன்ஸன் துரும்பு

நமது காலத்தில் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களில், வியட்நாம் மக்களின் போராட்டமே உலகப் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். சின்னஞ்சிறிய வியட்நாம் நாட்டின் மக்கள், பென்னம் பெரிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்து வீரஞ்செறிந்த போராட்டம் நடாத்தி (1965 – 1975) வெற்றி பெற்றனர். அதற்கு முன்னர் அவர்கள் 1954ல் சர்வ வல்லமை பொருந்திய பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பையும் வெற்றிகரமாக முறியடித்திருந்தனர்.

வியட்நாமில் அமெரிக்கத் தலையீடு ஜோன் எப் கெனடி அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்திலேயே ஆரம்பித்து விட்டதாயினும், அவர் கொலை செய்யப்பட்ட பின்னர், அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற லின்டன் பி ஜோன்ஸன் காலத்திலேயே உக்கிரமான முழு ஆக்கிரமிப்புப் போராக வடிவெடுத்தது.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான வியட்நாம் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தை, அம்மக்களின் மகத்தான தலைவர் ஹோசிமின் அவர்கள் தலைமையேற்று வழி நடாத்தி வந்தார். வியட்நாம் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும், பல ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகளும், இலங்கை முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் என்பனவற்றை நடாத்தி வந்தன. அந்தக் காலகட்டத்தில், யாழ்ப்பாண பொது நூலகத்தில் தகவல் பிரிவு ஒன்றைத் திறக்க வந்த, கொழும்பிலிருந்த அமெரிக்கத் தூதுவர் அன்றூா வி கொறி என்பவருக்கு யாழ்.இளைஞர்கள் கூழ் முட்டைகளையும், கற்களையும் வீசி ஆர்ப்பாட்டம் செய்து திரும்பிப் போக வைத்த சம்பவமும் நிகழ்ந்தது.

இவையெல்லாம் நடக்கும் போது, தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதாக மார்தட்டித் திரிந்த தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழ் காங்கிரஸ் கட்சியோ, வியட்நாம் மக்களுக்கு ஆதரவாக ஒரு சிறு

அறிக்கையைத் தன்னும் விடுக்கவில்லை. மாறாக 1975ல் தென் வியட்நாம் அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலையாகி, வடக்கு தெற்கு வியட்நாம்கள் ஒரே நாடாக இணைக்கப்பட்ட போது. தமிழரசுக்கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் துடித்துப் பதைத்து எழுந்து, 'தென் வியட்நாமில் இருந்த ஐயாயிரம் தமிழர்களுக்கு என்ன நடந்தது?' எனக் கேள்வி எழுப்பினார். அதாவது வியட்நாம் முழுவதும் கம்யூனிஸ்ட்டுகளின் ஆட்சி வந்துவிட்டதால், தமிழர்களுக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்பதே, அவரது கம்யூனிஸ விரோதக் கூச்சலுக்கான காரணம்.

ஆனால் பிற்போக்குத் தமிழ்த் தலைமைகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குச் சார்பாக இருந்தாலும், கணிசமான தமிழ் மக்கள் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில், வியட்நாம் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவே செயல்பட்டனர். அந்தக் காலகட்டத்தில், வியட்நாம் மக்களுக்கு ஆதரவாக வடபகுதியெங்கும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது, ஒரு பிரசித்தி பெற்ற சுலோகம் கோசிக்கப்பட்டதுடன், அது அங்குள்ள சுவர்களிலும் காட்சியளித்தது. அதை எமக்கு உருவாக்கித் தந்தவர் எமது ஆசான் தோழர் கார்த்திகேசன் அவர்களே. அந்த சுலோகம் பின்வருமாறு அமைந்திருந்தது.

'ஹோசிமின் இரும்பு – ஜோன்ஸன் துரும்பு'

# 15. மாஓவின் அறைகூவலைத் தவறாக விளங்கிய தோழர்!

1960களில் இலங்கையின் வடபகுதியில் தீண்டாமைக்கு எதிரான உக்கிரமான போராட்டங்கள் நடைபெற்று வந்த காலங்களில், தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் டட்லி சேனநாயக்கவை பிரதமராகக் கொண்டு அமைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்தன. அக்கட்சிகளுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்கள் ஒரு சவாலாகவும், 'அவமரியாதையாகவும்' இருந்தது.

அத்துடன், அந்தக் காலகட்டத்தில் வடபகுதி பொலிஸ் நிலையங்களில் பெரும்பாலும் தமிழர்களே கடமையாற்றி வந்தனர். அப்பொழுதெல்லாம் பொலிஸ் சேவையில், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சேர்ந்து கொள்வதென்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத காரியம். எனவே அன்று பொலிஸ் நிலையங்களில் சேவையிலிருந்த உயர் சமூகத்தைச் சேர்ந்த தமிழ் பொலிசார், உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அடக்குமுறைகளைக் கையாண்டனர்.

ஒரு உதாரணத்துக்கு சொல்வதானால், அந்த போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்ற இடங்களில் ஒன்றான சங்கானையில் இருந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய தமோதரம்பிள்ளை என்ற சாதி வெறி பிடித்த பொலிஸ் சார்ஜண்ட், கைது செய்யப்படும் தாழ்த்தப்பட்ட போராளிகளை அடித்துத் துவைப்பதுடன், அவர்களுக்கு சிறுநீர் பருக்குவது போன்ற கைங்கரியங்களிலும் ஈடுபட்டு வந்தான். அத்துடன் உரிமைகளுக்காகப் போராடிய மக்கள் மீது, இந்தப் பொலிஸார் திட்டமிட்டு பொய் வழக்குகளையும் நீதிமன்றங்களில் தாக்கல் செய்தனர். இவையெல்லாவற்றுக்கும் இந்தப் பிற்போக்கு தமிழ் கட்சிகளின் ஆசீர்வாதம் தாராளமாக இருந்து வந்தது.

பொலிசார் ஒருவரைக் கைதுசெய்து வழக்குத் தாக்கல் செய்தால், அவரைப் பிணையில் வெளியே எடுப்பதானால், பெரும்பாலும் காணிகளின் உறுதிகளை பிணையாக நீதிமன்றங்களில் சமர்ப்பிக்க வேண்டி ஏற்படும். போராட்டங்களில் ஈடுபடும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ, அதை வழிநடாத்தும் கம்யூனிஸ்ட்டுகளுக்கோ பெரும்பாலும் சொந்தமாக காணிகள் இருப்பதில்லையாகையால், அவர்களிடம் காணி உறுதிகளும் இருக்காது. எனவே வழமையாக யாருக்காவது பணத் தேவை இருந்தாலோ அல்லது காணி உறுதி தேவைப்பட்டாலோ, அவர்கள் முதலில் ஓடிச்செல்வது தோழர் கார்த்திகேசனிடம் தான்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், தோழர் கார்த்திகேசன் அவர்களைப் பொறுத்த வரையிலும் கூட, அவர் இறக்கும் வரையிலும் அவரிடம் சொந்த வீடோ, ஒரு துண்டு நிலமோ இருந்ததில்லை. (ஆனால் வெறும் மனிதர்களாகக் கட்சியில் இணைந்து கொண்ட சிலர், பின்நாளில் பெரும் வீடுகளைக் கட்டிக் கொண்டனர் என்பது வேறு விடயம்) ஆனால் கார்த்திகேசன் தனக்கு சமூகத்தில் இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, பல வழக்குகளில் பிணை எடுப்பதற்காக, தனக்குத் தெரிந்தவர்களிடம் காணி உறுதிகளை வாங்கித் தந்து உதவுவார்.

அநேகமாக இந்த வழக்குகளை, எமது கட்சியின் வடபகுதி வாலிப இயக்கத்தில் முக்கிய பொறுப்பு வகித்த ஒருவர் தான் பொறுப்பாக இருந்து கவனித்து வந்தார். எனவே அவர் அடிக்கடி தோழர் கார்த்திகேசனிடம் காணி உறுதி கேட்டு வருவார். ஒருமுறை அவ்வாறு அவர் வந்துவிட்டுச் சென்ற பின்னர், தன்னைச் சந்திக்க வந்த சில தோழர்களிடம், அந்தத் தோழரின் வருகையைக் குறிப்பிட்டு விட்டு, ''தோழர் மாஓ சீன மக்களுக்கு விடுத்த அறைகூவல் ஒன்றில், 'உறுதியுடன் இருங்கள், தியாகங்களுக்கு அஞ்சாதீர்கள், சகல கஸ்டங்களையும் கடவுங்கள்' எனக் கூறியுள்ளார். மாஓ கூறிய 'உறுதியுடன் இருங்கள்' என்பதை, இந்தத் தோழர் காணி உறுதியுடன் இருங்கள் என மாஓ கூறியதாக அர்த்தப்படுத்திக் கொண்டுள்ளார் போலும்'' என நகைச்சுவையாகக் கூறி, எல்லோரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார்.

❋

# 16. பண்டாரநாயக்கவை தூக்கிலிட்ட சோவியத்காரர்!

1970 – 77 காலகட்டத்தில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது, சோசலிச சீன அரசாங்கம் கொழும்பில் பிரமாண்டமான 'பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தை:' அன்பளிப்பாகக் கட்டிக் கொடுத்தது. அந்த மண்டபத்தில் சீன சிற்பிகளால் மிகவும் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட பண்டாரநாயக்கவின் உருவச் சிலையொன்றும் நிறுவப்பட்டது.

இதே காலகட்டத்தில், இன்னொரு பெரிய 'சோசலிச' நாடான சோவியத் யூனியனும், பண்டாரநாயக்கவின் பிரமாண்டமான உருவச் சிலையொன்றை வடிவமைத்து, இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியது. அந்தச் சிலையை சோவியத் நிபுணர்கள் குழு ஒன்று, கொழும்பில் காலிமுகத்திடல் மைதானப் பகுதியில் நிறுவியது.

இந்தச் சிலை மிகப்பிரமாண்டமாக இருந்தபடியால், அதை நிலை நிறுத்துவதற்கு பெரிய பாரம் தூக்கியைக் (Crane) கொண்டு வந்து, சிலையின் கழுத்தில் ஒரு சங்கிலியைப் பிணைத்து தூக்கி நிறுத்தினர். பண்டாரநாயக்கவின் கழுத்தில் சங்கிலியை பிணைத்ததைப் பார்த்த ஒரு தோழர், அந்த சம்பவத்தை எமது கட்சியின் கொழும்பு காரியாலயத்தில் வந்து விபரித்தார்.

அந்த நேரத்தில் தோழர் கார்த்திகேசனும் அங்கு இருந்தார். அவர் அந்தத் தோழர் கூறியதைக் கேட்டுவிட்டு, "எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க பிரதமராக இருந்த போது அவரது அரசாங்கத்தின் தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கை காரணமாக, அவர் 1959ல் படுகொலை செய்யப்பட்டார். அவரது கொலையில் அமெரிக்க உளவு ஸ்தாபனமான சீ.ஐ.ஏ பின்னணியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இப்பொழுது சோவியத்காரர்களும்

அமெரிக்கர்களின் வழியில் பயணிப்பதால், தங்களது பங்குக்கு அவர்களும் பண்டாரநாயக்கவை தூக்கில் தொங்கவிட்டு சாகடிக்கிறாகள் போலும்!'' எனச் சொல்லி அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார்.

இந்த சிலை பற்றி கருத்துத் தெரிவித்த இன்னொரு தோழர், அந்தச் சிலை பண்டாரநாயக்கவின் உண்மையான தோற்றத்தை சரியான முறையில் பிரதிபலிக்கவில்லை எனக் கருத்துக் கூறினார். அதற்குப் பதிலளித்த கார்த்திகேசன், ''சிலையை வடிவமைத்த சோவியத் சிற்பிகளுக்கு பண்டாரநாயக்கவை நேரில் பார்த்திருக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. எனவே அவர்கள் அவரது மகன் அனுரவின் உருவத்தை வைத்துக்கொண்டு தந்தை பண்டாரநாயக்கவின் சிலையை வடிவமைத்திருக்கலாம்'' என நகைச்சுவையுடன் கூறினார்.

இந்த சிலை நிறுவப்பட்டு சில வருடங்களின் பின்னர், 1977ல் இலங்கையின் படுபிற்போக்குக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம், ஏகாதிபத்தியதாசன் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் பதவிக்கு வந்தது. அந்த நேரத்தில் காலிமுகத்திடலில் சோவியத்காரர்களால் நிறுவப்பட்ட பண்டாரநாயக்காவின் சிலை கடற்காற்றுக் காரணமாக துருப்பிடித்து பச்சை நிறத்தை அடைந்திருந்தது. இதுபற்றி சிலர் பிரஸ்தாபித்த போது, கார்த்திகேசன் சிரித்துவிட்டு, ''சோவியத்காரர்களுக்குத் தெரியும், அடுத்ததாக ஐ.தே.க. அரசாங்கம் அமையப் போகிறதென்று. அதற்கு ஏற்ற வகையில், பண்டாரநாயக்கவின் சிலையும் அந்த நேரத்தில் அந்தக் கட்சியின் பச்சை நிறத்துக்கு மாறக்கூடிய வகையில் வடிவமைத்திருக்கிறார்கள் போலும்'' என்று அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தினார்.

# 17. School Master – Road Master ஆன கதை

கார்த்திகேசன் தனது கல்விச்சேவைக் காலத்தில், முதலில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சுமார் கால் நூற்றாண்டு காலம் ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர், அங்கு சில காலம் பதில் அதிபராகவும் கடமையாற்றினார். பின்னர் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபராகவும், இறுதியாக பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபராகவும் இருந்து, 1970களின் நடுப்பகுதியில் ஓய்வு பெற்றார்.

அவர் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்றபோது, அவருக்கு அங்குள்ள ஆசிரிய சமூகத்தின் சார்பாக ஒரு ஆங்கில தட்டச்சு யந்திரமும், மாணவர்கள் சார்பாக ஒரு Road Master துவிச்சக்கர வண்டியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

தட்டச்சு இயந்திரம் வழங்கப்பட்டதன் நோக்கம் என்னவெனில், அவரிடம் எப்பொழுதும் தமது பிரச்சினைகள் சம்பந்தமாக ஆங்கில மொழியிலான மகஜர்களை எழுதிப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் வந்தவண்ணம் இருப்பர். அவரும் சலிக்காமல் அவர்களது தேவைகளை நிறைவேற்றி வைப்பார். (அவர் மரணிக்கும் நேரத்தில் கூட, காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் வேலை செய்யும் ஒரு தொழிலாளியின் பிரச்சினை சம்பந்தமான கடிதம் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கும் போதே மரணித்தார்.) அதை உணர்ந்த ஆசிரியர்கள், அவருக்கு உபயோகமாக இருக்கும் எனக் கருதி, அந்தத் தட்டச்சு யந்திரத்தை அன்பளிப்புச் செய்தனர். ஆனால் அவர் தனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட அந்த புதிய தட்டச்சு யந்திரத்தைக் கூட, தான் வைத்துக் கொள்ளாமல், கட்சியின் புத்தக நிலையமான 'யாழ் புத்தக நிலையத்திற்கு' வழங்கிவிட்டு, தான் ஒரு பழைய தட்டச்சு யந்திரத்தையே வைத்திருந்தார். (அந்த பழைய தட்டச்சு யந்திரத்தைக் கூட, அவர் கடைசிக் காலங்களில் குடியிருந்த வட்டுக்கோட்டை வீட்டிலிருந்து யாரோ திருடிச் சென்று விட்டார்கள்!)

துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டதன் நோக்கம், அவர் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் கூட வீட்டில் ஓய்ந்திருக்கமாட்டார், ஏதாவது மக்கள் பிரச்சினை சம்பந்தமாக ஓடிக் கொண்டிருப்பார். எனவே அவருக்கு நல்ல துவிச்சக்கர வண்டி ஒன்று தேவை என அவரது மாணவர்கள் கருதியதனால் தான். ஏனெனில் அவர் ஓரளவு நல்ல அரசாங்க மாதச் சம்பளம் பெற்றபோதும், பல கட்சித்தோழர்களினதும், பொதுமக்களினதும் தேவைகளுக்காக மாதாமாதம் கணிசமான பணத்தை வழங்கிவந்தாரேயொழிய, தனக்கு ஒரு நல்ல துவிச்சக்கர வண்டியையோ, நல்ல உடைகளையோ வாங்கிக் கொண்டது கிடையாது.

கார்த்திகேசன் வைத்திருந்த துவிச்சக்கர வண்டிகள் எல்லாமே பழையவையாகவே இருந்துள்ளன. அவைகளைக் கூட திருடர்கள் விட்டு வைக்கவில்லை என்பது தான் வேடிக்கையானதும் வேதனையானதுமாகும். ஒருமுறை யாழ்.ஸ்ரான்லி வீதியில் மொம்சாக் கட்டிடத்தில் அமைந்திருந்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் காரியாலயத்தின் கீழே அவரது துவிச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது களவு போனது. இந்தக் களவு பற்றியும் நகைச்சுவையாகக் குறிப்பிட்ட கார்த்திகேசன் "பாவம் எனது சைக்கிளை களவெடுத்தவன் அதைப் பயன்படுத்துவதற்கு என்ன கஸ்டப்படப் போகிறானோ தெரியவில்லை" எனச் சொன்னார். இன்னொருமுறை அவரது சைக்கிள் யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் அமைந்திருந்த 'சிவத்தொண்டன்' நிலையத்தில் நண்பரொருவரைச் சந்திக்கச் சென்றிருந்த போது களவு போனது.

நாம் அறிந்த வரையில், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மாணவர்கள் வழங்கிய துவிச்சக்கர வண்டி தான், அவர் தன் வாழ்நாளில் பெற்ற புதிய வண்டியாக இருந்திருக்கும். இந்த அன்பளிப்பு வழங்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றிய கார்த்திகேசன், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அவர்களது அன்பளிப்புகளுக்காக நன்றி தெரிவித்துவிட்டு, "இவ்வளவு காலமும் School Master ஆக இருந்த எனக்கு, இந்த Road Master சைக்கிளைத் தந்ததின் மூலம், என்னை இனிமேல் Road Master இருக்கும்படி கூறி விட்டீர்கள் போலும்" என்று கூறி, அங்கிருந்த அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தினார்.

❋

# 18. ஆணவ மலமும் அழுக்கு மலமும்

**கா**ர்த்திகேசன் யாழ்.இந்துக்கல்லூரியில் பதில் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர், அதிபர் என்ற வகையில் அவர் செய்த முதலாவது பாடசாலை அபிவிருத்தி வேலை, அங்கு போதிய மலசல கூடங்களை அமைத்தது தான்.

கார்த்திகேசன் முன்னுரிமை கொடுத்துச் செய்த இந்த வேலை குறித்து தான் ஒருமுறை வினவிய போது, "எமது பாடசாலை ஒரு இந்துப் பாடசாலை. இந்துமத தர்மம், மனிதன் ஆணவம் என்னும் மலத்தை நீக்கி வாழும் போதுதான், அவனது வாழ்வு முழுமையான, அர்த்தமுள்ள வாழ்வாக அமைகின்றது என வலியுறுத்துகின்றது. அது எவ்வளவு உண்மையோ, அதேயளவு உண்மை, ஒரு மனிதன் தனக்கு உபாதை கொடுக்கும் வயிற்றிலுள்ள மலசலத்தையும் அகற்றி வாழ்வதாகும். ஆனால் எமது கல்லூரியில் ஆணவ மலத்தை அகற்றும்படி அடிக்கடி உபதேசிக்கும் நாம், மாணவர்கள் தமது உடலிலுள்ள மல சலங்களை அகற்றி வாழ்வதற்கான ஒழுங்குகளைப் போதியளவு செய்து கொடுக்கவில்லை. எனவே தான் முதல் வேலையாக போதிய மலசல கூடங்களை நிறுவத் தீர்மானித்தேன்" என பெரியதொரு சிந்தனைக்குரிய விடயத்தை கார்த்திகேசன் கூறியதாக, அவருடன் அக்கல்லூரியில் நீண்ட காலம் கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவர் ஒரு வைபவத்தில் பேசும்போது கூறினார்.

# 19. அலையலையாக தாக்கியவனும், குலைகுலையாக குந்தி இருந்தவனும்!

1962ல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே எல்லை சம்பந்தமான போர் ஒன்று நடைபெற்றது. இந்த இரு நாடுகளும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்த காலத்தில், இந்தியாவை அரசாண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் பிரதிநிதியான மக்மோகன் என்பவன், பிரிட்டிஸ் இந்தியாவுக்குச் சாதகமாக வரைந்த முறையற்ற எல்லைக்கோட்டையே, சுதந்திரத்துக்குப் பின்பும் இரு நாடுகளும் பின்பற்ற வேண்டும் என இந்திய ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் வலியுறுத்தியதாலேயே இந்த யுத்தம் ஏற்படும் சூழ்நிலை உருவானது. அத்துடன், தனது உள்நாட்டு அரசியல் - பொருளாதார நெருக்கடிகளைத் திசை திருப்ப, போரை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி, தேசிய வெறியை உருவாக்க வேண்டிய தேவை இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவுக்கு இருந்தது., இறுதியில் யுத்தத்தில் இந்தியா சீனாவிடம் தோல்வியே அடைந்தது.

எமது இலங்கையைப் பொறுத்த வரையில், இந்த யுத்தத்தில் ஈடுபட்ட இரு நாடுகளும் எமது நாட்டின் நெருங்கிய நட்பு நாடுகள் என்ற படியால், அப்போது இலங்கையின் பிரதமராக இருந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க, இரு நாடுகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்துவதற்கு அரும்பாடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற்றார். சிறீமாவோவின் முயற்சியை சிங்கள மக்கள் பூரணமாக ஆதரித்து நின்றனர்.

மறுபக்கத்தில், தமிழர் தரப்பைப் பொறுத்த வரையில், அன்று தமிழ் மக்களின் பிரதான கட்சியாக இருந்த தமிழரசுக்கட்சி, இந்தியா தமிழர்களின் தாய்நாடு என்றும், சீனர்கள் கொடிய ஆக்கிரமிப்புப் பிசாசுகள் என்றும், சரி பிழையை ஆராயாது ஒரு பக்கமாகப் பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். (புலிகள் இந்தியாவை ஆக்கிரமிப்பாளன் என்று சொல்லி, அந்நாட்டுடன்

ஒரு போரில் ஈடுபட்ட பின்பும் கூட, இன்றும் கூட, தமிழ் தலைமைகளின் சீன எதிர்ப்பு வாந்தி நின்றபாடாக இல்லை) அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஒரேயொரு பிராந்திய தினசரியான (இந்தியாவைச் சேர்ந்த ஹரன் ஐயர் என்பவரை ஆசிரியராகக் கொண்டிருந்த) 'ஈழநாடு' பத்திரிகை இந்த சீன எதிர்ப்புப் பிரச்சாரத்தின் அச்சாணியாகச் செயல்பட்டது.

இந்த சூழ்நிலையில், வழமையாக கார்த்திகேசனின் வீட்டுக்கு அடிக்கடி வந்து பலதும் பத்தும் கதைக்கும் தமிழரசுக்கட்சி அனுதாபியான தமிழ் ஆசிரியர் ஒருவர், ஒருநாள் வந்து கதைக்கும் போது, "இந்திய – சீன போரின் போது, சீனாக்காரன் அலை அலையாக வந்து தாக்கியதால் தான், இந்தியா தோற்றது அல்லது இந்தியா வென்றிருக்கும்" என்றார்.

இதற்குப் பதிலளித்த கார்த்திகேசன், "சீனர்கள் அலை அலையாக வந்து தாக்கினால், அவங்கள்(இந்தியர்கள்) ஏன் குலை குலையாகக் குந்திக் கொண்டிருந்தவங்கள்" என்று திருப்பிக் கேட்டார். பின்னர் அதற்கு விளக்கமும் சொன்னார்.

1950களில் ஒருமுறை சோவியத் யூனியனில் நடந்த மாநாடு ஒன்றுக்கு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளாக கார்த்திகேசனும், கே.துரைசிங்கம் அவர்களும் சென்றிருந்தனர். அவர்கள் தாயகம் திரும்பும் போது, இந்தியாவின் கல்கத்தா(இன்றைய கொல்கத்தா) நகரின் ஊடாக வந்தனர். கல்கத்தாவில் ஒருநாள் தங்கியிருந்த போது, அங்குள்ள மைதானம் ஒன்றில் பல நூற்றுக் கணக்கானோர் கும்பல் கும்பலாக குந்திக்கொண்டு இருப்பதை அவதானித்தார். இதுபற்றி அங்குள்ளவர்களிடம் விசாரித்த போது, பட்டாளத்துக்கு ஆள் எடுப்பதாகவும், அதற்காக வேலையற்ற மக்கள் கிராமங்களிலிருந்து பல நூறு மைல்கள் நடந்து கூட வந்து, அந்த மைதானத்தில் நாள் கணக்காகக் குந்தியிருப்பதையும் அறிய முடிந்தது.

வறுமையின் காரணமாக, பட்டாளத்தில் சேருவதற்காக இவ்வாறு வந்து, மைதானத்தில் கூட்டம் கூட்டமாக குந்தியிருப்பவர்களால், ஒரு இலட்சியத்துக்காக போராடும் ஒரு சோசலிச நாட்டின் இராணுவத்துடன் போரிட்டு வெல்ல முடியாது என்பதை அந்தத் தமிழாசிரியருக்கு உணர்த்தவே தான் அவ்வாறு நகைச்சுவையாகக் கூறியதாக, பின்னர் கார்த்திகேசன் கூறினார்.

# 20. தமிழனைத் தட்டி எழுப்பியவன் யார்?

கார்த்திகேசன் யாழ்.இந்துக்கல்லூரியில் கற்பிக்கத் தொடங்கிய ஆரம்பகாலங்களில், யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழ் மக்களின் தனிப்பெரும் கட்சியாகப் பவனி வந்து கொண்டிருந்தது. அக்கட்சியின தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அந்தக் காலத்தில் 'முடி சூடா மன்னனாக' வர்ணிக்கப்பட்டார். 'எங்கள் பலம் பொன்னம்பலம்' என்ற கோசம் காங்கிரஸ் மேடைகளில் உரத்து முழங்கப்பட்டது. பொன்னம்பலமும் தமிழ் மக்களைப் பார்த்து "தமிழன் என்று சொல்லடா – தலை நிமிர்ந்து நில்லடா" என முழங்கி வந்தார். (இதன் காரணமாக 'நில் மாஸ்டர் பொன்னம்பலம்' என்ற பட்டப் பெயரும் அவருக்குக் கிடைத்தது!)

சிறிது காலத்தின் பின்னர், அக்கட்சியில் இருந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், ஈ.எம்.வி. நாகநாதன் போன்றோர் பொன்னம்பலத்துடன் கருத்து முரண்பாடு கொண்டு அக்கட்சியில் இருந்து வெளியேறி, இலங்கை தமிழரசுக்கட்சி என்ற கட்சியை ஸ்தாபித்தனர். அவர்களும் தமது பங்கிற்கு தமிழ் மக்களை உணர்ச்சியூட்டும் வகையில், 'மண் தோன்றி கல் தோன்றாக் காலத்தில், முன் தோன்றிய மூத்த குடித் தமிழன் சிங்களவனுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதா?' என உணர்ச்சியைக் கிளறி வந்தனர்.

இந்த இரு கட்சியினரும் ஏட்டிக்குப் போட்டியாகத் தமிழ் மக்களைத் 'தட்டி எழுப்பிக்' கொண்டிருந்த காலத்தில், கார்த்திகேசன் சில சமயங்களில் தனது மாணாக்கர்களைப் பார்த்து 'தமிழனைத் தட்டி எழுப்பியவன் யார்?' எனக் கேட்பதுண்டு. அவரது கேள்விக்கு மாணவர்களில் ஒரு சாரார் விழுந்தடித்துக் கொண்டு பொன்னம்பலம் என்று பதிலளிப்பர். இன்னொரு சாரார் செல்வநாயகம் என்று பதிலளிப்பர்.

அவர்களது பதிலைக் கேட்கும் கார்த்திகேசன் சிரித்துவிட்டு, "இல்லை இல்லை, அனுராதபுரத்து குடும்பிக்கார சிங்களவன் தான் தமிழனைத் தடடியெழுப்பியவன்" எனப் பதிலளிப்பார். மாணவர்கள் அவரது பதிலைக்

கேட்டு குழம்பி நிற்பர். அவரது விளக்கம் வேறு ஒரு கோணத்திலும், அர்த்தத்திலும் தமிழர்கள் சிலரது சுயநல நடத்தையைச் சுட்டுவதாக இருக்கும்.

அதாவது முன்னைய காலங்களில் காங்கேசன்துறை – கொழும்பு இரவு புகைவண்டியில் ஏறும் நம்மவர்களில் சிலர், வசதியாகத் தூங்கிச் செல்வதற்காக, இருக்கை ஆசனத்தின் முழுப்பகுதியையும் ஆக்கிரமித்து வைத்திருக்கும் நோக்கத்துடன் ஒரு தந்திரத்தைக் கையாள்வர். மூலை ஆசனத்தில் தாம் இருந்து கொண்டு, அருகிலுள்ள மற்றைய இரு இருக்கைகளிலும் தமது பொதிகளை வைத்துவிடுவர்.

வண்டியில் தாமதமாக வந்து ஏறும் பயணிகள் அந்த ஆசனங்களில் இருப்பதற்கு இடம் கேட்டால், அதில் வேறு பயணிகள் இருப்பதாகவும், அவர்கள் தற்பொழுது வண்டியின் சிற்றுண்டிச்சலைக்குச் சென்றுள்ளதாகவும் பொய் கூறுவர். ஆசனம் கேட்டு ஏமாந்தவர்கள் சிறிது நேரம் நின்று கொண்டு பிரயாணம் செய்துவிட்டு, பின்னர் களைப்பின் மிகுதியால் ஆசனத்திற்கு கீழே பழைய பத்திரிகை ஒன்றை விரித்துவிட்டு அதில் படுத்துத் தூங்கிவிடுவர். அதன்பின்னர் மூலை ஆசனத்தில் இருக்கும் நமது ‘கதாநாயகன்’, தனது பொதிகளை மேலே வைத்துவிட்டு வசதியாக கால்களை நீட்டி நல்ல தூக்கம் போடுவார்.

புகைவண்டி நள்ளிரவு வேளையில் அனுராதபுர புகையிரத நிலையத்தை அடைகையில், குடும்பி வைத்த நாட்டுப்புற சிங்கள மக்கள் பெருந்தொகையில் திமுதிமுவென வண்டியில் ஏறுவர். அவர்கள் ஏறியதும் கைகால்களை நீட்டிப் படுத்திருக்கும் நமது ‘வீரவான்’ மிது ஒரு தட்டு தட்டுவர். அவ்வளவுதான், அவர் துடித்துப் பதைத்து எழுந்து, அவர்களுக்கு ஆசனங்களைக் கொடுத்துவிட்டு, ஒரு மூலையில் கூனிக்குறுகி இருந்து கொண்டு தனது பிரயாணத்தைத் தொடர்வார். தனது சொந்தச் சகோதரர்களை ஏமாற்றியவர், அனுராதபுரத்தில் ஏறியவர்களை ஏமாற்ற முடியாமல் செத்த பாம்பாகக் காட்சியளிப்பார்.

சில தமிழர்களது சுயநலப் போக்கையும், சுத்துமாத்து வேலையையும் அம்பலப்படுத்தவே கார்த்திகேசன் தனது மாணவர்களுக்கு இந்தக் கதையை அடிக்கடி கூறுவதுண்டு.

❋

# 21. எம்.ஜீ.ஆர். உருவிய ஆயுதம்!

1962ல் இந்திய – சீன எல்லை யுத்தம் நடந்த காலகட்டத்தில், இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தமிழரசுக்கட்சியினாலும், இந்தியத் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தாலும், சீன எதிர்ப்புப் பிரச்சாரம் கண்மூடித்தனமாகவும், எழுந்தமானத்திலும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

தமிழ்நாட்டின் பிரபல திரை நட்சத்திரங்கள் எல்லோரும் இந்தியப் பிரதமர் நேருவின் வேண்டுகோளை ஏற்று, தேசிய பாதுகாப்பு நிதிக்கு பெருந்தொகை பணத்தை வாரி வழங்கியதுடன், யுத்தம் நடைபெற்ற எல்லைப்புறத்துக்குச் சென்று, இந்திய எல்லைக் காவல் வீரர்களை மகிழ்விக்க கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தினர்.

பிரபல நட்சத்திரங்களின் இலங்கை தமிழ் ரசிகர்களும், தமது விருப்பத்துக்குரிய நடிகர்களின் பண நன்கொடைகள் பற்றி அந்த நேரத்தில் பெருமிதத்துடன் சொல்லித் திரிந்தனர். இதில் எம்.ஜீ.ஆரின் ரசிகர்களே முன்னணியில் இருந்தனர். ஏனெனில் எம்.ஜீ.ஆர். ஏற்கெனவே 'கொடை வள்ளல்' எனப் பெயர் பெற்றிருந்ததுடன், தனது திரைப்படங்களில் பி.எஸ்.வீரப்பா, எம்.என்.நம்பியார் போன்ற வில்லன்களுடன் வாள் போர் செய்து அவர்களைத் தோற்கடிப்பதிலும் வல்லவராயிருந்தார். அவரது ரசிகர்களில் பெரும்பாலோர் அப்பாவித்தனமான பாமர மக்களாக இருந்ததால், அவர்கள் உண்மையிலேயே எம்.ஜீ.ஆர். ஒரே நேரத்தில் பல டசின் கணக்கானோருடன் சண்டையிட்டு அவர்களை வெல்லக் கூடியவர் என நம்பியிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் கார்த்திகேசன் அவர்கள் ஒருநாள், தனது வகுப்பு மாணவர்கள் சிலரிடம் இந்திய – சீன எல்லை யுத்தம் பற்றி உரையாடிவிட்டு, "சீனர்களின் ஆக்கிரமிப்பு பற்றி கேள்வியுற்ற எம்.ஜீ.ஆர் உடனடியாக உருவினார் ஆயுதத்தை" எனக் கூறிவிட்டு, மாணவர்களைப் பார்த்து "என்ன ஆயுதம் என்று சொல்லுங்கள் பார்ப்போம்" என வினவினார்.

உடனடியாக மாணவர்கள் எல்லோரும் ஏகோபித்த குரலில் "வாளை" எனப் பெருமிதத்துடன் பதிலளித்தனர்.

அதற்கு கார்த்திகேசன் "அதுதான் இல்லை. எம்.ஜீ.ஆர். தனது ஒரு சட்டைப் பையிலிருந்து பேனாவை உருவினார். தனது அதன் மறு பையிலிருந்து செக் (காசோலை) புத்தகத்தை எடுத்தார். ஒரு தொகைப் பணத்தை அதில் எழுதி அதை தேசிய பாதுகாப்பு நிதிக்கு அனுப்பி வைத்தார்" எனச் சொல்லி முடித்தார்.

எம்.ஜீ.ஆா. வாளுடன் எல்லைக்குச் சென்று சீனர்களுடன் சண்டையிட்டிருப்பார் என எதிர்பார்த்த அவரது ரசிகர்கள், கார்த்திகேசன் சொன்ன பதிலால், ஏமாற்றமடைந்தாலும், அவரது நகைச்சுவை கேட்டு சிறிது நேரம் வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்தனர்.

❋

## 22. தமிழனுக்கு 'கணக்கு விட்ட' கணிதப் பேராசிரியர்!

முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும், 'அடங்காத் தமிழர் முன்னணி' என்ற அமைப்பை நடாத்தியவரும், கணிதப் பேராசிரியருமான சி.சுந்தரலிங்கம், 1960களில் நடந்த தாழ்த்தப்பட்ட மக்களின் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசப் போராட்டத்தை எதிர்த்து நின்றதால் மட்டும் 'புகழ்' ஈட்டியவர் அல்லர்.அதற்கு முன்னரே, அவர் இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணிக்கு கணக்குப் படிப்பித்தவர் என்ற புகழும் அவருக்கு உண்டு.

சுந்தரலிங்கத்தின் இந்தக் 'கீர்த்தியை'> மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்ட காலத்தில் அவரது ஆதரவாளர்களின் வாய்களிலிருந்தும் அடிக்கடி கேட்கக் கூடியதாக இருந்தது. அந்தப் போராட்டம் நடந்த காலத்தில், ஒரு வழக்கில் இலங்கையிலிருந்த நீதிமன்றம் ஒன்று சுந்தரலிங்கத்துக்கு பாதகமாகத் தீர்ப்பளித்துவிட்டது. அதை எதிர்த்து சுந்தரலிங்கம் இங்கிலாந்திலிருந்த 'பிரிவு கவுன்சில்' என்னும் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு மனுச் செய்தார்.

அந்த நேரத்தில் சுந்தரலிங்கத்துடன் நின்று தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேசத்தைத் தடுத்துக் கொண்டிருந்த அவரது ஆதரவாளர்கள் சிலர், "ஐயா மகாராணிக்கே கணக்குப் படிப்பிச்சவர், அந்த மகாராணியின் இங்கிலாந்துக்கு ஐயாவின் அப்பீல் போயிருக்கிறபடியாலை வெற்றி நிச்சயம்" என புளுகித் திரிந்தனர்.

சுந்தரலிங்கம் மகாராணிக்கு கணக்குப் படிப்பித்த விடயம் கார்த்திகேசனின் காதுகளுக்கும் எட்டிவிட்டது. "அப்படியா விசயம். சுந்தரலிங்கம் ஏககாலத்தில் மகாராணிக்கும் கணக்கு விட்டு, தமிழனுக்கும் கணக்கு விடுகிறார் போலும்" என அவர் கிண்டலாகக் கூறிவிட்டு, இந்தக் கதையின் பின்னணி என்னவென்பதைப் புட்டு வைத்தார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்க இறந்த பின்னர், அவரது மகனான டட்லி சேனநாயக்க பிரதமராகப் பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் சி.சுந்தரலிங்கமும் ஒரு அமைச்சரானார். 1948 பெப்ரவரி 04ந் திகதி இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர், பிரித்தானிய முடியாட்சிக்கு உட்பட்ட ஒரு நாடாகவே இலங்கை இருந்து வந்தது. எனவே பிரித்தானியாவில் நடைபெறும் அரச வைபவங்களுக்கு இலங்கை அரச தலைவர்களும் அழைக்கப்படுவது ஒரு சம்பிரதாயமாக இருந்தது.

ஒருமுறை அவ்வாறான ஒரு வைபவத்துக்கு இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயக்கவையும் அவரது பாரியாரையும் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. சேனநாயக்க ஒரு தமிழ் பெண்ணை விரும்பி இருந்து, அந்தத் தமிழ் பெண்ணை மணந்தால் அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட மாட்டாது என, அவரது தந்தையான டீ.எஸ்.சேனநாயக்க எச்சரிக்கை செய்து இருந்ததால், அவர் அப்பெண்ணைத் திருமணம் செய்யாது, ஆனால் அவருடன் மறைமுகமாகத தொடர்பைப் பேணிக்கொண்டு, அரச பதவியையும் தக்க வைத்துக் கொண்டதால், அவருக்கு உத்தியோகபூர்வ மனைவியர் எவரும் இருக்கவில்லை.

எனவே அழைப்பு விடுக்கப்பட்ட அந்த பிரித்தானிய அரச வைபவத்தில் மனைவி சகிதம் பங்குபற்ற முடியாத சூழல் இருந்ததினால் அவர் தனது அமைச்சரவைச் சகாவான சி.சுந்தரலிங்கத்தையும், அவரது மனைவியாரை யும், அந்த வைபவத்தில் தனது சார்பாகக் கலந்து கொள்ள அனுப்பி வைத்தார். சுந்தரலிங்கம் அந்த வைபவத்தில் பங்குபற்றியதால், அவரது பெயர் பிற்காலத்தில் அரச குடும்ப பதிவேடுகளில் நிரந்தரமாக இடம் பெற்று விட்டது.

இந்த நிகழ்ச்சியின் பின்னர், பிரித்தானிய அரச குடும்பம் ஏதாவது தமது நிகழ்ச்சிகளுக்கு இலங்கை அரச தலைவருக்கு அழைப்பிதழ் அனுப்பும் போது, சுந்தரலிங்கததின் குடும்பத்:துக்கும் அனுப்புவது வழமையாகிவிட்டது. சுந்தரலிங்கமும் அவற்றுக்குப் பெருமையுடன் போய் கலந்து கொண்டு வருவார். இந்த விடயம், சுந்தரலிங்கம் மகாராணிக்கு கணக்குப் படிப்பித்த காரணத்தாலேயே, அவருக்கு விசேடமாக அழைப்பு விடுக்கப்படுகின்றது என்ற கதையாக உருமாறி, தமிழனின் காதில் பூச்சுற்றும் விடயமாகவும் மாறிவிட்டதை, கார்த்திகேசன் சொல்லியே பலருக்கு உண்மை தெரிய வந்தது.

❋

# 23. கொழும்பு செல்லும் வண்டியில் ஏறி, காங்கேசன்துறை நோக்கி நடக்கும் செல்வநாயகம்!

இலங்கைத் தமிழினம் 'தமிழீழ தேசிய விடுதலை' என்ற பெயரில், சுமார் 30 வருடங்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு எல்லாவற்றையும் இழந்த நிலையில், இன்று நாதியற்று நடுச்சந்தியில் நின்று பரிதவிக்கின்றது. இந்த அவல நிலையைக் குறிப்பிடும் சிலர் மிகச் சரியாக 'பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு, இருந்த கோவணத்தையும் இழந்த கதை' என வர்ணிக்கின்றனர். இங்கே இதைக் கூறுவதன் நோக்கம், தமிழினம் தனது உரிமைகளைப் பெற்று, ஏனைய இனங்களுடன் சமதையாக வாழத் தகுதியில்லாத இனம் என்று சொல்வதற்கல்ல.

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என்பதும், அவை நிச்சயம் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதும், மற்றவர்களைப் போலவே இடதுசாரிகளுக்கும் உள்ள உறுதியான நிலைப்பாடாகும். எனவேதான் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை 1944ல் அங்கீகரித்ததுடன், இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவர்களுக்கென பிராந்திய சபைகள் நிறுவப்பட வேண்டும் எனவும் 1954ல் தீர்மானம் நிறைவேற்றியது.

ஆனால் தமிழ் மக்களுக்கு தலைமைதாங்கிய பிரதான கட்சிகளான தமிழ் காங்கிரசும், தமிழரசுக்கட்சியும், ஐம்பதுக்கு ஐம்பது எனவும், சமஸ்டி எனவும் யதார்த்த நிலவரத்துக்கு பொருத்தமற்ற கோசங்களை முன்வைத்து பிரச்சினைக்கு தீர்வு வராதமுறையில் குட்டையைக் குழப்பி வந்துள்ளன. அதன் தொடர் வளர்ச்சியாகவும், உச்சக் கட்டமாகவும் தமிழீழத் தீர்மானத்தையும், அதற்கான ஆயுதப்போராட்டத் தையும் தொடக்கி,

இன்றைய பேரழிவுக்கு இட்டு வந்துள்ளன. அத்துடன் ஆரம்பகால தமிழ் தலைமைகளில் இருந்து இன்றைய தலைமைகள் வரை, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு பிராந்திய – சர்வதேச வல்லாதிக்க சக்திகளையே நம்பியும் வந்துள்ளன.

எனவே, இந்த அடிப்படையான கோளாறே, தமிழ் மக்களின் பிரச்சினை இன்றுவரை தீராததிற்கு அடிப்படைக் காரணமாகும். இந்த உண்மையை ஆரம்பத்திலேயே தோழர் கார்த்திகேசன் தொடர்ந்து விளக்கி வந்துள்ளார். அவர் இதற்கு ஒரு உதாரணத்தை எப்பொழுதும் கூறுவார்.

அதாவது தமிழரசுக்கட்சி தலைவர் செல்வநாயகம், தனது தேர்தல் தொகுதியாக, இறக்கும் வரை காங்கேசன்துறையையே வைத்திருந்தார். ஆனால் அவர் வாழ்ந்தது தலைநகர் கொழும்பில். (அவர் மனைவியுடன் காங்கேசன்துறைக்கு வந்து ஓரிரு நாட்கள் தங்கியிருக்கும் காலங்களில், குடிப்பதற்கு தண்ணீர் கூட, கொழும்பிலிருந்து போத்தல்களில் கொண்டு வருவதாகவும் கூறப்படுவதுண்டு) எனவே அவர் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு புகையிரதத்தில் செல்லுவதை வர்ணிக்கும் கார்த்திகேசன், 'செல்வநாயகம் கொழும்பு செல்லும் புகையிரதத்தில் ஏறி, தான் காங்கேசன்துறை செல்வதாகக் கூறி, முன் பெட்டியிலிருந்து பின் பெட்டி நோக்கி நடப்பது போலத்தான் தமிழினத்தையும் வழி நடாத்தி வருகின்றார். ஆனால் அவர் இறுதியில் தவிர்க்க முடியாதபடி கொழும்புக்குத்தான் செல்ல வேண்டியிருக்கும். ஏனெனில் அவர் ஏறியிருப்பது கொழும்பு செல்லும் வண்டியில். இதுவே யதார்த்தம்' என்பார்.

இதன் அர்த்தம் யாதெனில், தமிழ் தலைமைகள் இலங்கையின் ஏனைய இன மக்களும், உலக மக்களும் பின்பற்றும் உலகின் பொதுவான போக்கை (Main Trend) அனுசரித்து தமது அரசியலை முன்னெடுக்கவில்லை என்பதை விளக்கவே. இதில் கவலை என்னவெனில், இன்றுவரை தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குவோர் அந்தப் போக்கிலிருந்து இன்னமும் விடுபடாமல் இருப்பது தான்.

# 24. வெள்ளையன் குடியும், தமிழன் குடியும்

**ம**துபானம் அருந்துவோர் பற்றி கார்த்திகேசன் ஒரு பகிடிக்கதை கூறுவதுண்டு. அவர் இந்தக் கதையைக் கூறுவதற்குக் காரணம், வெள்ளைக்காரர்கள் போன்று, எம்மவர்கள் மதுபானம் அருந்துவதற்கு காரணம் உடல் அலுப்பைத் தீர்ப்பதற்கோ அல்லது உடல் ஆரோக்கியத் தைப் பேணுவதற்கோ அல்ல என்பதை விளக்குவதற்காகவே. அதற்காக அவர் வெள்ளைக்காரர்களின் குடியையும், எம்மவர்களின் குடியையும் ஒப்பிட்டு அந்தக் கதையைக் கூறுவதுண்டு.

வெள்ளைக்காரர்கள் குடிக்கும் போது, அவர்கள் சாப்பிட்டுக் கொண்டே குடிப்பது வழக்கம். அவர்களது குடியின் நோக்கம், அவர்கள் வாழ்வது பெரும்பாலும் குளிர் தேசங்கள் என்பதால் உடலைச் சூடாக வைத்திருப்பதற்காகவும், தாம் உண்ணும் உணவுடன் மதுசாரமும் சேர்ந்து உணவாக மாறும் என்பதாலும் என, ஒரு பொது அபிப்பிராயம் உண்டு.

எனவே வெள்கைக்காரன் குடிக்கும் போது, அதில் உள்ள 'அல்கஹோல்' என்னும் எரியூட்டும் சாரம் அவனது வயிற்றினுள் செல்கையில், அது எரிப்பதற்குத் தயாராக அங்கே அவன் முன்னரே உண்ட மாட்டு ஈரல் போன்ற பதார்த்தங்கள் தயாராக இருக்கும் என கார்த்திகேசன் கூறுவார்.

ஆனால் தமிழன் குடிப்பது பெரும்பாலும் வெறும் வயிற்றில் தான். அவனது குடியின் நோக்கம் உடல் நலம் கருதியதல்ல. அளவுக்கு அதிகமாகப் போதையை ஏற்றிய பின்னர், பழைய கோப தாபங்களை நினைவுக்கு கொண்டு வந்து, முச்சந்தியில் நின்று தனது கோபக்காரர்கள் மீது நாலு துசண வசனங்களை உரக்கப் பேசிவிட்டு, வீட்டுக்கு சென்று, போதை தலைக்கேறியதால் ஏதும் சாப்பிடாமல் சுருண்டு படுப்பதே அவனது வழமையாக இருக்கும். இந்த நிலையில் அவனது வயிற்றுக்குள் சென்ற மதுவின் எரிசாரம், தான் உண்ணுவதற்கு எதுவுமின்றி, இவனது ஈரலைத்தான் சாப்பிடும் என்பார் கார்த்திகேசன்.

❋

# 25. கார்த்திகேசனின் Poor Rose அல்லது பூவரசம் பூ

**கா**ர்த்திகேசன் தனது வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொண்டது, தனது உறவினரான ஒரு சாதாரண குடும்பத்துப் பெண்ணை ஆகும். கார்ல் மாக்ஸ்சுக்கு எப்படி அவரது துணைவியாரான ஜென்னி உறுதுணையாக இருந்தாரோ, அதேபோல கார்த்திகேசனுக்கும் அவரது துணைவியார் அவரது வாழ்க்கை முழுவதும் உற்ற துணையாக இருந்தார்.

கார்த்திகேசன் திருமணம் செய்த ஆரம்ப நாட்களில், அவர் கட்சியின் முழுநேர ஊழியராக இருந்த காரணத்தால், கொழும்பிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சி தலைமைக் காரியாலயத்தில், மற்றைய தோழர்களுடன் சேர்ந்து 'கம்யூன்' என்னும் கூட்டு வாழ்க்கையை மேற்கொண்டார். பின்னர் யாழ்ப்பாணத்துக்கு அங்கு கட்சியை ஸ்தாபிப்பதற்கு அனுப்பப்பட்டு, அங்கு கட்சி வேலையையும், ஆசிரியத் தொழிலையும் ஒருங்கே மேற்கொண்டார். அங்கு அவர் கட்சியை வளர்ப்பதற்காக பத்திரிகை விற்பது, அரசியல் வகுப்பு எடுப்பது, கூட்டங்கள் - ஊர்வலங்களை ஒழுங்கு செய்வது, நிதி சேகரிப்பது, போராட்டங்களை நடாத்துவது, தேர்தல்களில் போட்டியிடுவது என எல்லா வேலைகளையும் முன்னின்று செய்து, தமிழ் மக்கள் மத்தியில் கட்சியை வேரூன்ற வைத்தார். இந்த வேலைகளில் எல்லாம் கார்த்திகேசனின் துணைவியார் அவருக்கு பக்க பலமாக செயல்பட்டார்.

அதுமாத்திரமின்றி, தமது உறவினர்களான வசதியற்ற பலருக்கும், கட்சித் தோழர்களுக்கும் உதவிகள் பல செய்ததுடன், பல குழந்தைகளை வளர்த்து அவர்களுக்கு கல்வியறிவும் புகட்டினர். இந்த நடவடிக்கைகளில் எல்லாம் கார்த்திகேசனின் துணைவியார் ஒரு பரந்த மனப்பான்மையுடன் தனது கணவருடன் இணைந்து செயல்பட்டார்.

ஓரளவு ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, மிகத்திறமையாக பல்கலைக்கழகம் வரை கல்வி கற்று, யாழ்ப்பாண மேட்டுக்குடியினர்

எதிர்பார்க்கும் சகல தகுதிகளையும் கார்த்திகேசன் பெற்றிருந்த போதும், அவர் பெரும் உத்தியோகங்களை நாடிச் செல்லாததும், பெரும் சீதன பாதனத்துடன் வசதியான குடும்பங்களில் திருமணம் செய்யாததும், அவரது உறவினர்கள் உட்பட சிலருக்கு சீரணிக்க முடியாத ஒன்றாக இருந்தது. இதை கார்த்திகேசனும் நன்கு அறிவார்.

அதனால் காாத்திகேசன் தனது திருமணம் பற்றியும் நகைச்சுவையாகக் குறிப்பிடுவதுண்டு. சிலர் தமது மனைவிமாரை 'ரோசாப்பூக்கள்' (Roses) என வர்ணிப்பதுண்டு. கார்த்திகேசன் தனது மனைவியை Poor Rose அதாவது 'ஏழை ரோசா' என நகைச்சுவையாகக் குறிப்பிடுவார். சில வேளைகளில் அதை இரட்டை அர்த்தத்தில் 'பூவரச ரோஸ்' எனவும் குறிப்பிடுவார். பூவரசம் பூ யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் பூக்கும் ஒரு சாதாரண, ஆனால் அழகான, ரோசாப்பூவுக்கு ஒப்பான ஒன்று என்பதைக் குறிக்கவே அவர் அவ்வாறு குறிப்பிடுவதுண்டு.

கார்த்திகேசனின் மனைவி, உண்மையிலேயே ஒரு ரோசாவாக விளங்கினார் என்பதை, அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவார்கள்.

# 26. வான் பயிராய் வளர்ந்த பிள்ளைகள்

**கா**ர்த்திகேசன் தம்பதியினருக்கு ஐந்து பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்தனர். அவர்களில் ஆண் குழந்தை தனது வாலிப வயதில் இறந்துவிட, ஏனைய பெண் பிள்ளைகள் இன்று ஓரளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றனர்.

கார்த்திகேசன் கற்ற கல்வியின் அடிப்படையில் பார்த்தால், அவர் இலங்கையின் முதல்தரமான சிவில் உத்தியோகத்தராக விளங்கியிருக்க முடியும். அல்லது அவர் தனது அரசியலை கம்யூனிஸ்ட் கட்சியில் ஆரம்பிக்காமல், ஏதாவது ஒரு முதலாளித்துவக் கட்சியில் ஆரம்பித்திருந்தால், இலங்கை அரசில் ஒரு அமைச்சராகக் கூட அவர் வந்திருக்கக் கூடும். ஆனால் அவர் ஒரு ஆசிரியராக, அதுவும் கட்சிப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு பணியாற்றினார். அந்தக் கால யாழ்ப்பாண சமூகத்தில் ஆசிரியத் தொழிலும் கூட, ஒரு அந்தஸ்து மிக்க தொழிலாக இருந்ததுடன், ஓரளவு வருவாய் ஈட்டும் தொழிலாகவும் இருந்தது.

ஆனால் கார்த்திகேசன் தான் இறக்கும் வரை, ஒரு துண்டுக் காணியோ, சொந்த வீடோ இல்லாது இருந்ததுடன், பணம் பொருள் தேடி வைக்காதவராகவும் தான் வாழ்ந்தார். அதற்குக் காரணம் அவர் தனது உத்தியோக வருவாய் மூலம் கிடைத்த பணம் அனைத்தையும், தனது குடும்பத்தின் மிக அத்தியாவசிய தேவைகள் போக கட்சிக்கே செலவழித்தமை தான். (வேறு சில கட்சி உறுப்பினர்கள், வெறும் கையுடன் வந்து, சொத்துக்கள் தேடிக்கொண்ட வரலாறும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை)

கார்த்திகேசனின் இந்த நிலை கண்டு, அவரது உறவினர்களும், அவர் மீது அக்கறை கொண்டவர்களும் அடிக்கடி கவலைப்படுவது உண்டு. அதாவது யாழ்ப்பாண சமூகத்தில் பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள்,

அப்பிள்ளைகளுக்கு திருமணம் செய்யும் போது கொடுக்க வேண்டிய சீதனம் குறித்து கலங்குவதுண்டு. அப்படிப் பார்க்கையில் கார்த்திகேசன் ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து பெண் பிள்ளைகளுக்கு தந்தை. 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்ற பழமொழி வேறு, தமிழர்களால் ஆண்டாண்டு காலமாக உச்சரிக்கப்பட்டு வருவது.

உறவினர்களதும், நண்பர்களதும் கவலையை கார்த்திகேசனும் நன்கு அறிந்தே இருந்தார். ஆனால் அவர்கள் யாரும் தமது கவலையை அவரிடம் நேரில் வெளிப்படுத்தியது கிடையாது. இருந்தும் ஒருமுறை ஒருவர், அவரிடம் இதுபற்றி நேரடியாகவே பிரஸ்தாபித்துவிட்டார். அதற்கும் முதலில் கார்த்திகேசனின் வழமையான மென் புன்னகையே பதிலாக இருந்தது. ஆனால் சிறிது நேர சிந்தனையின் பின்னர், சிரிக்கவும் ஆழமாகச் சிந்திக்கவும் வைத்த பின்வரும் பதில் அவரிடம் இருந்து வந்தது.

"ஒரு வகையில் பார்த்தால் எனது பிள்ளைகளும் வான் பயிர்கள் தான். நாம் சில பயிர்களை தண்ணீர் ஊற்றி, பசளை இட்டு, நோய் வராமல் கிருமி நாசினி தெளித்து வெகு பக்குவமாக வளர்க்கின்றோம். இது ஒருவகைப் பயிர்ச் செய்கை. இன்னொரு வகையில் பருவ மழையை நம்பி மானாவாரியாக நெற்செய்கை செய்கின்றோம். அதுவும் பயன் தருகின்றது. இதுதவிர மா,பலா,தென்னை, பனை போன்ற பயன்தரும் மரங்களும் மானாவாரியாகவே வளர்ந்து காயத்துப் பயன் தருகின்றன. இதில் எனது பிள்ளைகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். அதாவது மானாவாரிப் பயிர்கள்."

கார்த்திகேசனின் இந்தக் கூற்று, தனது பிள்ளைப் பயிர்களை தண்ணீர் ஊற்றி வளர்க்கும் வசதியிருந்தும், அந்த வசதியை ஊர் நன்மைக்காக தியாகம் செய்துவிட்டு, மானாவாரியாக வளர்த்த ஒரு தியாகச் செம்மலின் வாக்குமூலம் என்றால் மிகையாகாது.

ஆம், அவர்கள் மானாவாரியாகவே வளர்ந்து, இன்று சீரும் சிறப்புமாகவும், தமது தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றியும் வாழ்ந்து வாழ்கின்றனர்.

# 27. கட்சிக் கொள்கை மீதும், கட்டுப்பாடு மீதும் கொண்ட உறுதிப்பாடு

**கா**ர்த்திகேசன் அவர்களின் குணாதிசயங்கள் பற்றி, அவருடன் பழகிய எல்லோரிடமும் சில பொதுவான கருத்துக்கள் உண்டு. அதாவது அவர் யாருடனும் கோபித்துப் பேசமாட்டார். பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயற்படுவார். உள் ஒன்று வைத்து வெளியில் வேறொன்று பேசமாட்டார். மிகவும் பொறுமைசாலி. (ஆதனால் தான் போலும் கட்சித் தோழர்கள் மத்தியில் ஏற்பட்ட அநேகமான முரண்பாடுகளின் போது, கட்சி அவரையே பெரும்பாலும் சமரச ஏற்பாட்டாளராகப் பயன்படுத்தி வந்திருக்கிறது.) இவையெல்லாவற்றுடனும் மிகுந்த தாராளவாதி என்ற கருத்தும் அவர் பற்றி உண்டு. இந்த ஒரு விடயத்தில் மட்டும் சில கட்சித் தோழர்கள் அவரிடம் குறை காண்பதுண்டு. அதாவது தேவையில்லாத விடயங்கள் அல்லது நபர்களிடம் அவர் தராளமாக நடந்து கொள்கிறார் என்று.

ஆனால் அவரது குணாதிசயங்கள் எவ்வாறு இருந்தாலும், கொண்ட கொள்கையில் அவர் எப்பொழுதும் நூலிழை பிசகாதவராகவும், உறுதியானவராகவுமே இருந்து வந்துள்ளார். அதேபோல, கட்சியின் ஸ்தாபனக் கட்டுப்பாட்டைப் பேணுவதிலும் அவர் எப்பொழுதும் கறாராகவே இருந்து வந்துள்ளார். இதற்கு இரண்டு உதாரணங்கள் கூறலாம்.

எமது கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த நா.சண்முகதாசன், உட்கட்சி விமர்சனங்களைத் தொடர்ச்சியாகப் புறந்தள்ளி, கட்சியை ஏனைய ஏகாதிபத்திய – எதிர்ப்பு மற்றும் முற்போக்கு சக்திகளிடமிருந்து தனிமைப்படுத்தும் வகையில், இடது ஒருமுனைவாதப் பாதையில் செயற்பட்டு வந்ததால், 1972ல் கட்சியின் பெரும்பான்மையான மத்தியகுழு உறுப்பினர்களும், கட்சி உறுப்பினர்களும் கூடி முடிவெடுத்து, அவரைக் கட்சியிலிருந்து விலக்கியதுடன், கட்சியின் பெயரை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என மாற்றி செயற்படத் தொடங்கினர்.

புதிய கட்சியின் எதிர்காலக் கொள்கைகள், வழிமுறைகள், திட்டங்கள் குறித்து, கட்சிக்குள் காரசாரமான, ஆனால் ஆரோக்கியமான விவாதங்கள் தொடர்ந்து நடந்த வண்ணமிருந்தன. இந்தச் சூழ்நிலையில், சண்முகதாசனின் இடது தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் இணைந்து கொண்ட, சில வலது சந்தர்ப்பவாதிகளும் புதிய கட்சிக்குள் வந்துவிட்டிருந்தனர். ( நால்வர் அடங்கிய அக்குழுவினர், 'நால்வர் கோஷ்டி' என அழைக்கப்பட்டுப் பின்னர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்) இந்த சக்திகளின் தவறான போக்கை விமர்சித்த சில நேர்மையான தோழர்கள், அந்த விமர்சனங்களைத் தாம் அங்கம் வகித்த கட்சி மத்திய குழுவுக்கு வெளியேயும் செய்ய ஆரம்பித்தனர்.

இந்த விடயம், தோழர் கார்த்திகேசனும் அங்கம் வகித்த மத்தியகுழுக் கூட்டமொன்றுக்கு தோழர் ஒருவரால் எடுத்து வரப்பட்டது. அப்படிச் செயற்பட்ட தோழர்களின் நடவடிக்கைகள் குறித்து இரண்டு விதமான அபிப்பிராயங்கள் மத்தியகுழுவில் நிலவின. கட்சிக்கு எதிராகச் செயற்படுபவர்களை எங்கே விமர்சித்தாலும் பரவாயில்லை என்பது சிலரது கருத்தாக இருந்தது. ஆனால் எல்லோரும் இந்த விடயத்தில், கட்சிக்குள் அனைவராலும் ஏகோபித்த முறையில் மதிக்கப்படும் கார்த்திகேசனின் கருத்தை அறிய ஆவலாக இருந்தனர்.

தனது கருத்தைச் சொல்ல முன்வந்த கார்த்திகேசன், ஒரு உதாரணத்தைக் குறிப்பிட்டுப் பேசினார்.

'அதாவது நாம் மூக்கில் சளி வந்துவிட்டால் என்ன செய்கிறோம்? நடுவீதி என்றும் பார்க்காமல், அதை வீதியில் சீறி எறிந்துவிட்டுச் செல்கின்றோம். அது மற்றவர்களின் காலில் மிதிபட்டு, அவர்களுக்கு சுகாதாரக் கேட்டை உண்டுபண்ணுகிறது. ஆனால் வெள்ளைக்காரன் என்ன செய்கிறான்? தனது சட்டைப் பைக்குள் இருக்கும் கைக்குட்டையில் தனது மூக்குச் சளியை சீறி வீட்டுக்கு எடுத்துச் சென்று தோய்க்கிறதைத் தோய்த்து, வெளுக்கிறதை வெளுத்து கைக்குட்டையைச் சுத்தமாக்குகிறான். அதனால் மூக்கும் சுத்தமாகிறது, கைக்குட்டையும் சுத்தமாகிறது, வீதியும் சுத்தமாகிறது. எனவே நீங்களும் ஏனைய தோழர்கள் பற்றிய என்ன பிரச்சினை யானாலும், அதை கட்சி ஸ்தாபனத்துக்குள் எடுத்து வாருங்கள். இங்கு நாங்கள் அதை தோய்த்து சுத்தப்படுத்திக் கொள்வோம்.'

இதுதான் கார்த்திகேசன் வழங்கிய அறிவுரை. அதன் பின்னர் உட்கட்சி விமர்சனங்கள் ஒரு சீரான பாதையில் நடைபெற ஆரம்பித்தன.

மற்றைய சம்பவமும் இதற்கு ஒத்ததே. கட்சியின் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்த ஒரு தோழர், கட்சியின் வழிகாட்டுதலை ஏற்காமல் தனது எண்ணப்படி செயற்பட்டு வந்தார். அவருக்கு சில ஆலோசனைகள் கூறி, அவரை சரியான பாதைக்கு இட்டு வருவதற்கு கார்த்திகேசனை கட்சி அவரிடம் அனுப்பி வைத்தது.

அந்தத் தோழர் ஒரு அச்சகத்தில் வேலை செய்பவராக இருந்தபடியால், அவரை கார்த்திகேசன் அவர் வேலை செய்யும் இடத்தில் சென்று சந்தித்தார். அவரது முதலாளி மிகவும் கண்டிப்பானவர். வேலை நேரத்தில் தனது தொழிலாளர்கள் வெளியாட்கள் எவரையும் சந்திக்க அனுமதிக்கமாட்டார். இந்த விவரம் தெரியாமல் சென்ற கார்த்திகேசனை, எமது தோழர் முதலாளியின் வழமையையும் மீறி வரவேற்று உபசரித்ததுடன், ஒரு ஆசனத்தையும் வழங்கி உட்கார வைத்து, தனது முதலாளிக்கும் 'இவர் யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபலமான கல்லூரி அதிபர்' என்று கூறி, தனது அவரது ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டார்.

ஆனால் இந்த நடவடிக்கையால் பூரண திருப்தி அடையாத கார்த்திகேசன், அந்தத் தோழருடன் சிறிது நேரம் பொறுமையுடன் உரையாடி, "நீங்கள், உங்கள் வேலை ஸ்தாபனத்தின் கட்டுப்பாட்டையும் மீறி, எனக்கு தரும் இந்தத் தனிப்பட்ட மதிப்பைத் தயவுசெய்து கட்சி ஸ்தாபனத்துக்குத் தாருங்கள்" என்று கூறி அந்தத் தோழரைச் சரியான பாதைக்குக் கொண்டு வந்துவிட்டார்.

இந்த விடயத்தை அந்த அச்சகத் தோழரே பின்னர் எமக்குக் கூறி, கார்த்திகேசனின் கட்சி உணர்வு குறித்துப் பெருமைப்பட்டார்.

# 28. ஜீ.ஜீ. – சீ...சீ!

## விண்ணன் பொன்னன் பண்ணியதென்ன?

**த**மிழர்களின் மூத்த அரசியல் கட்சி தமிழ் காங்கிரஸ் ஆகும். அக்கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் 'முடிசூடா மன்னன்'' என அழைக்கப்பட்டதுடன், அவரது உத்தரவை என்ன விலை கொடுத்தும் நிறைவேற்ற அவரது ஆதரவாளர்கள் கூட்டமும் எப்பொழுதும் தயாராகவே இருந்தது. அவருடன் ஒன்றாக இருந்து பின்னர் பிரிந்து சென்று, தனியாக தமிழரசுக்கட்சி என்ற புதிய அமைப்பை உருவாக்கிய வன்னியசிங்கம், செல்வநாயகம், நாகநாதன், அமிர்லிங்கம் போன்றோர், ஆரம்ப காலங்களில் தமது கட்சியின் கூட்டங்களை நடாத்துவதற்குக் கூட தமிழ் காங்கிரஸார் அனுமதிப்பதில்லை.

தமிழரசுக்கட்சியினர் எங்காவது பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்தால், தமிழ் காங்கிரஸார் அங்கு சென்று அவர்களை அடித்துக் கலைத்துவிட்டு, அதே மேடையில் தமது கூட்டங்களை நடாத்துவது வழமை. அதனால், ஆரம்ப காலத்தில் தமிழரசுக்கட்சி, தனது கட்சி பொதுக்கூட்டங்களை நடாத்துவதற்கு, கம்யூனிஸ்ட் கட்சி தான் மேடைப் பாதுகாப்பை வழங்கி வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி அவ்வாறு செய்ததிற்கு சில காரணங்கள் இருந்தன.

முதலாவது காரணம், தமிழ் காங்கிரஸ் கட்சி யாழ்ப்பாணத்தின் மிகவும் பிற்போக்கான, சாதி வெறி பிடித்த, நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடி குழாமின் பிரதிநிதியாகும்.

இரண்டாவது காரணம், இலங்கையின் படுபிற்போக்கான, ஏகாதிபத்திய சார்பு, நிலப்பிரபுத்துவ சார்பு, பெரும் முதலாளித்துவ சார்பு சக்திகளின பிரதிநிதியான ஐக்கிய தேசியக் கட்சியின் மறுபதிப்பாகவே தமிழ் காங்கிரஸ் தமிழ் பகுதிகளில் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

மூன்றாவது காரணம், ஆரம்பகால தமிழரசுக்கட்சி ஓரளவு உண்மையான தமிழ் தேசியவாத சக்திகளின் பிரதிநிதியாக இருந்தது.

நான்காவது காரணம், 1953ல் ஐ.தே.க. அரசின் மக்கள் விரோத வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து, இடதுசாரிக் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட, மாபெரும் ஹர்த்தால் போராட்டத்தில், தெற்கில் ஐ.தே.கவிலிருந்து வெளியேறிய பண்டாரநாயக்கவின் சிறீலங்கா சுதந்திரக்கட்சி பங்குபற்றியது போல, வடக்கில் தமிழ் காங்கிரசில் இருந்து வெளியேறியவர்களால் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சியும் பங்குபற்றியதாகும்.

ஆனால் பிற்காலத்தில், குறிப்பாக 1956 தேர்தலில் அமோக வெற்றி பெற்று, காங்கிரஸ் கட்சியைப் பின்னுக்குத் தள்ளிய பின்னர், தமிழரசுக்கட்சியும், காங்கிரஸ் கட்சியின் பாதையில் பயணித்து, இனவாதப் போக்கிலும், ஐ.தே.க சார்பாகவும், ஏகாதிபத்திய சார்பாகவும் மாறி தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்துவிட்டது.

அதன் பின்னர் தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரசும் ஏட்டிக்குப் போட்டியாக மாறி, கீரியும் பாம்புமாகச் செயற்பட்டாலும், ஜீ.ஜீ.பொன்னம்பலம் தனது சரிவிற்கு கார்த்திகேசன் மீதே அளவு கடந்த கோபமாக இருந்தார். ஏனெனில் பொன்னம்பலம் ஐ.தே.க அரசில் அமைச்சராக இருந்தபோதும், பின்னரும் செய்த மக்கள் விரோத செயற்பாடுகளை, கார்த்திகேசனே தீவிரமாக மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியவராவார். பொன்னம்பலம், ஐ.தே.க அரசுகள் மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும், மலையக மக்களின் பிரஜாவுரிமை – வாக்குரிமை பறித்த செயலையும் ஆதரித்தபடியால், அவர் சம்பந்தமாக கார்த்திகேசன் பயன்படுத்திய ''ஜீ.ஜீ. – *சீ சீ*'' என்ற வார்த்தையும், 'விண்ணன் பொன்னன் பண்ணியதென்ன?' என்ற கேலி கலந்த கேள்வியும், ஒரு காலத்தில் பல தமிழ் மக்களது வாய்களிலும் எதிரொலித்ததைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

கார்த்திகேசன் தனக்கு எதிராகக் காட்டமாக மேற்கொண்ட விமர்சனங்களே, தனது செல்வாக்கு தமிழ் மக்கள் மத்தியில் சரிவதற்குப் பிரதான காரணம் என பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பொன்னம்பலமே குறிப்பிட்டிருக்கிறார்.

அதுமட்டுமின்றி 1956 பொதுத்தேர்தலில், யாழ்ப்பாணத் தொகுதியில் பொன்னம்பலத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கார்த்திகேசனும் போட்டியிட்டார். அத்தேர்தலில் பொன்னம்பலம் வெற்றி பெற்றாலும், கார்த்திகேசனும் கணிசமான வாக்குகள் பெற்று கட்டுப்பணத்தைப் பெற்றார்.

அத்தேர்தலில் சமசமாஜக்கட்சி தனது வேட்பாளரை நிறுத்தாமல் விட்டிருந்தால், சில வேளைகளில் பொன்னம்பலத்தை தோற்கடித்து கார்த்திகேசன் யாழ்ப்பாணத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகியிருப்பார். ஏனெனில் கம்யூனிஸ்ட் - சமசமாஜ வேட்பாளர்கள் இருவரும் எடுத்த மொத்த வாக்குகள், பொன்னம்பலம் எடுத்த வாக்குகளை அண்மித்திருந்தன. அதனால் யாழ். கச்சேரியில் வாக்குகள் எண்ணப்படும் போது, தான் தோற்றுவிடுவோமோ என்ற பயத்தில், பொன்னம்பலம் தனது ஆசனத்தில் இருக்காமல், தனது கைத்தடியுடன் அங்குமிங்குமாக உலாவித் திரிந்ததாக, பின்னாளில் அவரது ஆதரவாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

# 29. நல்லூர் கந்தனுக்கு எதிர்ப்பக்கம் தலைசாய்க்கும் கார்த்திகேசன்!

**யா**ழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. சிங்கள மக்களுக்கு, அவர்களது புராதன இராசதானியாகிய கண்டியில் நடைபெறும் 'பெரஹரா' நிகழ்ச்சி எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு முக்கியமானது தமிழ் மக்களுக்கு நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவம். வருடந்தோறும் ஆவணி மாதத்தில் 25 தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் இந்த உற்சவத்துக்கு, உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களும் பல்லாயிரக்கணக்கில் வந்து குவிவர். இந்த உற்சவம் வெறும் ஆலயச் சடங்காக மட்டுமின்றி, நீண்டகாலம் பிரிந்திருந்வரின் ஒன்றுகூடலாகவும், பல திருமணங்களின் நிச்சயதார்தத்துக்குரிய சந்தர்ப்பமாகவும் அமைந்து விடுவது, இதன் இன்னொரு சிறப்பாகும்.

அந்நியர் வருகைக்கு முன்னர் நல்லூரில் தமிழர்களின் அரசாட்சிக்நநகுரிய இராசதானி அமைந்திருந்ததும், அதையும் அங்கு அமைந்திருந்த கந்தசாமி கோவிலையும் அந்நியர் பல தடவைகள் அழிக்க முயன்றமையும், அதை எதிர்த்து தமிழர்கள் போராடியமையும் பழைய வரலாறு. அதுவும் நல்லூர் கந்தசாமி கோவிலின் சிறப்புக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இந்த சிறப்புகளின் காரணமாகவோ என்னவோ, இன்று வரை இலங்கையின் ஆட்சியதிகாரத்தில் இருந்த, இருக்கின்ற அரச தலைவர்கள் அந்தக் கோவிலுக்கு உரிய மதிப்பை வழங்கத் தவறுவதில்லை. புலிகளுக்கும் அரசுக்கும் போர் நடந்த இந்த 30 ஆண்டுகாலத்தின் போது கூட, இராணுவம் ஒரு தடவையாவது நல்லூர் கோவிலின் மீது தாக்குதல் நடாத்தியதில்லை என்பதுடன், வருடாவருடம் தேர்த்திருவிழாவின் போது, அரசாங்கத்தின் சார்பாக இராணுவ ஹெலிகொப்டர்கள் கோவிலின் மேலாகத் தாழப்பறந்து மலர் தூவியும் வந்துள்ளன. நல்லூர் திருவிழா காலங்களில் போரின் உக்கிரம் தணிந்துவிடும் என்ற ஒரு நம்பிக்கையும் பொதுமக்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது.

இதற்கு எதிர்மாறாக, புலிகள் நல்லூர் கோவில் வீதியில் தமது அரசியல் பொறுப்பாளர் திலீபனின் சாகும்வரை உண்ணா விரதத்தை ஏற்பாடு செய்ததுடன், அவர் மரணித்த பின்னர் கோவில் வீதியில் அவரது ஞாபகார்த்த ஸ்துாபியை நிறுவி அந்த இடத்தை அரசியல் களமாக்கினர். அதுமாத்திரமின்றி யுத்தத்தில் இறந்த தமது உறுப்பினர்களின் சடலங்களையும், தம்மால் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களையும் காட்சிக்கு வைக்கும் இடமாகவும் நல்லூர் கோவிலின் வீதிகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் எந்தவொரு உள்நாட்டு - வெளிநாட்டுத் தலைவர்களும், நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சென்று வணங்கத் தவறுவதில்லை. உற்சவ காலத்தில் நல்லூர் கோவிலின் தேர்த் திருவிழா அன்று, யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றச் செயற்பாடுகளே ஒத்தி வைக்கப்படும் அளவுக்கு அதன் முக்கியத்துவம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றால் மிகையாகாது.

நல்லூர் ஆலயத்தின் இந்தச் சிறப்புகளுக்கு மத்தியில், நல்லூர் இராசதானியின் வரலாற்றில் சில கறைபடிந்த, அத்தியாயங்களும் இருக்கவே செய்கின்றன. அவை தமிழர்கள் வரலாற்றுப் பெருமை பேசும் நல்லூரை அரசாண்ட சங்கிலி மன்னனால் நிகழ்த்தப்பட்டவை. சங்கிலி மன்னன் தனது ஆட்சியின் போது, தனது படைகளை அனுப்பி மன்னாரில் முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் நூற்றுக்கணக்கில் வெட்டிக் கொலை செய்தது மட்டுமின்றி, நல்லூரில் வாழ்ந்த முஸ்லீம் மக்களையும் அங்கிருந்து விரட்டியடித்த 'பெருமை'க்குரியவன். 1990ல் புலிகள் வடபகுதியிலிருந்து முஸ்லீம் மக்களை விரட்டியதை நோக்குகையில், 'யாழ்ப்பாணியத்தின்' இந்த இன, மத சுத்திகரிப்பு நிலைப்பாடு, பிரபாகரனின் மண்டையில் உதித்தது அல்ல, சங்கிலியனிடம் இரவல் வாங்கிய ஒன்று என எண்ணத் தோன்றுகிறது.

எது எப்படியிருந்த போதிலும், நல்லூருக்கும், அங்கு 'குடி கொண்டிருக்கும்' முருகனின் பூசக தலைமுறையினருக்கும் இன்னொரு பெருமைக்குரிய வரலாறும் உண்டு. அது அங்கு பிறந்து வளர்ந்த இராமசாமி ஐயர் என்பவர், கார்த்திகேசன் யாழ்ப்பாணம் சென்று கம்யூனிஸ்ட் கட்சி வேலைகளை ஆரம்பித்த போது, அவருடன் இணைந்து கட்சியை அங்கு கட்டியெழுப்பியவர்களில் ஒருவர் என்ற பெருமையாகும்.. அவர் தனது நாளாந்தக் கடமைகளுடன், நல்லூரில் 'லலித விலாச புத்தகசாலை' என்ற பெயரில் புத்தக நிலையம் ஒன்றையும் நிறுவி, அதில் மார்க்சிய மற்றும் முற்போக்கு நூல்களை விற்பனை செய்து வந்துள்ளார்.

கார்ல்மாக்சும் பிரெடரிக் ஏங்கல்சும் முதன்முதலில் வெளியிட்ட 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யை (Communist Manifesto), நீர்வேலியைச் சேர்ந்த கந்தையா என்ற தோழர் தமிழில் மொழிபெயர்க்க, அதை இராமசாமி ஐயர் 1948ம் ஆண்டு தமது புத்தக நிலையத்தால் வெளியிட்டும் உள்ளார்!

இராமசாமி ஐயர் நல்லூரில் புத்தகக் கடை நடாத்துவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் போன்ற பிரபலமான கோவில்களின் உற்சவங்களின் போதும், தனது புத்தகக் கடையை அங்கு கொண்டு சென்று, அங்கு வரும் மக்களுக்கும் முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பி வந்துள்ளார். அதுமட்டுமின்றி, கட்சிப் பத்திரிகை விற்பது, சுவரொட்டி ஒட்டுவது உட்பட கட்சியின் அனைத்து வேலைகளிலும் அவர் தவறாது பங்குபற்றி வந்துள்ளார்.

கட்சிக்கு அவரது பங்களிப்பை மிக உயர்வாக மதிப்பிடும் தோழர் கார்த்திகேசன், கூட்டங்களில் பேசும்போது, " ஒரு ஐயனும் எமது கட்சியில் இருந்தான்" என உரத்த தொனியில் பெருமையுடன் கூறுவார்.

ஒருமுறை நல்லூர் உற்சவ காலத்தில், கார்த்திகேசனை சந்தித்த பக்தர் ஒருவர், அவரிடம் "நீங்கள் திருவிழா காலங்களில் நல்லூரானைத் தரிசிப்பதில்லையா?" என சிரத்தையுடன் வினவினார்.

அதற்குப் பதிலளித்த கார்த்திகேசன், "நானும் இடையிடையே நல்லூர் பக்கம் போவதுண்டு. ஆனால் எல்லோரும் அந்தப் பக்கம் முருகப் பெருமானுக்காக தலையைச் சரிக்க, நான் இந்தப் பக்கமாக, எங்கள் தோழர் இராமசாமி ஐயரின் வீட்டுப் பக்கம் தலையைச் சரிப்பதுண்டு" என நகைச்சுவையுடனும், மிகவும் அர்த்த புஸ்டியுடனும் பதிலளித்தார்.

நல்லைநகர், தமிழரின் சைவ சமய ஆகம நெறிகளைக் கட்டிக்காத்த ஆறுமுக நாவலரை மட்டும் அந்த மண்ணுக்கு வழங்கவில்லை, அந்த மக்களை அறியாமையிலிருந்தும், மூட நம்பிக்கைகளிலிருந்தும் விடுவிக்கப் போராடிய இராமசாமி ஐயரையும் வழங்கியது என்பதால், அந்த மண்ணுக்கு இரட்டைச் சிறப்பு உண்டு என்று கூறலாம்.

# 30. செல்வநாயகம் விரும்பாத இரண்டு தமிழர்களும், கார்த்திகேசனின் தீர்க்கதரிசனமும்

தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாம்தான் என்று புலிகள் முன்வைத்த நிலைப்பாடு, இன்று வரலாற்றால் துடைத்தெறியப்பட்டுவிட்டது. தமிழ் மக்களையும் அழித்து, அவர்கள் தாங்களும் அழிந்து போனார்கள். தமிழீழத் தனிநாட்டுப் போராட்டம் ஆரம்பமாகிய பின்னர், தமிழ் தேசியவாதிகள் தவிர்ந்த ஏனையோர் தமிழ்ப் பகுதிகளில் அரசியல் வேலை செய்ய முடியாத ஒரு நிலை உருவாகியது. இடதுசாரிகள் உட்பட தேசியக் கட்சிகளைச் சேர்ந்த பலர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தவிர்ந்த ஏனைய பிரச்சினைகளான பொருளாதாரம், சாதியம், பெண்ணடிமைத்தனம், சீதன முறைமை போன்ற பிரச்சினைகளைப் பேசியோர், இன விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்பும் 'துரோகிகள்' என முத்திரை குத்தப்பட்டனர். புலிகள் மட்டுமின்றி அநேகமாக எல்லாத் தேசியவாத இயக்கங்களினதும் நிலைப்பாடு இதுவாகவே இருந்தது.

பின்னர் புலிகள் இராணுவ ரீதியாகப் பலம் பெற்று, ஏனைய இயக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக அழித்த பின்னர், தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டை பலவந்தமாக தமிழ் மக்களின் மீது திணித்துக் கொண்டனர். நிர்ப்பந்தம் காரணமாவும், புலிகளுடைய ஆயுதங்களுக்கு அஞ்சியும், தமிழர்களது மிதவாத தலைமைகளும் அந்நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டன. புலிகளது ஏகப்பிரதிநிதித்துவ நிலைப்பாட்டுக்கு ஒருவராலும் சவால் விட முடியவில்லை.

புலிகளது ஏகப்பிரதிநிதித்துவ நிலைப்பாட்டை எதிர்த்தவர்களும், விரும்பாதவர்களும் கூட, மனதளவில் புலிகளைத் திட்டிவிட்டு மௌனித்துக் கொண்டனர். புலிகளின் இந்த நிலைப்பாட்டுக்குக் காரணம், அந்த இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் என்பது அநேகமாக

எல்லோரதும் அபிப்பிராயமாக இருந்ததால், அவரையும் இரகசியமாகத் சரமாரியாகத் திட்டித் தீர்த்தனர். பிரபாகரன் பிறந்து வளர்ந்த சமூகச் சூழ்நிலையும், அவரது தனிப்பட்ட குணாம்சங்களும் புலிகள் இயக்கத்தின் பாசிச செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தியுள்ளன என்பது ஒரு மறுக்க முடியாத உண்மைதான்.

ஆனால் வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறும் தொடர்ச்சியுமே தவிர, தனி நபர்களின் வரலாறும் தனிப்பட்ட நிகழ்ச்சிகளும் அல்ல என்ற மார்க்சிய கோட்பாட்டுக்கேற்ப, புலிகளின் செயற்பாடுகளும், அவர்களது முன்னைய பிற்போக்குத் தமிழ் தலைமைகளின் வர்க்க அரசியலும் தொடர்ச்சியும் தான். பழைய பிற்போக்கு தமிழ் தலைமைகளி லிருந்து தான் பெரும்பாலான தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோன்றின. உண்மையில் பழைய பிற்போக்கு தமிழ் கட்சிகளுக்கும், புதிதாகத் தோன்றிய தமிழ் இளைஞர்களின் ஆயதப் போராட்ட இயக்கங்களுக்கும் கொள்கைகளில் எந்தவிதமான வித்தியாசங்களும் இருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழ் காங்கிரஸ், தமிழரசு கட்சிகளின் ஆயுதம் தாங்கிய வடிவங்களே ஆயுதப் போராட்ட இயக்கங்கள் எனலாம்.

அதேபோல, இயக்கங்களின் நடைமுறைகளிலும் பெரிய வித்தியாசம் இருக்கவில்லை. உட்கட்சி ஜனநாயகத்தைப் பேணத்தவறியதிலும், பொதுமக்களின் மீது எதேச்சாதிகாரத்தைப் பிரயோகித்ததிலும் புலிகளுக்கும், பெரும்பாலான மற்ற இயக்கங்களும் பெரும் வித்தியாசம் எதுவும் இருக்கவில்லை. புலிகளுக்கு பதிலாக வேறோர் இயக்கம் முதன்மை நிலைக்கு வந்திருந்தாலும், புலிகள் போலவே பாசிய செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பர் என்பது விடயமறிந்த பல பொதுமக்களின் கருத்தாக இருக்கின்றது.

தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து வந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சியும் இறுதியில் காங்கிரசின் பாதையில் பயணித்ததும் அவ்வாறு தான். அதுமட்டுமல்ல கீரியும் பாம்புமாக இருந்த காங்கிரஸ் - தமிழரசு கட்சிகள் கொள்கைரீதியாக முரண்பாடற்ற கட்சிகள் என்றபடியால் தான் 1976ல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி, ஒரே கட்சியாக, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியாக தம்மை உருமாற்றிக் கொண்டன. அந்த வழியிலேயே பின்னர் வந்த தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் பயணித்ததுடன், புலிகளும் அவ் வழியிலேயே சென்றனர். அதற்குக் காரணம் அவர்கள் எல்லோரதும் ஒரே அடிப்படை பிற்போக்கு தமிழ் தேசியவாதமாகும்.

தேசியவாதப் போக்கு கூர்மையாக, அதாவது ஆயுதப் போராட்டமாகப் பரிணமிக்கும் போது, முதலில் அவர்கள் முன்வைப்பது ஏகப்பிரதிநிதித்துவக் கோட்பாட்டைத்தான். இரண்டாவதாக அவர்கள் பின்பற்றுவது பாசிச நடைமுறையைத்தான். இது ஹிட்லர் முதல் பிரபாகரன் வரை அனைவருக்கும் பொருந்தும் ஒன்றாகும்.

இதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது ஏன் என்றால், தமிழ் தேசியவாதிகளின் முறையான ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகி, பாசிசப் புலிகள் தலையெடுப்பதற்கு முன்னரே, 1977 செப்ரெம்பரில் தோழர் கார்த்திகேசன் மரணமாகிவிட்டார். ஆனால் வெகுகாலத்துக்கு முன்னரே, தமிழ் பாசிசம் தோன்றுவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை மிகுந்த தீர்க்க தரிசனத்தோடு அவதானித்து எம்மை எச்சரித்திருந்தார். அதற்கு அவர் தனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை எப்பொழுதும் சுட்டிக்காட்டுவதுண்டு.

கார்த்திகேசன் 1950களின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வந்து கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில், பொது வைபவம் ஒன்றில் தமிழரசுக்கட்சி தலைவர் செல்வநாயகத்துடன் ஒன்றாகப் பங்குபற்றும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த வைபவத்தின் போது நிகழ்ச்சி அமைப்பாளர்களில் ஒருவர், செல்வநாயகம் அவர்களுக்கு கார்த்திகேசனை அறிமுகம் செய்து வைத்தார். அறிமுகம் முடிந்த பின்னர், செல்வநாயம், கார்த்திகேசனைப் பார்த்து முதலாவதாகக் கேட்ட கேள்வி, 'தமிழர்களில் இரண்டு விதமான தமிழர்களைப் பற்றிப் பேசும் கார்த்திகேசன் நீங்கள் தானா?' என்பதாகும்.

செல்வநாயகம் இந்தக் கேள்வியைக் கேட்டதின் நோக்கம், தாங்கள் தமிழன் எல்லோரும் ஒன்றாக ஐக்கியப்பட வேண்டும் என வலியுறுத்திவர, இந்த கார்த்திகேசன் வந்து தமிழனைப் பிரிக்கப் பார்க்கிறார் என்பதாகும். ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சாரக் கூட்டங்களில் பேசிய கார்த்திகேசன், தமிழர்கள் எல்லோரும் ஒன்றல்ல, அவர்களில் சுரண்டுபவனும் சுரண்டப்படுபவனும், சாதி வெறியனும் சாதி ஒடுக்குமுறைக்குள்ளாகுபவனும் எனப் பல வடிவங்களில் தமிழர்கள் ஒன்றுபட முடியாது பிரிக்கப்பட்டுள்ளனர். எனவே அடக்கி ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள் அவற்றுக்கெதிராகப் போராட வேண்டும் என அறைகூவல் விடுத்து வந்தார்.

இந்த ஏற்றத்தாழ்வுகளைத் தெரிந்திருந்தும், அவற்றைக் களைவதற்குப் பதிலாக, அதைப் பேணிக்கொண்டு யாழ்ப்பாண உயர்குழாமினருக்கு

வசதியான முறையில் தமிழர்கள் எல்லோரும் ஒரு பிரச்சினையுமில்லாமல் ஒன்றாக இருக்கு வேண்டும் என்பதே செல்வநாயகத்தினதும், அவரது தமிழரசுக்கட்சியினதும் எதிர்பார்ப்பாக இருந்தது. எனவேதான் கார்த்திகேசனைப் பார்த்து செல்வநாயகம் அவ்வாறு கேட்டார்.

செல்வநாயகத்தின் இந்தக் கேள்வியை எப்பொழுதும் நினைகூரும் கார்த்திகேசன், 'இது ஒரு அபாயகரமான போக்கு. இது ஜனநாயகத்தின் அச்சாணியான பல கருத்துக்கூறும் சுதந்திரத்தை மறுப்பதாகும். சோசலிச நாடுகளில் கருத்துச் சுதந்திரம் இல்லையென்று நாளும் பொழுதும் பிரச்சாரம் செய்யும் இந்த முதலாளித்துவவாதிகள், உண்மையில் தாம்தான் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள். அதனால் தான் தமிழர்களுக்கிடையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள், மற்றும் முரண்பாடுகள் பற்றிக் கூறும் என் போன்றவர்கள் பற்றி அவர்கள் கடுப்புக் கொள்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்.

எனவே பிரபாகரன் முன்வைத்த, 'புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள்' என்ற கோட்பாட்டின் பிதாமகன், 'தந்தை செல்வநாயகம்' என்பதே உண்மையாகும். அதை பிரபாகரன் துப்பாக்கி முனையில் தமிழ் மக்கள் மேல் பிரயோகித்தார் என்பது மட்டுமே ஒரு வித்தியாசம்.

எல்லாம் வர்க்க அரசியலின் தொடர்ச்சி தான் என்பதையே இந்த விடயம் மீண்டும் ஒருமுறை நிரூபித்து நிற்கிறது. அந்த உண்மையை எமது கார்த்திகேசன், நாம் நடைமுறையில் பல இழப்புகளின் மத்தியில் அதைக் கற்றுக் கொள்வதற்கு வெகுகாலத்துக்கு முன்னரே, சொல்லிச் சென்றதைத்தான், நம் முன்னோர்கள் தீர்க்கதரிசனம் என்று சொன்னார்கள் போலும்.

# 31. பள்ளிச் சுவரில் நொள்ளைச் சுலோகம்

**கா**ர்த்திகேசன் தனது கல்விச் சேவையின் இறுதிக் காலத்தில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வுபெற்றார். அந்தக் கல்லூரி அமைந்திருந்த இடம், ஆ.தியாகராசா அந்த நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வட்டுக்கோட்டைத் தொகுதியில் இருந்தது. தியாகாராசாவும் முன்னர் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்தவர். அவரது சொந்த ஊரான காரைநகரில் உள்ள பாடசலையொன்றுக்கு தற்பொழுது அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தியாகராசா சற்று முன் கோபக்காரர். தனது கருத்தில் எப்பொழுதும் பிடிவாதமாக இருப்பவர் எனப் பெயர் பெற்றவர். ஆனால் தனது தொகுதி அபிவிருத்தியில் அக்கறையுள்ளவர். எனவே கார்த்திகேசன் அதிபராக இருந்த பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அபிவிருத்திக்கும், தனது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பணம் ஒதுக்கத் தயங்கவில்லை. அடிக்கடி அப்பாடசாலைக்கு வந்து பார்வையிடுவதும் அவரது வழக்கம்.

அந்தக் காலகட்டத்தில் 1970 பொதுத்தேர்தலில் தியாகராசாவிடம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோல்வியுற்றிருந்த, அந்தத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் செயலாளருமான அ.அமிர்தலிங்கம், தியாகராசாவின் செல்வாக்கை மட்டம் தட்டுவதற்குப் பல வழிகளிலும் முயன்று கொண்டிருந்தார். அதில் ஒன்று, அமிர்தலிங்கத்தின் ஆதரவாளர்கள், தியாகராசா செல்லும் வழிகளில் நின்று 'பனித் தியாகா' எனக் கோசம் போடுவது, இன்னொன்று, சுவர்களில் தியாகராசாவை 'துரோகி' என வர்ணித்து சுலோகங்கள் எழுதுவது.

எனவே கார்த்திகேசன் அதிபராக இருந்த பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிச் சுவரிலும், ஒருமுறை அமிர்தலிங்கத்தின் ஆதரவாளர்களால் கொட்டை எழுத்துக்களில் தியாராசாவுக்கு எதிரான சுலோகங்கள் எழுதப்பட்டன. ஆனால் அந்தச் சுவர்கள் நீண்ட காலம் வெள்ளையடிக்கப்படாமல் இருந்ததால், சுலோகங்கள் தெளிவாக அமையவில்லை. அந்தச்

சுலோகங்கள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் அதிபர் கார்த்திகேசனும் இருந்துவிட்டார்.

ஆனால் அதையறிந்த தியாகராசா மிகவும் ஆத்திரப்பட்டுப் போனார். கம்யூனிஸ்ட்டான கார்த்திகேசன், தன்மீதுள்ள அரசியல் எதிர்ப்புக் காரணமாகவே சுலோகங்களை அழிக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார் என்பதே, தியாகராசாவின் கோபத்துக்குக் காரணம். எனவே இதுபற்றி கார்த்திகேசனிடம் சற்றுக் கடுப்பாக விளக்கம் கேட்டார்.

தியாகராசா போல் அல்லாது அரசியலில் நீண்ட கால அனுபவசாலியான கார்த்திகேசன், தான் ஏன் அந்தச் சுலோகங்களை அழிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை தியாகராசாவுக்கு விளக்கினார். அதாவது அந்தச் சுலோகங்களை அழிப்பதற்காகச் சுவர்களுக்கு வெள்ளையடித்தால், அதை எழுதியவர்கள் முன்னரிலும் பார்க்க மேலும் தெளிவாக எழுத அது வசதியாகப் போய்விடும் என்பதை கார்த்திகேசன் விளக்கிக் கூறினார். ஆனால் அதைக்கேட்டு திருப்திப்படாத தியாகராசா, அதை எப்படியும் அழித்துவிட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார். கார்த்திகேசனும் வேறு வழிலில்லாமல் அவற்றை அழிப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

சுலோகங்களை மறைத்து பாடசாலை மதில் சுவர்களுக்கு வெள்ளையடிக்கப்பட்டது. அதன் மூலம் கார்த்திகேசன் குறிப்பிட்டது போல, தியாராசாவின் எதிர்ப்பாளர்கள் மேலும் தெளிவான முறையில், அவருக்கு எதிரான புதிய சுலோகங்களை எழுதிவிட்டார்கள். அதன் பிறகுதான் கார்த்திகேசன் சொன்ன காரணத்தின் தாற்பரியம் தியாகராசாவுக்கு விளங்கியது. அதன் பின்னர் அந்தச் சுலோகங்களை அழிக்கும்படி தியாகராசா கோரவும் இல்லை, சுலோகம் எழுதுபவர்களின் கை மீண்டும் அந்தச் சுவர்களை நோக்கி நீளவும் இல்லை.

# 32. காங்கிரஸ் வேட்பாளரின் பல குழிகளும், கார்த்திகேசனின் ஒரு குழியும்

1956ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டு கணிசமான வாக்குகள் பெற்ற கார்த்திகேசன், 1960 தேர்தலில் அத்தொகுதியில் போட்டியிடாது நல்லூர் தொகுதிக்குச் சென்று போட்டியிட்டார். அதற்குக் காரணம் யாழ்ப்பாணத் தொகுதியில் யாழ்.மாநகரசபை முதல்வராக இருந்த அல்பிரட் துரையப்பாவும் போட்டியிட எண்ணியிருந்ததால், அங்கு தானும் போட்டியிட்டால், தமிழரசு – காங்கிரஸ் கட்சிகளுக்கு எதிரான வாக்குகள் சிதறுண்டு, அந்தக் கட்சிகளில் ஏதாவது ஒன்று வெற்றி பெற்று விடும் என்று கருதியதால் ஆகும்.

அவரும் கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்பார்த்தவாறே, கார்த்திகேசன் அம்முறை விட்டுக் கொடுத்ததால், யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்ட துரையப்பா, தமிழரசு – காங்கிரஸ் வேட்பாளர்கள் இருவரையும் தோற்கடித்து, யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

அதேவேளையில், கார்த்திகேசன் நல்லூர் தொகுதிக்கு வந்ததால் தமிழரசுக்கட்சிக்கு எதிரான வாக்குகள் சிதறுண்டு, தனது வெற்றி வாய்ப்பு மேலும் கேள்விக் குறியாகி விடும் என்று கருதிய, அத்தொகுதியில் தமிழ் காங்கிரஸ் சார்பில் பலமுறை போட்டியிட்டும் வெற்றி பெறாமல் இருந்த சி.அருளம்பலம், தனது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கார்த்திகேசனை அரசியல் ரீதியாக மட்டுமின்றி, தனிப்பட்ட முறையிலும் கடுமையாகத் தாக்கிப் பேசி வந்தார். கார்த்திகேசனுக்கு எதிரான தாக்குதலில் ஒன்று, தனக்கு அத்தொகுதியில் ஏராளமான காணி பூமிகள் இருப்பதாகவும், கார்த்திகேசனுக்கு அங்கு ஒரு குழி நிலம் தன்னும் இல்லை என்பதாகும்.

இதற்கு தனது பிரச்சாரக் கூட்டமொன்றில் நகைச்சுவையாகப் பதில் அளித்த தோழர் கார்த்திகேசன், "சிலர் சொல்வது போல, அவர்களுக்கு பல குழிகள் இருப்பது உண்மை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அவர்கள் சொல்வது போல நான் ஒரு குழியும் இல்லாமல் வாழ்பவன் அல்ல. தமிழ்ப் பண்பாண்டை மறந்து அவர்கள் பல குழிகளுடன் வாழ்வது போலல்லாமல், நான் ஒரு குழியுடன் வாழ்ந்து வருகிறேன்" எனக் குறிப்பிட்டார்.

கார்த்திகேசனின் இரட்டை அர்த்தத்துடனான இந்த விளக்கத்தால், அதை நன்கு புரிந்து கொண்ட அவரது ஆதரவாளர்களும், பொதுமக்களும் பலத்த ஆரவாரம் செய்தனர்.

# 33. கார்த்திகேசனை ஏற்ற, கட்சிக் கொடியை காரிலிருந்து இறக்கிய தமிழரசு எம்.பி!

**த**மிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணத்தில், பல்கலைக்கழகம் ஒன்று அமைய வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்தது. அந்தக் கோரிக்கையை பிரதான தமிழ் கட்சிகளான தமிழ் காங்கிரஸ் அல்லது தமிழரசுக்கட்சி அரசுடன் பேசி நிறைவேற்றி வைக்கும் எனவும் அவர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் தமிழ் கட்சிகள் இரண்டும் தமிழ் மக்களின் நலன்களைவிட, தமது அரசியல் மற்றும் சுயநலன்களையே பெரிது என்று கருதியதால், அதைப்பற்றி அக்கறை எதுவும் காட்டாமல், தமக்குள்ளே தொடர்ச்சியாக குடுமிச் சண்டைகளை நடாத்தி வந்தன. போதாதற்கு தமிழ்ப் பகுதியில் அமைய வேண்டிய பல்கலைக்கழகம், இந்துப் பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும் என தமிழ் காங்கிரசும், தமிழ்ப் பல்கலைக்கழகமாக அது அமைய வேண்டுமென தமிழரசுக்கட்சியும் கூறி வந்தன.

அவர்களது இந்த ஏட்டிக்குப் போட்டியான போக்கால், அரசாங்கங்கள் அதைப் பயன்படுத்தி தமிழ் பிரதேசங்களில் பல்கலைக்கழகம் அமைவதைத் தட்டிக் கழித்து வந்தன. 1965ல் அமைந்த டட்லி சேனநாயக்க தலைமையிலான ஏழு கட்சிக் கூட்டணி ஐ.தே.க அரசாங்கத்தில், இவ்விரு தமிழ் கட்சிகளும் பங்காளிகளாக இருந்தும், பல்கலைக்கழகக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. 'நீங்கள் இரண்டு பேரும் என்ன பல்கலைக்கழகம் வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வரும்வரை எம்மால் ஒன்றும் செய்ய முடியாது' என ஐ.தே.க அரசாங்கம் தட்டிக்கழித்து விட்டது.

தனிப்பட்ட முறையில் தமிழரசுக்கட்சி திரிகோணமலையில் தமிழ் பல்கலைக்கழகம் அமைக்கவென காணி ஒன்றைப் பெற்று நிதியும் சேகரித்ததாயினும், அதற்கு என்ன நடந்தது என்பது இன்று வரை யாருக்கும் தெரியாது.

இந்த நிலைமையில், 1970 பொதுத்தேர்தல் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த, சிறீலங்கா – சமசமாஜ - கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் ஒன்றை நிறுவ முன்வந்தது. இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதில் மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், ஆர்.ஆர்.தருமரத்தினம் போன்ற தமிழ் இடதுசாரிகளும், அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த பீட்டர் கெனமன், செல்லையா குமாரசூரியர் போன்றோரும், தமிழ் காங்கிரஸ கட்சியின் தலைவராக அப்போது இருந்தவரும், முன்னாள் செனட்டரும், சேர்.பொன். இராமநாதனின் மருமகன் முறையானவருமான பிரபல சட்டத்தரணி எஸ்.ஆர்.கனகநாயகம், கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த பிரேமதாச உடகம, யாழ்.மாநகரசபை முதல்வராக இருந்த அல்பிரட் துரையப்பா ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

யாழ். திருநெல்வேலியில் சேர்.பொன்.இராமநாதனால் உருவாக்கப்பட்டிருந்த, பரமேஸ்வரா கல்லூரியில் அமைக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக வளாகத்தைத் திறந்து வைக்க, 1975ம் ஆண்டு அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாணம் வருகை தந்தார். தமது முயற்சியின்றி, இடதுசாரிகளினதும் ஏனைய ஜனநாயக சக்திகளினதும் முயற்சியினால் பல்கலைக்கழகம் அமைவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத தமிழரசுக்கட்சியினர், பிரதமர் விஜயம் மேற்கொண்ட இரண்டு நாட்களும் யாழ்.குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஸ்டிக்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். ஆங்காங்கு வன்முறைகளையும் தூண்டிவிட்டனர். நல்லூர் வீரகாளி அம்மன் கோவில் முன்றலில் உண்ணா விரதம் ஒன்றையும் மேற்கொண்டனர்.

ஆனால் தமிழரசுக்கட்சியின் இந்த ஹர்த்தால் அழைப்புக்கு மக்கள் செவிசாய்க்கவில்லை. சிறீமாவோ சென்ற வீதியெங்கும் மக்கள் கூடி நின்று அமோக வரவேற்புக் கொடுத்ததுடன், பல்கலைக்கழகத் திறப்பு விழாவிலும், அதைத் தொடர்ந்து யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த பொதுக்கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கில் வந்து கலந்து கொண்டனர்.

இதில் ஒரு வேடிக்கை என்னவெனில், அந்தக் காலத்தில் தமிழ் மக்களின் வீர தீரர்கள் எனக் காட்டிக் கொண்டு, தமிழ் இளைஞர்களை ஏவிவிட்டு பல சட்டவிரோதச் செயல்களைப் பின்னால் இருந்து தூண்டிவிட்டு வந்த தமிழரசுக்கட்சித் தலைவர்கள், ஒரு சாதாரண உண்ணாவிரதத்தைக் கூட நடாத்துவதற்குப் பயந்து, கார்த்திகேசனின் துணையை நாடியதுதான்.

உண்ணாவிரதம் இருப்பவர்கள் மீது பொலிசார் தாக்குதல் நடாத்தப் போகிறார்கள் என்ற வதந்தி ஒன்று பரவியிருந்ததால், தமிழரசுத் தலைவர்கள் பயந்து போயிருந்தனர். எனவே அவர்கள் தம்மைத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும்படி கார்த்திகேசனிடம் வேண்டினர். அதற்காக கார்த்திகேசனுடன் நட்புறவுடன் பழகிவரும் தமிழரசுக்கட்சியின் கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான சி.கதிரவேற்பிள்ளையின் காரை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு அனுப்பி, அவரை தாம் உண்ணாவிரதம் இருந்த வீரகாளி அம்மன் கோவிலடிக்கு வரவழைத்து, தமது உண்ணாவிரதம் மாலையில் முடியும் வரை அவரை அங்கு தங்கி நிற்க வைத்தனர். கார்த்திகேசனும் வேறுவழியின்றி அன்றைய பொழுதை அங்கே கழிக்க வேண்டியதாயிற்று.

இதில் வேடிக்கையான இன்னொரு அம்சம் என்னவெனில், கதிரவேற்பிள்ளையின் தமிழரசுக்கட்சி கொடி கட்டிய காரில் கார்த்திகேசன் ஏறி வரமாட்டார் என்பதற்காக, இந்த 'வீர மறவர்கள்' தமது கொடியையும் கழற்றி சுற்றி வைத்துவிட்டுத்தான், அந்தக் காரில் கார்த்திகேசனை ஏற்றி வந்தனர் என்பதே.

# 34. பனங்காட்டுத் தமிழன் கறுவாக்காட்டுத் தமிழனானான்

1970 பொதுத்தேர்தலில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் முக்கியமான தலைவர்களான அ.அமிர்தலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், மு.சிவசிதம்பரம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகியோர் படுதோல்வி அடைந்தனர். அதன் மூலம் தாம் தொடர்ந்தும் பிரிந்து நின்று அரசியல் செய்தால், பாராளுமன்றம் செல்வது கஸ்டம் என்பதை இந்த இரு கட்சியினரும் உணர்ந்து கொண்டனர். எனவே அவர்கள் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுவதற்காக புதிய வழிவகைகளை நாடத் தொடங்கினர்.

அந்த வழியில் அவர்கள் உருவாக்கியது தான், 1976ல் வட்டுக்கோட்டை மாநாட்டில் இரு கட்சியினரும் சேர்ந்து, தொண்டமானையும் சேர்த்துக் கொண்டு உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகும். அவர்கள் ஒன்றுபட்டது மட்டுமின்றி, தமிழ் மக்களை சுலபமாக ஏமாற்றி வெற்றி பெறுவதற்காக, தமிழீழம் அமைக்கப் போவதாக தீர்மானமும் நிறைவேற்றிக் கொண்டனர். அவர்கள் எதிர்பார்த்தது போலவே, 1977ல் நடந்த பொதுத் தேர்தலில், வடக்கு கிழக்கில் இருந்த 18 தொகுதிகளிலும் அவர்களே வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றனர்.

அதுமாத்திரமின்றி, அத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்த, ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க அரசாங்கத்துக்கெதிரான எதிர்க்கட்சியாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியே திகழ்ந்தது. அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

இந்த நிகழ்வு பற்றி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர் ஒருவர் பெருமையுடன் தோழர் கார்த்திகேசனிடம் வந்து சொன்னார். அதாவது தமிழர் ஒருவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக வந்துவிட்டார் என்பதே, அந்த கூட்டணி ஆதரவாளரின் சந்தோசத்துக்குக் காரணம்.

அந்த நண்பரின் கருத்தை செவிமடுத்த கார்த்திகேசன், அவரது அறியாமையைக் கண்டு எள்ளி நகையாடவில்லை. பொறுமையான முறையில், தமிழரசு, தமிழ் காங்கிரஸ், தொண்டமான் என்போரின் அரசியல், வர்க்க அடிப்படையில் எவ்வாறு ஐ.தே.கவுடன் பின்னிப்பிணைந்து இருந்து வந்துள்ளது என்பதை விளக்கியதுடன், " உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை, ஐ.தே.க அரசாங்கத்தின் எதிர்க்கட்சி என்பதை விட, உண்மையான எதிர்க்கட்சியின் (சிறீலங்கா சுதந்திரக்கட்சி) எதிர்க்கட்சி என்று சொல்வதே பொருத்தமாகும். அந்த வகையில் பார்த்தால் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒரு வகையான எதிர்க்கட்சி தான்" என்றார்.

அத்துடன் அவர் இன்னொன்றையும் நகைச்சுவையாகச் சொன்னார். பனங்காட்டுத் தமிழனான அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவரானபடியால், தமிழ் மக்களுக்கு ஏதாவது விமோசனம் கிடைக்கும் என சிலர் நம்புகின்றனர். ஆனால் இந்தப் பனங்காட்டுத் தமிழனை, ஐ.தே.க அரசு கறுவாக்காட்டுத் தமிழனாக்கிவிட்டது என்று குறிப்பிட்டு, அப்போது அமிர்தலிங்கம் பின்பற்றிய ஐ.தே.க சார்பு நிலைப்பாட்டையும் அந்த நண்பருக்குத் தோலுரித்துக் காட்டினார்.

# 35. குருவிச்சைத் தலைமைகள்

**அ**ந்தக் காலத்தில் தமிழ் மக்களின் பிரதான கட்சிகளாகத் திகழ்ந்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டத்தரணிகளாகவே இருப்பர். ஒருவர் அக்கட்சிகளின் முக்கிய பிரமுகராக வருவதானால், அவர் சட்டத்தரணியாக இருக்க வேண்டும் என்பது புருச லட்சணமாக இருந்தது என்று கூடச் சொல்லலாம்.

அந்த வகையில் பருத்தித்துறைத் தொகுதியின் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கே.துரைரத்தினம், தமது எம்.பி பதவியை மெருகூட்டுவதற்காக, பின்னர் சட்டம் கற்று சட்டத்தரணியானார். வீ.ஆனந்தசங்கரி சமசமாஜக் கட்சியிலிருந்து விலகி, தமிழ் காங்கிரசில் சேருவதற்கு முன்னதாகவே சட்டத்தரணியாகி விட்டிருந்தார். இவர்களில் பண்டிதர் க.பொ.இரத்தினம் மட்டுமே, சட்டத்தரணி என்ற அந்தஸ்து இல்லாமல் இருந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எனலாம்.

அநேகமான தமிழ் அரசியல்வாதிகளின் முழு நேரத் தொழிலாக சட்டத் தொழில் இருந்த அதேவேளையில், அரசியல் என்பது அவர்களது பொழுதுபோக்காகவும், அந்தஸ்து தேடும் ஏணியாகவும், இன்னொரு வருவாய் ஊற்று மூலமாகவும் தான் இருந்து வந்துள்ளது.

இந்த தமிழ் அரசியல்வாதிகளை கார்த்திகேசன் 'குருவிச்சைகள்' என்று அழைப்பதுண்டு. அதற்கு அவர் கூறும் காரணம், இவர்கள் எவ்விதமான சிருஸ்டித் தொழிலிலும் ஈடுபடாமல், மற்றவர்களுடைய சட்டைப் பைகளையே தமது வருவாய்க்காக நம்பி வாழ்பவர்கள் என்பதாகும். அதாவது எவ்வாறு குருவிச்சை செடி தானாக மண்ணில் வேரூன்றாமல், மற்றைய மரங்களில் தங்கி அவற்றின் சத்துகளை உறிஞ்சி வாழ்கிறதோ, அவ்வாறு தான் இந்த சட்டத்தரணிகளும் வாழ்கின்றனர் என்பார்.

உதாரணத்துக்கு அவர் கூறுகையில், 'தொழிலாளி வர்க்கம் தனது உழைப்பின் மூலம், இந்தப் பூமியில் உள்ள அனைத்து செல்வங்களையும்

சிருஸ்டிக்கின்றது. முதலாளி வர்க்கம் கூட தனது மூலதனத்தின் மூலம் பொருள் உற்பத்தியில் ஒரு பங்கை வகிக்கின்றது. ஆனால் நமது சட்டத்தரணிக் கூட்டமோ, எதுவித உழைப்பிலும் ஈடுபடாமல், மக்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகளை பயன்படுத்தி, தனது வருவாயைத் தேடிக் கொள்கிறது. இப்படியானவர்களால் தமிழ் இனத்துக்கு விடிவைத் தேடிக் கொடுக்க முடியாது. வரலாற்றை எடுத்து நோக்கினால், சில நாடுகளில் முதலாளி வர்க்கம் புரட்சிகளுக்குத் தலைமை தாங்கியுள்ளது. வேறு சில நாடுகளில் தொழிலாளி வர்க்கம் புரட்சிகளுக்குத் தலைமை தாங்கியுள்ளது. ஆனால் இந்த குருவிச்சை கூட்டம் எந்தவொரு புரட்சிக்கும் தலைமை தாங்கியதாக வரலாறு இல்லை. தமிழ் மக்களின் சாபக்கேடு இதுதான்.' என்று சொல்வார்.

தோழர் கார்த்திகேசனை, சில சந்தர்ப்பங்களில் முக்கியமான வழக்குகளின் போது நீதிமன்றங்கள் ஜுரியாக அழைப்பதுண்டு. அதன் காரணமாக தமிழ் சட்டத்தரணிகளின் வாத விநோதங்கள் பற்றியும் அவர் நன்கு அறிவார். அந்த அனுபவங்களைக் கொண்டு அவர் கருத்துக் கூறுகையில், 'பனங்காயைப் பனாட்டாக்குவது பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பனாட்டை திரும்பவும் பனங்காய் ஆக்கக்கூடிய வித்தையைச் செய்யக் கூடியவர்கள் நமது சட்டத்தரணிகள் மட்டுமே' என நகைச்சுவையுடன் கூறுவார்.

⁂

# 36. கார்த்திகேசனின் ஒப்பற்ற வழிகாட்டல்கள்

**நா**.சண்முகதாசனை நிராகரித்து விட்டு, மார்க்சிச – லெனினிசவாதிகள் புதிய கட்சியை ஆரம்பித்த பின்னர், ஒவ்வொரு முக்கியமான பிரச்சினைகளிலும், அவரது அணியினருக்கும் எமது கட்சிக்கும் இடையில் நேர் எதிரான நிலைப்பாடுகளே இருந்து வந்தன. அந்தப் பிரச்சினைகளில் எல்லாம், நாம் சரியான நிலைப்பாடுகளை எடுப்பதற்கு, தோழர் கார்த்திகேசன் எமக்கு எப்பொழுதும் வழி காட்டி வந்துள்ளார்.

ஏற்கெனவே ஐ.தே.கவை விட சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும், பாராளுமன்றவாத இடதுசாரிக் கட்சிகளையும் தாக்குவதிலேயே கூடுதலாக ஈடுபட்டு வந்த சண்முகதாசன், 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது, தன்னை சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் சிறையில் அடைத்து விட்டது என்ற கோபம் காரணமாக, மேலும் அக்கட்சிகளுக்கெதிரான தனது நிலைப்பாட்டைத் தீவிரப்படுத்தினார். அதன் காரணமாக அந்த அரசாங்கம் செய்த வேலைகளை, நல்லதோ கெட்டதோ என்று ஆராயாமல், கண்மூடித்தனமாக எதிர்க்கும் கைங்கரியத்தில் இறங்கினார்.

அதில் ஒன்று அந்த ஆட்சிக்காலத்தில், கொழும்பில் நடந்த கூட்டுச் சேரா இயக்கத்தின் மாநாட்டை எதிர்த்தது ஆகும். சண்முகதாசனைப் பொறுத்தவரை, அவர் தன்னை ஒரு அப்பழுக்கற்ற மார்க்சியவாதி என்று சொல்லிக் கொண்டாலும், நடைமுறையில் மார்க்சிசத்தின் மூல தத்துவமான இயங்கியல் போக்கிற்கு எதிரானவராக, ஒரு நிலையியல்வாதியாகவே செயற்பட்டு வந்துள்ளார்.

எனவே உலகில் கூட்டுச் சேரா இயக்கம் என்றொரு இயக்கம், அமெரிக்க – சோவியத் மேலாதிக்க வல்லரசுகளுக்கு எதிராகத் தோற்றம் பெற்று வளர்ந்து வந்ததை அவர் கணக்கில் எடுக்கவில்லை. சீன மக்களின் மாபெரும் தலைவர் மாஓ, இன்றைய உலகின் பிரதான முரண்பாடு, மேல்நிலை வல்லரசுகள் இரண்டுக்கும், மூன்றாமுலக

நாடுகளுக்குமிடையிலானது என வரையறை செய்ததை சண்முகதாசன் ஏற்கவில்லை. ஏகாதிபத்திய முகாமுக்கும் சோசலிச முகாமுக்கும் இடையிலான முரண்பாடே, பிரதான முரண்பாடு என்ற, பழைய பல்லவியையே சண்முகதாசன் இறுதிவரை பாடிக் கொண்டிருந்தார். ஆனால் இந்த விடயத்தில் ஒரு சரியான நிலைப்பாட்டை எடுத்து, கூட்டுச் சேரா இயக்கத்தை முழுமையாக ஆதரிக்கும் நிலையை நாம் எடுப்பதற்கு, தோழர் கார்த்திகேசன் எமது கட்சிக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அதேபோல, தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசையான பல்கலைக்கழகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைந்த போதும், அதன் முதலாவது தலைவராக எமது கட்சியுடன் மிக நெருக்கமானவரும், கார்த்திகேசனின் மாணவருமான பேராசிரியர் க.கைலாசபதி தலைவராக நியமிக்கப்பட்ட போதும், சண்முகதாசன் குழுவினர் அதை உதாசீனப்படுத்தியே நடந்து கொண்டனர்.

பல்கலைக்கழகம் வருவதற்காக கடுமையாக உழைத்ததுடன், பின்னர் அதை வளர்த்தெடுக்கும் பொருட்டு 'யாழ்.பல்கலைக்கழக வளாக விஸ்தரிப்பு இயக்கம்' என்ற பெயரில் சகல இடதுசாரி, ஜனநாயக சக்திகளையும் ஐக்கியப்படுத்தி நாம் ஒரு அமைப்பை உருவாக்கி செயற்பட்ட போதும், சண்முகதாசன் குழுவினர் அதில் பங்குபற்றாது ஒதுங்கி நின்றது மாத்திரமின்றி, எம்மை தாக்குவதற்காக, 'சிலர் பல்கலைக்கழகம் வந்தால் தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் எனக் கருதிச் செயல்படுகின்றனர்' என தமது பத்திரிகையில் எழுதினர். ஆனால் தோழர் கார்த்திகேசன் பல்கலைக்கழக விவகாரத்தில், முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு எமக்கு ஊக்கமளித்துக் கொண்டே இருந்தார்.

இன்னொரு விடயமாக, 1970களின் நடுப்பகுதியில், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இலங்கையிலுள்ள அனைத்து தமிழ் பேசும் எழுத்தாளர்களையும் கொண்ட, 'தேசிய ஒருமைப்பாடு மாநாடு' ஒன்றை ஏற்பாடு செய்து நடாத்தியது. பேராசிரியர் க.கைலாசபதி இந்த மாநாட்டின் அச்சாணியாக இருந்து செயற்பட்டார். மண்டபம் நிறைந்த அந்த மாநாட்டுக்கு அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க வரவழைக்கப்பட்டு, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை உட்பட, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக 12 அம்சத் தீர்மானம் ஒன்றும் அவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டை சண்முகதாசன் குழுவினர் புறக்கணித்ததுமல்லாமல், அதற்கெதிராகப் பிரச்சாரமும் செய்தனர். அதுமாத்திரமல்ல, இந்த மாநாடு நடந்த காலத்தில், சில உதிரி எழுத்தாளர்களைக் கொண்டு திருகோணமலையில் போட்டி மாநாடு ஒன்றும் நடாத்தினர். ஆனால் எமது கட்சி, தோழர்கள் காாத்திகேசன், வீ.ஏ.கந்தசாமி போன்றவர்களின் வழிகாட்டலிலும், கைலாசபதி அவர்களின் ஊக்குவிப்பிலும் அம்மாநாட்டில் பூரண பங்களிப்பைச் செலுத்தியது.

இன்னொரு முக்கியமான விடயம், வடபகுதி கள் இறக்கும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். 1970ல் பதவிக்கு வந்த சிறீமாவோ தலைமையிலான கூட்டரசாங்கத்திலும், சமசமாஜக் கட்சித் தலைவர் என்.எம்.பெரேராவே நிதியமைச்சராகப் பொறுப்பேற்றார். அவர் யாழ்ப்பாணத்தில் அதுவரை காலமும் கள் இறக்கும் தொழிலில் இருந்த மரவரி முறையை நீக்கிவிட்டு, கூட்டுறவு முறையொன்றை அமுலுக்குக் கொண்டு வரத் தீர்மானித்தார். இந்த கூட்டுறவு முறை சீவல் தொழிலாளரின் உரிமையைப் பறிப்பதாகச் சொல்லி, அதை சண்முகதாசன் குழுவினரும், மொஸ்கோசார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம்.சி.சுப்பிரமணியம் தலைமையிலான சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் எதிர்த்தனர்.

இந்தப் பிரச்சினையில் எமது கட்சித் தோழர்கள் மத்தியிலும் ஒரு குழப்பம் நிலவியது. முக்கியமாக வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம் எமது கட்சியின் கீழ் இருந்ததாலும், அதன் தலைவர் தோழர் மு.முத்தையா எமது கட்சியின் வட பிரதேசக்குழு உறுப்பினராக இருந்தமையினாலும், இந்த விடயத்தில் நாம் ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டியவர்களாக இருந்தோம். எனவே கட்சியின் பிரதேசக்குழுவைக் கூட்டி இது பற்றி விவாதித்தோம்.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர் கார்த்திகேசன், அரசாங்கம் கொண்டு வர இருக்கின்ற கூட்டுறவு முறையை நாம் ஆதரிக்க வேண்டும் எனக் கருத்து வெளியிட்டார். அரசாங்கம் எது செய்தாலும் எதிர்க்க வேண்டும் என்ற, சண்முகதாசனின் இடது தீவிரவாத, ஒருமுனைவாத கண்ணோட்டத்தில் வளர்க்கப்பட்ட நாம், கார்த்திகேசனின் கருத்தை விளங்கவும், சீரணிக்கவும் சற்று கஸ்டப்பட்டோம். ஆனால் கார்த்திகேசன் தனது கருத்துக்கான காரணங்களை தெளிவாக விளக்கிய பின்னர் எமது சந்தேகங்கள் அறவே தீர்ந்துவிட்டன.

அவர் தந்த விளக்கம் இதுதான்.

கள் இறக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இதுவரை காலமும் இருந்த மரவரி முறை என்பது, அவர்களுக்கு பெயரளவிலான உரிமையேயொழிய உண்மையானதல்ல. ஏனெனில் அவர்கள் அரசாங்கத்துக்கு கலால் வரி செலுத்திவிட்டு, சுதந்திரமாக கள் சீவி விற்கலாம் என்று சொன்னாலும், நடைமுறையில் அவர்களால் அதைச் செய்ய முடிவதில்லை.

ஏனெனில் கள் இறக்கும் பனைகளோ, தென்னைகளோ உயர் சமூகத்தினரிடம் மட்டுமே இருக்கின்றன. அவற்றை அவர்களிடமிருந்து பெறுவதானால், அதற்கு அவர்களுக்கு பெருந்தொகை பணம் கொடுக்க வேண்டும். அத்துடன் கள் இறக்குவதற்குத் தேவையான முட்டி, கத்தி, கயிறு என்பனவற்றுக்கும், சீவிய கள்ளை வைத்து விற்பதற்கு பொருத்தமான இடத்தில் கொட்டில் அமைப்பதற்கும் பணம் வேண்டும். இவ்வளவு கஸ்டங்களுக்கு மத்தியில் கள்ளைச் சீவி விற்பனைக்குக் கொண்டு வந்தால், கள் அருந்த வரும் சாதிமான்கள், கள் அருந்திய பின்னர் கடன் சொல்லிச் செல்வது வழமையாக நடைபெறும் ஒரு நிகழ்வாகும். அதுமட்டுமல்லாமல், சீவல் தொழிலாளர்களின் வீடுகளுக்கு கள் அருந்தச் செல்லும் உயர் சமூக நயினார்மார், அங்குள்ள பெண்களுடன் பாலியல் சேஸ்டைகளில் ஈடுபடுவதும் சர்வசாதாரணம். அடிப்படையில் பார்த்தால் மரவரி முறை என்பது ஒரு நிலப்பிரபுத்துவ முறையாகும்.

எனவே தான் சொந்தமாக தொழில் செய்வதற்கு இயலாத நிலையில், பெரும்பாலான சீவல் தொழிலாளர்கள், அநேகமான இடங்களில், உயர் சமூகத்தினர் நடாத்தும் கள்ளுத் தவறணைகளில், சம்பளத்துக்கு கள் சீவிக் கொடுக்கின்றனர். அதிலும் கூட தவறணை முதலாளிகள் சீவல் தொழிலாளர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் வழங்குவதில்லை.

எனவே இந்தச் சூழ்நிலையில், சீவல் தொழிலாளர்களே ஒன்றிணைந்து சங்கமாக உருவாகி, கள்ளுத் தவறணைகளை நடாத்துவது ஒரு சோசலிச நடைமுறையாக இல்லாவிட்டாலும், நிலப்பிரபுத்துவத்தை விட ஒரு படி மேலான முன்னேறிய முதலாளித்துவ முறையாகும். இங்கு தொழிலாளர்கள் மரங்கள் பெறுவதற்கும், சீவல் உபகரணங்கள் வாங்குவதற்கும் சங்கமே கடனாகப் பணம் கொடுத்து உதவும். சீவிய கள்ளை விற்று முடிப்பது பற்றி தொழிலாளர்கள் கவலைப்படத் தேவையில்லை. சங்கமே கள் முழுவதையும் கொள்வனவு செய்யும். மிதமிஞ்சிய கள்ளை சங்கம் சாராயமாக வடிக்கும். தொழிலாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தினத்தில்

நிச்சயமாக ஊதியம் கிடைக்கும். எல்லாவற்றையும் விட, தனித்தனியாக இருந்த தொழிலாளர்கள் ஒரு சங்கத்தில் இணையும் போது. அவர்கள் ஒரு பலமான, ஸ்தாபன ரீதியான சக்தியாக மாறுகின்றார்கள்.

இப்படிப் பல நன்மைகள் இருப்பதால், புதிய கூட்டுறவு முறையை நாம் நிச்சயமாக ஆதரிக்க வேண்டும் என தோழர் கார்த்திகேசன் விளக்கினார். உண்மையில் கார்த்திகேசன் கூறியவாறு பிற்காலத்தில் உருவான தெங்கு பனம் பொருள்உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், வடபகுதியில் மிகச் சிறப்பாக செயற்பட்டதோடு, சில சீவல் தொழிலாளர்கள் தமது தொழிலில் ஏற்பட்ட அதீத வருமானத்தால் வருமான வரி கட்டிய சம்பவங்களும் நிகழ்ந்தன. அதன் மூலம் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் இருந்த அந்த தாழ்த்தப்பட்ட சமூகம், ஓரளவு முன்னேற்றகரமான நிலையை எட்டிப் பிடித்தது.

கார்த்திகேசன் இதுபோன்ற எத்தனையோ விடயங்களில் எமக்கு வழிகாட்டியாக இருந்து வழிகாட்டியுள்ளார். அவர் கைக்கொண்ட விஞ்ஞானபூர்வமான அணுகுமுறையும், அவர் எமக்கு ஒவ்வொரு கட்டத்திலும் வழங்கிய தீர்க்க தரிசனமிக்க ஆலோசனைகளும் என்றும் காலத்தால் அழியாத கொடைகளாகும்.

❊

# 37. முஸ்லீம் ஒருவரை யாழ். நகர முதல்வராக்கிய கார்த்திகேசனின் சாணக்கியம்!

**கா**ர்த்திகேசனைப் பொறுத்த வரையில், எந்தவொரு தமிழ் தலைவருக்கும் இல்லாத ஒரு செல்வாக்கு, யாழ்ப்பாணம் வாழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் உண்டு. அவரது பரந்துபட்ட கட்சி வேலைகள் காரணமாக, யாழ்ப்பாண முஸ்லீம் மக்கள் மத்தியிலிருந்து பல உன்னத கம்யூனிஸ்ட்டுகளை உருவாக்கி, அந்த மக்கள் மத்தியில் கட்சியை ஆழமாக வேரூன்ற வைத்தார். அந்த மக்கள் மத்தியில் கட்சியை ஆழமாக வேரூன்ற வைப்பதில், தோழர்கள் காதர், அசீஸ், எழுத்தாளர் இளங்கீரன் போன்றோர் கார்த்திகேசனுக்கு பக்கபலமாக இருந்து, பங்காற்றியுள்ளனர்.

முஸ்லீம்களை 'தொப்பி பிரட்டிகள்' என்று வசைபாடிய தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளுக்கு மத்தியில், கார்த்திகேசன் வேறுபட்ட ஒரு அரசியல்வாதியாக, மனித நேயமுள்ள ஒரு மனிதராக, அந்த மக்களுக்கு காட்சியளித்தார். 1990ல் தமிழ் தேசியவாதத்தின் உச்ச வெறியாக முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து இரண்டு மணித்தியால இடைவெளியில் புலிகளால் விரட்டப்பட்ட நிகழ்வு நடைபெற்ற போது, கார்த்திகேசன் உயிர் வாழ்ந்திருந்தால், அவரது இதயம் நிச்சயமாக வெடித்துச் சிதறியிருக்கும். அந்த அளவுக்கு அந்த மக்கள் மீது அவர் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார்.

காாத்திகேசன் முஸ்லீம் மக்களுக்காக வெறுமனே வாய்ப்பந்தல் போட்டவரல்ல. அவர் நடைமுறையில் அந்த மக்களுக்காக செயல்பட்டுக் காட்டியவர். 1950களின் பிற்பகுதியில், கார்த்திகேசன் யாழ்.மாநகரசபைத் தேர்தலில் வண்ணார்பண்ணை வட்டாரத்தில் போட்டியிட்டு, தமிழ் கட்சியொன்றின் பெரும் புள்ளியாகவும், மாநகர சபையின் முதல்வராகவும் இருந்த ஒருவரைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடினார்.

அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழரசு – காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே மாநகரசபை முதல்வராக யார் வருவது என்பதில் பலத்த போட்டி உருவாகி இருந்த நேரத்தில், கார்த்திகேசன் தனி ஒருவராக நின்று, தனது சாணக்கியத்தாலும், மனித நேயத்தாலும் அனைவரையும் அணைத்துப் பிடித்து, அந்த சபைக்கு முஸ்லீம் மக்கள் சார்பில் தெரிவான சுல்தான் என்பவரை மாநகரசபை முதல்வராக்கி பெரும் சாதனை படைத்தார். நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்தில், இந்த நிகழ்வு முஸ்லீம் மக்களால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.

கார்த்திகேசனின் முயற்சியால் சுல்தான் முதல்வரானது தான், யாழ்.முஸ்லீம்களைப் பொறுத்த வரை இன்று வரை, முதலும் கடைசியுமாக இருக்கின்றது. இன்றும் கூட அவரது இந்த மாபெரும் முயற்சியை, முஸ்லீம் மக்கள் நன்றியுடன் நினைவு கூர்ந்த வண்ணம் உள்ளனர்.

புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்களை திரும்பவும் யாழ். மண்ணில் மீளக் குடியேற்றுவதும், தமிழ் - முஸ்லீம் மக்களுக்கிடையிலான நட்புறவை மீண்டும் மலர வைப்பதும், கார்த்திகேசனுக்கு செய்யும் அஞ்சலிகளில் ஒன்றாக இருக்கும்.

# 38. கூட்டம் குழப்ப வந்தவர்களை, திரும்பிப்போக வைத்த சாதுரியம்

எதிர்க் கருத்துள்ளவர்களையும், தனது அணுகுமுறையால் தன் பக்கம் திருப்புவதில், கார்த்திகேசனுக்கு நிகர், அவரேதான்.

தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இறந்த பொழுது, தமிழ் தேசிய வெறி உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. அந்த நேரத்தில் எமது மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தன் சந்தியிலிருந்த சந்தை மைதானத்தில், மேதினக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. கூட்டத்திற்கு பிரதம பேச்சாளராக தோழர் கார்த்திகேசன் அழைக்கப்பட்டிருந்தார்.

அந்தக் கூட்டம் நடைபெற்ற காலகட்டம் 1977 பொதுத் தேர்தலுக்கு முந்தைய காலகட்டமாகையால், அந்தப் பிரதேசத்தில் போட்டியிட்ட அரசாங்க வேட்பாளரான அமைச்சர் செல்லையா குமாரசூரியருக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரிக்கும் இடையிலான போட்டா போட்டி உச்ச நிலையை அடைந்திருந்தது. இருவரதும் ஆதரவாளர்கள் பரவலாக அடிதடிகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

எம்மைப் பொறுத்தவரை, நாம் எப்பொழுதும் பிற்போக்கு தமிழ் கட்சிகளுக்கு எதிரானவர்கள் என்றபடியால், தமிழர் விடுதலைக் கூட்ணிக்கும் எதிராகவே இருந்தோம். இது பரந்தன் பகுதியில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வந்த ஒரு கோஸ்டியினருக்கு (அவர்கள் பின்னர் ஆயுதப் போராட்ட இயக்கங்களிலும் முக்கிய பாத்திரம் ஏற்றவர்கள்) பொறுக்க முடியாததாக இருந்தது. எனவே அவர்கள் எமது மேதினக் கூட்டத்தை குழப்புவதற்கு திட்டம் தீட்டினர்.

அவர்களது இந்த திட்டத்தை முறியடிப்பதற்கு எமது தோழர்களும் தயார் நிலையில் இருந்தனர். கிளிநொச்சி பகுதியில் எமது கட்சி பல புரட்சிகரமான போராட்டங்களை நடாத்தி, ஆழமாக வேரூன்றி இருந்ததால், எம்மிடமும் பல புரட்சிகர இளைஞர்கள் இருந்தனர்.

கூட்டத்தைக் குழப்பத் திட்டமிட்டவர்கள், முதலில் எமக்கு ஒலி, ஒளி சேவைகளை வழங்கியவர்களை மிரட்டி, அவர்களது சேவையை நிறுத்த முயன்றனர். அது முடியாமல் போன நிலையில், கூட்ட மேடையைச் சுற்றி நின்று, எம்மீது தாக்குதல் நடாத்துவதற்குத் திட்டமிட்டனர். அவர்கள் ஆயுதங்களையும் வைத்திருந்தனர். எமது தோழர்களும் அவர்களை அவர்களது பாணியிலேயே எதிர்கொள்ள தயாராகி நின்றனர்.

கூட்டம் ஆரம்பமாகி உள்ளூர் பேச்சாளர்கள் பேசும் போது, குழப்ப வந்தவர்கள் தொடர்ந்து கூச்சல் குழப்பங்களில் ஈடுபட்ட வண்ணம் இருந்தனர். இதையெல்லாம் அவதானித்துக் கொண்டு கார்த்திகேசன் மேடையில் இருந்தார். இறுதியாக தோழர் கார்த்திகேசன் பேச எழுந்தார். அப்பொழுதும் குழப்பக்காரர்கள் கூச்சலிட்ட வண்ணமே இருந்தனர்.

கார்த்திகேசன் தனது பேச்சை அந்த தவறாக வழிநடாத்தப்பட்ட இளைஞர்களை நோக்கியே ஆரம்பித்தார். அதன் பின்னர் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை அவர்கள் அவதானிக்க ஆரம்பித்தனர். கார்த்திகேசன் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விரிவாகப் பேசியதுடன், அதைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றியும் எடுத்துரைத்தார். அவரது பேச்சு முடியும் வரை அவர்கள் குழப்பங்கள் எதுவுமின்றி அமைதியாக அவரது பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர்.

குழப்ப வந்தவர்கள் அமைதியாக இருந்துவிட்டு, இறுதியில் திடீரென வந்து தாக்கக்கூடும் என நாம் எதிர்பார்த்தோம். கூட்டம் முடிந்ததும், நாம் எல்லோரும் அங்கிருந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 'மக்கள் கடையில்' தேநீர் அருந்தச் சென்றோம். கூட்டத்தைக் குழப்ப வந்தவர்ளும் அங்கு வந்தனர். நாம் எச்சரிக்கை அடைந்தோம். ஆனால் அவர்கள் தோழர் கார்த்திகேசனுடன் நட்புறவுடன் பழகி உரையாடிவிட்டு, அவ்விடத்தை விட்டுக் கலைந்து சென்றுவிட்டனர்.

அன்று அந்தக் கூட்டத்தில் கார்த்திகேசன் நிகழ்த்திய உரையும், அதை அவர் நிகழ்த்திய பாவனையுமே, அந்தக் குழப்பக்காரர்களை மனம் மாற்றியதாக, பின்னர் அங்குள்ள தோழர்கள் அபிப்பிராயம் கூறினர். கார்த்திகேசனுக்கு பதிலாக வேறு எவர் பேசியிருந்தாலும், நிச்சயாக எமது தோழர்களுக்கும், குழப்ப வந்தவர்களுக்கும் இடையே ஒரு 'போர்' நிகழ்ந்திருக்கும் என்பதே பெரும்பான்மையான தோழர்களின் அபிப்பிராயமாக இருந்தது.

இந்த சம்பவம், கார்த்திகேசன் அவர்களின் ஆளுமையின் ஒரு வெளிப்பாடு என்றால் மிகையாகாது.

❋

# 39. எழுத்துத்துறை ஜம்பவான் கார்த்திகேசன்

அரசியலில் மட்டுமின்றி, பொதுவாக கம்யூனிஸ்ட்டுகளுக்கு கை வந்த பத்திரிகைத் துறையிலும் கார்த்திகேசன் பல முத்திரைகளைப் பதித்துள்ளார். அவரது காலத்தில் இலத்திரனியல் ஊடகங்கள் பொதுவாக உலகிலும், குறிப்பாக இலங்கையிலும் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனவே அச்சு ஊடகங்கள் தான் அவரது கை வண்ணம் கண்ட துறையாக இருந்தது.

அந்த வகையில், அவரது பத்திரிகை வாழ்வு அவர் இலங்கை பல்கலைக்கழக கல்லூரியில் (Ceylon University College) படிக்கும் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. அங்கு அவர் Student News என்றொரு பத்திரிகையை தான் ஆசிரியராக இருந்து நடாத்தி வந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் அந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி, தனது அறிக்கையொன்றை ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்ததாகவும், அதற்குக் காரணம் அந்தக் காலகட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜே.ஆர். ஒதுக்கப்பட்ட படியால், அவரது செய்திகளை அக்கட்சித் தலைமைக்குச் சார்பான லேக்ஹவுஸ் நிறுவனம் பிரசுரிக்க மறுத்த படியால் என்றும் கார்த்திகேசன் கூறுவார். அந்த Student News தான் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் Forward பத்திரிகையாக பரிணமித்தது.

பின்னர் அவர், முழுநேரமாக கட்சி ஊழியரான பின்னர், ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகைகளான 'தேசாபிமானி', 'Forward' என்பவற்றில் நிறைய அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். பின்னர் கட்சியில் பிளவு ஏற்பட்டு, புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி உருவான பின்னர், அக்கட்சியின் பத்திரிகைகளான 'தொழிலாளி', Red Flag' என்பனவற்றில் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

அதன் பின்னர், 1972ல் மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி உருவான போது, அக்கட்சியால் வெளியிடப்பட்ட இருவார இதழான 'போராளி' பத்திரிகையின் ஆசிரிய குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்து செயல்பட்டார். அவர் மரணிக்கும் வரை அதற்கு கட்டுரைகளும், செய்தி விமர்சனங்களும் எழுதி வந்தார்.

கார்த்திகேசன் அரசியலில் ஈடுபட்ட ஆரம்பித்த காலத்தில், அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு தடை இருந்தபடியால், அவர் பல புனைபெயர்களிலேயே பத்திரிகைகளில் எழுதி வந்தார். கட்சியில் கூட அவர் 'மாணிக்கவாசகர்' என்ற பெயரிலேயே செயல்பட்டார். பிற்காலத்தில் அவர் பகிரங்கமாக கட்சி வேலைகளில் ஈடுபட்ட காலத்திலும், பல சந்தர்ப்பங்களில் புனை பெயர்களிலேயே எழுதியிருக்கிறார்.

The Nation, Tribune, Daily News ஆகிய ஆங்கில ஏடுகளில், ஆசிரியருக்கான கடிதம் என்ற பெயரில் ஏராளமான அரசியல் விமர்சனங்களை எழுதியிருக்கிறார். அக்கடிதங்களுக்கு அவர் பயன்படுத்திய பெயர்களில் ஒன்று கே.முருகேசன் என்பதாகும். தனது தகப்பனாரின் பெயர் முருகேசு என்றபடியால், தனது முதல் எழுத்தை முன்னே போட்டு தகப்பனாரின் பெயரை முழுமையாகப் போட்டு அவற்றில் எழுதியுள்ளார். பொருளாதார விடயங்களை எழுதும் போது, Small Economist என்ற பெயரையும் பயன்படுத்தியுள்ளார்.

பத்திரிகைகளில் எழுதும் போது வாசிப்பவர்களைக் கவரும் வண்ணம் எழுதுவதில், கார்த்திகேசன் மிகவும் திறமைசாலி. புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி Red Flag என்ற ஆங்கில வாரப் பத்திரிகையை ஆரம்பித்த போது, அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்ற தோழர் கார்த்திகேசன், அதற்காக பலத்த சிரமங்களுக்கு மத்தியிலும் ஒவ்வொரு வார இறுதியிலும் கொழும்பு சென்று அதன் வேலைகளைக் கவனித்து வந்தார். அப்பத்திரிகையில் அவர் வரைந்த ஆசிரிய தலையங்கங்களும், எழுதிய செய்தி விமர்சனங்களும் பலரதும் பாராட்டுகளைக் குவித்தன. உதாரணத்திற்குச் சில:

1965ல் ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க தலைமையிலான கூட்டரசாங்கம் பதவிக்கு வந்ததும், இலங்கையில் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது. அதை அடிப்படையாக வைத்து, அமெரிக்காவின் தேசியக் கொடியில் உள்ள கோடுகளையும், நட்சத்திரங்களையும் பிரதிபலிக்கும் வகையில், Red Flag க்கின் முதலாவது இதழ் தலைப்புச் செய்தியாக Stars and Stripes over the Ceylon (இலங்கையின் அப்போதைய பெயர்) என்ற தலைப்பிட்டு ஒரு செய்திக் கட்டுரையை வரைந்திருந்தார்

அதேபோல, வியட்நாம் யுத்தம் உக்கிரமடைந்திருந்த வேளையில், அமெரிக்காவைச் சேர்ந்த கறுப்பினத்தவரான அதிபாரக் குத்துச்சண்டை சம்பியன் காஸியஸ் கிளேயை, வியட்நாம் யுத்த முனைக்குச் சென்று

போரிடும்படி அமெரிக்க அரசு நிர்ப்பந்தித்தது. கிளே, அமெரிக்கா வியட்நாமில் ஆக்கிரமித்ததை எதிர்த்த படியால் அவரைப் பழிவாங்கும் நோக்குடனேயே அமெரிக்க அரசு அவ்வாறு அவரை நிர்ப்பந்தித்தது. இது சம்பந்தமாக ஒரு விமர்சனத்தை எழுதிய கார்த்திகேசன் காஸியஸ் வியட்நாமுக்குப் போனால் Clay யாக (களிமண்ணாக)த் தான் திரும்பி வர வேண்டிவரும் எனக் கிண்டலாக எழுதினார்.

இன்னொரு இதழில், ஐ.தே.க தாய் நாட்டுக்கு விசுவாசமில்லாத, ஏகாதிபத்தியத்துக்கு விசுவாசமான ஒரு கட்சி என்பதை குறியீடாகக் காட்டுவதற்காக, முன்னைய பாராளுமன்றத்தில் 'தேசபிதா' என வர்ணிக்கப்படும் டி.எஸ்.சேனநாயக்க தனது பிட்டத்தை பாராளுமன்றத்துக்கு காட்டிக் கொண்டு, காலிமுகக் கடலை நோக்கி யாரோ வெளிநாட்டவர் வரவை எதிர்பார்த்திருப்பது போன்ற அவரது சிலையின் புகைப்படத்தைப் பிரசுரித்து, "சுதந்திரத்துக்கு (பாராளுமன்றத்துக்கு) பின்பக்கத்தை (பிட்டத்தை) காட்டிக் கொண்டிருக்கிறார்" என அதற்கு கிண்டலாகத் தலைப்பும் கொடுத்திருந்தார்.

தமிழ் பத்திரிகைகளிலும் அவரது கைவண்ணத்துக்கு பல சான்றுகள் உள்ளன. எம்.கே.அந்தனிசில் நடாத்தி வந்த 'தீப்பொறி" பத்திரிகை கார்த்திகேசனின் எதுகை மோனையான பல வசனங்களைத் தலைப்பாகக் கொண்டு வந்திருக்கிறது.

உதாரணமாக, 1963ல் சமசமாஜக்கட்சி இடதுசாரி ஐக்கிய முன்னணியை உடைத்துக் கொண்டு, சிறீமாவோ தலைமையிலான சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொண்டது. சமசமாஜக் கட்சித் தலைவர் டாகடர் என்.எம்.பெரேரா அவ்வரசாங்கத்தில் நிதியமைச்சரானார். நிதியமைச்சரானதும் யாழ்ப்பாணத்துக்கு அவர் விஜயம் செய்யத் தீர்மானித்தபோது, சிறீமாவோ அரசாங்கத்துக்கு எதிராக இயக்கம் நடாத்திக் கொண்டிருந்த தமிழரசுக்கட்சி, என்.எம்.முக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக அறிவித்தது. அது சம்பந்தமான செய்தியை வெளியிட்ட 'தீப்பொறி' ஏடு, கார்த்திகேசன் சொன்ன வார்த்தைகளைக் கொண்டு, 'என்.எம்.முக்கு கறுப்பு! பெடரலுக்கு (தமிழரசுக்கட்சியின் ஆங்கிலப் பெயர்) செருப்பு!!' என தலைப்பிட்டு செய்தி பிரசுரித்தது.

அதேபோல, 1965ல் ஐ.தே.க. தலைமையில் தமிழரசு – காங்கிரஸ் கட்சிகளும், மிக மோசமான சிங்கள இனவாதிகளான கே.எம்.பி ராஜரத்ன, ஆர்.ஜீ. சேனநாயக்க போன்றோரும் ஒன்றாக அங்கம் வகித்த ஏழு கட்சி கூட்டாட்சி பதவி ஏற்றது. அவ்வரசாங்கம் பதவியேற்றதும் முதல் செய்த

வேலை, அதுவரை காலமும் வறிய மக்களுக்கு இலவசமாக வழங்கி வந்த அரிசி மானியத்தை வெட்டியதும், வடபகுதி விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் வண்ணம், உணவு இறக்குமதிக்கு இருந்த கட்டுப்பாட்டை நீக்கியதும், ரூபாயின் பெறுமதியை இருபது வீதத்தால் குறைத்ததும் தான். அதனால் நாட்டு மக்கள் பெரும் வறுமைக்குள் தள்ளப்பட்டனர். ஐ.தே.க அரசின் இந்த மக்கள் விரோத நடவடிக்கையை கண்டிக்கும் விதத்தில், அக்கட்சியின் சின்னமான யானையை முன்னிறுத்தி ஒரு தலைப்புச் செய்தியை 'தீப்பொறி' பிரசுரித்தது. கார்த்திகேசனின் வாயிலிருந்து உதித்த அந்தத் தலைப்பு இதுதான். "ஆட்சிக்கு வந்தது ஆனை! – அடுப்புக்குள் புகுந்தது பூனை!!'.

கார்த்திகேசன் தனது எழுத்துத் துறையை பத்திரிகைகளுடன் மட்டும் நிறுத்திக் கொண்டவரல்ல. பல பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்பனவற்றின் ஆண்டு மலர்களிலும், பல கலை இலக்கிய விழா மலர்களிலும் கூட அவரது ஏராளமான கட்டுரைகள் வந்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியின் பல அறிக்கைகள் அவரது கைவண்ணத்தில் உருவானவையே. இவை தவிர பொதுமக்களின் தேவைகளுக்காக அவர் தன் நாளில் பல்லாயிரக்கணக்கான கடிதங்களை எழுதிக் கொடுத்திருப்பார். அவர் மரணிக்கும் சமயத்தில் கூட, தொழிலாளி ஒருவரின் பிரச்சினை சம்பந்தமாக ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருக்கையிலேயே அவர் உயிர் பிரிந்தது.

தோழர் கார்த்திகேசன் மரணித்தது 1977 செப்ரெம்பர் 10ந் திகதி ஆகும். அதற்கு முன்னர் பொதுத் தேர்தல் நடந்து ஐ.தே.க அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. இந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் வெளிவந்த, மார்க்சிச – லெனினிச கட்சியின் பத்திரிகையான 'போராளி' யின் முன்பக்க தலைப்புச் செய்தியை தோழர் கார்த்திகேசனே எழுதியிருந்தார். அந்தச் செய்திக்கு அவர், ' ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால், நாட்டில் மீண்டும் இருள் சூளும்' என்று தலைப்பிட்டிருந்தார்.

இந்தத் தலைப்பைப் பார்த்துவிட்டு, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த எமது தோழர் ஒருவர் கடுமையான விமர்சனம் ஒன்றை முன்வைத்தார். அதாவது இந்தத் தலையங்கம், 'தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்' என மறைமுகமாகக் குறிப்பிடுகிறது என அவர் வாதிட்டார். இந்த விடயம் தோழர் கார்த்திகேசனின் கவனத்துக்குப் போனபோது, அவர் எவ்விதமான ஒளிவுமறைவுமின்றி, 'உண்மையும் அதுதான், எமது கட்சி தேர்தல் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ அதிகாரத்துக்கு வர முடியாது பலவீனமாக இருக்கும் ஒரு

சூழலில், பொது எதிரியான ஐ.தே.க தோற்கடிப்பதற்காக, ஓரளவாவது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடியதும், ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மை வாய்ந்ததுமான ஒரு கட்சியை ஆதரிப்பதில் தவறில்லை. அதைவிடுத்து, சண்முகதாசன் செய்தது போன்று இடதுசாரி தீவிரவாதம் பேசினால், அது எதிரிக்குத்தான் உதவும்' என விளக்கமளித்தார்.

தோழர் கார்த்திகேசனின் விளக்கத்தால் அந்தத் தோழர் திருப்தியடைய வில்லை. ஆனால் விளக்கம் கொடுத்த கார்த்திகேசன் மரணித்த பின்னர், 17 வருடங்கள் நீடித்த ஐ.தே.க அரசு நாட்டு மக்களுக்கு செய்த அநியாயங்களை, அக்கிரமங்களை அந்தத் தோழர் பார்த்துவிட்டு, 'கார்த்திகேசனின் தீர்க்க தரிசனமிக்க வார்த்தைகளை இப்பொழுது தான் என்னால் பூரணமாக விளங்கிக் கொள்ள முடிகிறது' என்று கூறினார். ஆனால் அந்தத் தோழர் கூட ஐ.தே.க அரசின் முழுமையான பாசிச செயற்பாடுகளைப் பார்க்க கொடுத்து வைக்கவில்லை. ஏனெனில் ஐ.தே.கவையும் விஞ்சி உருவான பாசிசப் புலிகள் அவரை 1985ல் நரபலி எடுத்துவிட்டார்கள்.

தோழர் கார்த்திகேசன் பிரசித்தி பெற்ற ஆங்கிலக் கவிதையொன்றையும் எழுதியுள்ளார். உலகில் முதன்முதலாக விண்வெளிப் பயணம் மேற்கொண்ட சோவியத் விண்வெளி வீரர் யூரி ககாரின் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்த போது, யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரிக்கும் வருகை தந்தார். அவரது வருகை சம்பந்மாக வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் தான் ககாரினின் சாதனை சம்பந்தமாக கார்த்திகேசன் ஒரு அருமையான கவிதையை எழுதியிருக்கிறார்.

கார்த்திகேசன் எழுதிய கட்டுரைகளில் இரண்டு நூல் வடிவம் பெற்றிருக்கின்றன. அவற்றில் ஒன்று, லெனினிசத்துக்கும் எதிர்ப்புரட்சிகர ரொட்ஸ்கியவாதத்திற்கும் இடையிலான நேர் எதிரான போக்குகள் சம்பந்தமானதாகும். இது Trosky verses Lenin என்ற தலைப்பில் பிரசுரமானது.

இன்னொரு நூல் 'சமூகமும் சரித்திரமும்' என்ற தலைப்பில் வெளிவந்த, மார்க்சிசக் கண்ணோட்டத்தில் சமூக வளர்ச்சியை எளிமையாக விளக்கும் நூலாகும். பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களின் முன்னுரையுடன் வெளியான இந்த நூலில் கார்த்திகேசனின் பெயர் குறிப்பிடப்படவில்லையாயினும், அதை அவரே எழுதினார் என்பதை கட்சித் தோழர்கள் நன்கறிவர்.

இதுதவிர, 1961ல் தமிழரசுக்கட்சி வடக்கு கிழக்கில் மேற்கொண்ட சத்தியாக்கிரகம், ஒரு பெரும் வெகுஜனப் போராட்டமாக நடந்தது. இந்தப் போராட்டம் பிழையான நோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதால், அது வெற்றி பெறவில்லை. இந்தப் போராட்டத்தை நேரில் அவதானித்து, உண்மை நிலையைக் கண்டறிவதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அதன் பெருந்தலைவர்களில் ஒருவரான தோழர் பி.இராமமூர்த்தி அவர்களை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தது. அவர் யாழ்ப்பாணம் வந்து சென்ற பின்னர், தமிழரசுக்கட்சி நடாத்தி வந்த சத்தியாக்கிரகத்தின் கபட நோக்கங்களை விளக்கி, 'இலங்கைத் தமிழர் பிரச்சினை என்ன?' என்ற தலைப்பில் பெறுமதிமிக்க பிரசுரம் ஒன்றை சென்னையில் வெளியிட்டார். அதற்கான மூலக் குறிப்புகள் தோழர் கார்த்திகேசனால் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் தோழர் கார்த்திகேசனுக்கு செய்யக்கூடிய நினைவஞ்சலிகளில் ஒன்று, அவர் தனது காலத்தில் எழுதிய அனைத்தையும் தேடியெடுத்து நூலுருவாக்குவது தான். அவ்வாறு செய்தோமானால், அது 30 வருட கோர யுத்தத்தால் திக்கற்றுப் போய் நிற்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு, நாம் விட்டுச் செல்லும் ஒரு பொக்கிசமாக, முதுசமாக இருக்கும்.

# 40. கம்யூனிஸ்ட் அரசியல் நாகரீகத்தின் முன்னோடியாக வாழ்ந்த கார்த்திகேசன்

அரசியல் ரீதியாக எதிரானவர்களையும், மாற்றுக் கருத்துள்ளவர் களையும் மதிப்பதில், கார்த்திகேசன் பின்பற்றிய அணுகுமுறை, மிகவும் முன்னுதாரணம் மிக்கதாக இருந்ததுடன், சகலராலும் போற்றப்பட்ட ஒன்றாகவும் இருந்தது. அவர் எப்பொழுதும் தன்னுடன் உரையாடுபவரின் கருத்தை மிகவும் பொறுமையாகச் செவிமடுப்பார். கருத்துச் சொல்பவரை ஒருபோதும் குறுக்கீடு செய்யமாட்டார். கருத்துச் சொன்னவரின் நல்ல கருத்துகளை முதலில் ஏற்றுக் கொண்டு, அவரது முரண்பாடான கருத்துகளில் உள்ள தவறை சிநேகபூர்வமான முறையில் எடுத்துச் சொல்லி, சரியான பாதைக்கு அவரைக் கொண்டு வருவார். அதனால் சிறு பிள்ளையிலிருந்து பெரியோர் வரை, எவருமே அவருடன் வாதிடத் தயங்கியது கிடையாது.

கட்சியின் குழுக் கூட்டங்களிலும், கீழ்மட்டத் தோழர்களின் கருத்தை வெளிக் கொணர வைப்பதில், அதிக கவனம் செலுத்துவார். ஒருவருடைய கருத்தை, அவர் எவ்வளவுதான் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தாலும், மற்றவர்கள் மீது திணிப்பதை அவர் விரும்புவதில்லை. குழுக் கூட்டங்களுக்கு அனைத்துத் தோழர்களையும் தலைமை தாங்கும்படி கோருவார். தன்னை ஒருபோதும் அவர் முன்னிலைப படுத்துவதில்லை. தான் பின்னால் இருந்து கொண்டு, மற்றவர்கள் முன் சென்று விடயங்களைக் கையாள்வதற்கு ஊக்கம் கொடுப்பார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943 யூலை 03ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1935ல் ஆரம்பிக்கப்பட்ட லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகவும், இடதுசாரிக் கட்சியாகவும் இருந்தது. ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட்டுகளும் அக்கட்சியிலேயே அங்கம் வகித்தனர். ஆனால் அதன் முக்கிய தலைவர்கள், சோவியத் புரட்சிக்கு தொடர்ந்து குழிபறித்து வந்த லியோன் ரொட்ஸ்க்கியின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக்

கூறிக்கொண்டு, இலங்கைப் புரட்சி சம்பந்தமான தவறான கொள்கைகளை முன்வைத்ததுடன், உலகின் முதலாவது சோசலிச நாடான சோவியத் யூனியனுக்கு எதிராகவும் செயல்பட ஆரம்பித்தனர். இதன் காரணமாக அதில் இருந்து வெளியேறிய கம்யூனிஸ்ட்டுகள், 1940ம் ஆண்டு ஐக்கிய சோசலிசக் கட்சி என்ற கட்சியை உருவாக்கினர். இதன் ஸ்தாபக உறுப்பினர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவராவார்.

ஐக்கிய சோசலிசக் கட்சியே பின்னர் 1943ல் கம்யூனிஸ்ட் கட்சியாக உருமாற்றம் பெற்றது. கட்சி தோன்றிய காலத்திலிருந்து கார்த்திகேசன், அதன் வளர்ச்சிக்கு தன்னை பூரணமாக அர்ப்பணித்து வேலை செய்ய ஆரம்பித்தார். அவர் திருமணம் செய்த போது கூட, தனது முதல் விஜயத்தை தென்மாகாணத்திலிருந்த கட்சியின் தலைவர் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரசிங்கவின் வீட்டுக்கே மேற்கொண்டார். கொழும்பில் ஏனைய தோழர்களுடன் இணைந்து, கட்சியின் ஆங்கிலப் பத்திரிகைக்கு கட்டுரை எழுதுவதிலிருந்து, அதை அச்சகத்தில் அச்சிட்டு, வீதிகளில் நின்று விற்பது வரை அவர் செயல்பட்டார். அது தவிர கட்சி போஸ்டர்கள் ஒட்டுவது, கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்வது என எல்லா வேலைகளிலும் அவர் தயக்கமின்றி ஈடுபட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த கொள்கைகளாலும், அது பின்பற்றிய நடைமுறைகளாலும், நாட்டு மக்கள் மத்தியில் அதற்கு பெரும் செல்வாக்கு ஏற்பட்டு வந்தது. கட்சி தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைத்த பிராந்திய சுயாட்சிக் கொள்கை காரணமாகவும், பண்டாரநாயக்க அரசாங்கம் 1956ல் பதவியேற்றதும் கொண்டு வந்த 'சிங்களம் மட்டும்' சட்டத்தை உறுதியாக எதிர்த்து நின்றதாலும், தமிழ் பேசும் மக்களிடையே கட்சி மீது பெரும் நம்பிக்கை ஏற்பட்டது. தொழிலாளி வர்க்கத்தினதும், அனைத்து உழைக்கும் மக்களினதும், சிறுபான்மைத் தேசிய இனங்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாக கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்து வந்தது.

இந்த சூழ்நிலையில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும், சோவியத் அரசினதும் மாபெரும் தலைவர் ஸ்டாலின் அவர்கள் 1954ம் ஆண்டு மறைந்த பின்னர், அந்நாட்டின் கட்சி – அரசாங்க தலைமையை கபடத்தனமாக அபகரித்த துரோகி நிகிட்டா குருசேவ் தலைமையிலான நவீன திரிபுவாதக் கும்பல், ஸ்டாலின் மீது அபாண்டமான குற்றச் சாட்டுகளை அள்ளி வீசி அவரை நிந்தனை செய்ததுடன், கட்சியையும், நாட்டையும் முதலாளித்துவப் பாதையில் இட்டுச் செல்ல ஆரம்பித்தனர்.

குருசேவ் கும்பலின் இந்த எதிர்ப்புரட்சிகர செயலை, தோழர் மாஓசேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், உலகம் முழுவதிலுமிருந்த உண்மையான மார்க்சிச – லெனினிச கட்சிகளும் வன்மையாக எதிர்த்து நிராகரித்தன. அதன் காரணமாக உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பாரிய பிளவு தோன்றியது. அந்தப் பிளவு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும் எதிரொலித்தது. அதன் காரணமாக ஏற்கெனவே ரொட்ஸ்க்கியவாதிகளின் தான்தோன்றித்தனத்தால், இலங்கையின் சோசலிச இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு நலிவுற்றிருந்த அந்த இயக்கம், 1964ல் நவீன திரிபுவாதிகளால் உருவான சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கப் பிளவால் மேலும் பலவீனமடைந்தது.

இந்தப் போராட்டங்களின் போது, அதாவது ரொட்ஸ்க்கியவாத்துக்கு எதிரான போராட்டத்தின் போதும், நவீன திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் போதும், தோழர் கார்த்திகேசன் சரியான பாதையையே எப்பொழுதும் தேர்ந்தெடுத்து வந்துள்ளார். 1964ல் திரிபுவாதத்தை நிராகரித்து விட்டு உருவான புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை கட்டியெழுப்புவதில், தனது பல்கலைக்கழகத் தோழரான நா.சண்முகதாசன் உட்பட கட்சியின் அனைத்துத் தோழர்களுடனும் கார்த்திகேசன் கைகோர்த்துச் செயல்பட்டார்.

சண்முகதாசனுக்கும் கார்த்திகேசனுக்கும் உள்ள உறவு, ஒரு காலத்தில் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. சண்முகதாசனை கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கம் ஈர்த்ததில், கார்த்திகேசனுக்கு முக்கியமான பங்கு உண்டு. ஆரம்ப காலத்தில் தனது மாணவப் பருவத்தில், சைவ பக்தராக எப்பொழுதும் நெற்றியில் திருநூற்றுக் குறியுடன் தான் சண்முகதாசன் காட்சியளிப்பார் என, அவர் பற்றி கார்த்திகேசன் குறிப்பிடுவார். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கம் அவர் ஈர்க்கப்பட்டதும், தத்துவார்த்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும், அமைப்பு ரீதியிலும் அவர் ஒரு சிறந்த கம்யூனிஸ்ட்டாக மாறியதுடன், மிகச் சிறந்த தொழிற்சங்கத் தலைவராகவும் உருவானார்.

தனிப்பட்ட முறையிலும் கார்த்திகேசனுக்கும் சண்முகதாசனுக்கும் இடையிலான உறவு, மிகவும் சிறப்பானதாகவே இருந்து வந்துள்ளது. சண்முகதாசன் முதலில் தான் விரும்பியிருந்த ஒரு சிங்களப் பெண்மணியையே திருமணம் செய்தார். இந்தத் திருமணத்தைப் பெண்ணின் வீட்டார் விரும்பவில்லை. எனவே சண்முகதாசனும் அந்தப் பெண்ணும், கண்டி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். அந்தத் திருமணப் பதிவுக்கு கூடச் சென்று சாட்சியாகக் கையெழுத்திட்டவர் கார்த்திகேசன் அவர்களே!

பொலிஸ் நிலையத்தில் நடந்த திருமணப் பதிவின் போது நடந்த ஒரு சம்பவத்தை, கார்த்திகேசன் ஒருமுறை நகைச்சுவையாகக் குறிப்பிட்டார். பொலிஸ் நிலையத்தில் இருந்த போது, சண்முகதாசன் அங்குள்ள ஒவ்வொன்றையும் நன்கு கூர்ந்து அவதானித்ததாகவும், தான் பின்னர் அவரிடம் அதுபற்றி விசாரித்த போது, பொலிசார் ஆயுதங்களையெல்லாம் எங்கெங்கு வைத்துள்ளார்கள் எனத் தான் நோட்டமிட்டதாகவும், ஏனெனில் 'நாம் புரட்சி செய்யும் போது அந்த ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கு அது வசதியாக இருக்கும்' என சண்முகதாசன் குறிப்பிட்டதாகவும் கார்த்திகேசன் கூறினார்.

சண்முகதாசனின் சிங்களப் பெண்ணுடனான திருமண வாழ்வு நீண்டகாலம் நீடிக்கவில்லை. அவர் பின்னர் பருத்தித்துறைத் தொகுதியின் கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான இருந்த தோழர் பொன்.கந்தையா அவர்கள் காலமானதும், அவரது மனைவியை மறுமணம் செய்து கொண்டார். அவரது இந்தத் திருமணம் அப்போது ஒன்றுபட்டு இருந்த கம்யூனிஸ்ட் கட்சியில் பெரும் சர்ச்சையை உருவாக்கிவிட்டது. ஏனெனில் 1960 பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, நோய்வாயப்பட்டிருந்த தோழர் கந்தையா காலமானார். அவர் காலமான சொற்ப நாட்களுக்குள் சண்முகதாசன் இந்தத் திருமணத்தை மேற்கொண்டதால், அது கட்சி உறுப்பினர்களிடையே பெரும் சர்ச்சையை உருவாக்கி விட்டிருந்தது. இந்தச் சர்ச்சையின் போதும், தோழர் கார்த்திகேசனே கட்சித் தலைமைக்கும் சண்முகதாசனுக்கும் இடையில் சமரச ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு நிலைமையைச் சுமுகமாக்கினார்.

ஆனால் சண்முகதாசன், குருசேவின் நவீன திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் போது மிகச்சிறந்த தத்துவார்த்த விவாதங்களை முன்வைப்பவராக இருந்ததுடன், தொழிலாளர்களுக்காக தொழில் நீதிமன்றங்களில் சிறப்பாக வாதாடுபவராகவும் இருந்தது உண்மையென்ற போதிலும், புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியெழுப்புவதில் அவர் தவறுகளை இழைத்து, கட்சியை சரிவு நிலைக்கு இட்டுச் சென்றார். அதனால் கட்சிக்குள் அடிக்கடி பிளவுகள் தோன்றி, கட்சி பலவீனமடையும் நிலை தோன்றியது.

குறிப்பாக இலங்கைப் புரட்சியின் காலகட்டங்கள் குறித்து சித்தாந்த ரீதியாக அவர் சரியாக வரைவிலக்கணம் செய்த போதும், அதற்கான அரசியல் வேலைத் திட்டங்களை வகுப்பதில் தவறிழைத்தார். புரட்சி பற்றி பேசிக் கொண்டு வெறும் தொழிற்சங்க சீர்திருத்தப் பாதையில்

கட்சியை இழுத்துச் சென்றார். புரட்சிக்கான ஐக்கிய முன்னணி பற்றி பேசிக்கொண்டு, கட்சி ஐக்கியப்படுத்த வேண்டிய ஏகாதிபத்திய எதிர்ப்பு, முற்போக்கு சக்திகள் மீது பிரதான தாக்குதலை நிகழ்த்தினார். சண்முகதாசன் பின்பற்றிய இந்தத் தவறான கொள்கைகள் காரணமாகவே, பின்னர் எமது கட்சியின் வாலிபர் அணியில் முக்கிய பங்கு வகித்த ரோகண விஜேவீர கட்சியை விட்டு வெளியேறிச் சென்று, எமது கட்சிக்கு ஆதரவான இளைஞர்களைக் கொண்டு, குட்டி முதலாளித்துவ எதிர்ப்புரட்சிகர ஜே.வி.பியை உருவாக்கினார்.

சண்முகதாசனின் இன்னொரு பாரிய குறைபாடு என்னவெனில், அவர் கட்சியில் கம்யூனிஸ்ட் ஸ்தாபன ஒழுக்க நடைமுறைகளை அனுசரித்து நடக்கத் தவறியமையாகும். அவர் ஒருபோதும் விமர்சனம், சுய – விமர்சனத்தை மதித்து நடப்பராக இருக்கவில்லை. கட்சியில் ஜனநாயக மத்தியத்துவத்தையும், மத்தியத்துவ ஜனநாயகத்தையும் பேணுபவராகவும் இருக்கவில்லை. தனது தனிப்பட்ட எண்ணங்களைத் திணிப்பவராகவே செயல்பட்டார். கட்சியில் ஒரு கூட்டுத் தலைமையை உருவாக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டிருந்த, அவரையும் சேர்த்த மூவர் அடங்கிய செயலாளர் குழுவை நீக்கிவிட்டு, சர்வ வல்லமை பொருந்திய பொதுச்செயலாளர் என்ற பதவியை உருவாக்கி, அதில் தன்னை நியமித்துக் கொண்டார். அவர் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களைச் சரியான முறையில் அணுகாமல், தான் ஒரு தமிழர் என்பதற்காகவே, தன்னை இனவாத அடிப்படையில் விமர்சிப்பதாக எப்பொழுதும் கூறி திசை திருப்பி வந்தார்.

இந்த சூழ்நிலைகளால், கட்சியில் பெரும்பான்மையான மத்தியகுழு உறுப்பினர்களுக்கும் அவருக்கும் இடையே முரண்பாடு தோன்றியதுடன், கட்சி உறுப்பினர்களும் அவர் மீது நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். 1971ல் ஜே.வி.பி நடாத்திய எதிர்ப்புரட்சிகர ஆயுதக் கிளர்ச்சியைத் தொடர்ந்து, கட்சிக்குள் இருந்த முரண்பாடு ஒரு தீவிர நிலையை அடைந்தது. அந்தக் கிளர்ச்சியின் போது பல தோழர்களில் ஒருவராக கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்த சண்முகதாசன், விடுதலையாகி வெளியே வந்தவுடன், கட்சிக்குத் தெரியாமல் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டதுடன், கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கெதிரான அறிக்கைகளையும் வெளியிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் சண்முகதாசனுடன் நெருங்கிய தோழராகவும், மத்தியகுழு உறுப்பினர்களில் ஒருவராகவும் இருந்த கார்த்திகேசனால் கூட, அவரை ஒரு வழிக்குக் கொண்டுவர இயலவில்லை.

வேறு மார்க்கம் எதுவும் இல்லாத சூழ்நிலையில், கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கூடி, சண்முகதாசனை கட்சியிலிருந்து வெளியேற்றுவதென முடிவு செய்தனர். அந்த முடிவை ஏகப்பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் சண்முகதாசன் தனக்கு இருந்த முதலாளித்துவப் பத்திரிகைகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி, புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக தானே நீடிப்பதாக அறிக்கைகளை விடுத்தார். இதனால் மக்களுக்கு ஏற்படும் குழப்பங்களை நீக்குவதற்காக, கட்சி தனது பெயரை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என மாற்றம் செய்து செயற்படத் தொடங்கியது. புதிய கட்சியின் மூன்று பேர் கொண்ட செயலாளர் குழு உறுப்பினர்களில் ஒருவராக தோழர் கார்த்திகேசன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசியல் ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் தனிமைப்பட்டு விட்ட சண்முகதாசன் குழுவினர், தமது கையாகாலாத்தனத்தை காடைத்தனமாக மாற்றி, மார்க்சிச – லெனினிச கட்சியினர் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். தென்னிலங்கையிலோ, மலையகத்திலோ, கிழக்கிலோ எதுவும் செய்ய முடியாத அவர்கள், யாழ்ப்பாணத்தில் ஒரு சில இடங்களில் இருந்த தமது ஆதரவாளர்களைக் கொண்டு, மார்க்சிச – லெனினிச கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர்.

முதலில், கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தோழர் வீ.ஏ.கந்தசாமி, வடமராட்சியில் கரவெட்டிப் பகுதியில் கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றி விட்டு பஸ்சுக்காக நெல்லியடி சந்தியில் தனித்து நின்றபோது, அங்கு வந்த சண்முகதாசனின் காடையர்கள் அவர் மீது மோசமான தாக்குதலை மேற்கொண்டு அவரைப் பாரதூரமாகக் காயப்படுத்தினர். அங்கிருந்த பொதுமக்கள் தலையிடாவிட்டால், அவர்கள் அவரைக் கொலை செய்திருக்கவும் கூடும்.

அடுத்ததாக, எமது கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளரும், நீண்டகால கட்சித் தோழருமான இ.வே.துரைரத்தினம், கட்சிக் கூட்டமொன்றுக்காக யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் வந்திறங்கி, கட்சிக் காரியாலயம் நோக்கி வரும் போது அவர் மீது தாக்குதல் தொடுத்தனர்.

அதற்கடுத்ததாக, கட்சியின் வட பிரதேச முக்கிய தோழர்களில் ஒருவரான ச.சுப்பிரமணியம் (இயக்கச்சி மணியம்) இரு தடவைகள் கட்சிக் கூட்டங்களுக்கு வடமராட்சி சென்றிருந்த போது, அவர் மீது இதே குண்டர்கள் தாக்குதல் மேற்கொள்ள முயன்றனராயினும், அங்கு எமது

தோழர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்ததால் அந்த முயற்சிகள் கைகூடாமல் போய்விட்டன.

அதன் பின்னர் சண்முகதாசனின் வடபகுதி கையாட்கள், இலங்கையிலுள்ள அனைத்து கம்யூனிஸ்ட்டுகளாலும், வடபகுதி பொதுமக்களாலும், கல்விச் சமூகத்தினாலும் மிக உயர்வாக மதிக்கப்படும் தோழர் கார்த்திகேசனை மிகவும் இழிவான முறையில் "கோமாளி அதிபர்' என வர்ணித்து துண்டுப் பிரசுரம் ஒன்றை அச்சிட்டு வெளியிட்டனர். அதே துண்டுப் பிரசுரத்தில் எமது இன்னொரு முக்கியமான கட்சித் தோழரும், ஆசிரிய சங்க செயலாளருமான எம்.குமாரசாமியை 'குள்ள நரி' என தாக்கி எழுதியிருந்தனர். அத்துடன் தோழர் குமாரசாமி, ஆசிரியர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக அடிக்கடி சென்று வரும் யாழ்.கல்விக்கந்தோரின் சுவரில் 'கைலஞ்ச குமாரசாமி' என அபாண்டமான முறையில் எழுதி வைத்தனர். இதை எழுதத் தூண்டியவர்கள் அடிக்கடி கார்த்திகேசன், குமாரசாமி போன்றோரிடம் சென்று பணம் மற்றும் பலவிதமான உதவிகள் பெற்றவர்கள் என்பது தான் இதிலுள்ள வேடிக்கையானதும் வேதனையானதுமான அம்சம்.

இவையெல்லாவற்றையும் விட மிகவும் மோசமான சம்பவம் யாதெனில், தோழர் கார்த்திகேசன் தனது ஒரு அலுவலின் நிமித்தம் சங்கானைக்குச் சென்றுவிட்டு, வட்டுக்கோட்டையிலிருந்த தனது வீட்டுக்கு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த போது, சங்கானைச் சந்திக்கு அருகில் அவரை வழிமறித்த சண்முகதாசனின் குண்டர்கள் சிலர், அவரது சைக்கிளை பிடித்து அசைத்து அவரைக் கீழே விழுத்த முயன்றனர். ஆனால் உடனடியாக அவ்விடத்தில் பொதுமக்கள் கூடிவிட, அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுப் பின்வாங்கி ஓடிவிட்டனர்.

கட்சியின் நீண்டகாலத் தோழர் ஆசிரியர் என்.கே. ரகுநாதன் அவர்கள். அவர் கட்சி பிளவுபட்ட போது சிறிது காலம் சண்முகதாசன் அணியினருடன் இருந்துவிட்டு, பின்னர் அவர்களுடன் முரண்பட்டு ஒதுங்கியிருந்தார். இதைப் பொறுக்காத சண்முகதாசனின் ஆட்கள், அவர் அரசாங்க பரீட்சை ஒன்றில் மேற்பார்வையாளராக யாழ்.மத்திய கடமையாற்றிக் கொண்டிருந்த போது, பரீட்சை மண்டபத்தில் திடீரென நுழைந்து அவரது கையிலிருந்த பரீட்சைத் தாள்களை பறித்துச் சென்றனர். அதன் மூலம் அவரது வேலையை இழக்க வைக்க முயன்றனர். ஆனால் அங்கிருந்தவர்கள் அவர்களைக் கலைத்துச் சென்று அவர்களில் ஒருவரைப் பிடித்து, பொலிசில் ஒப்படைத்தனர். பின்னர் இந்த கேடுகெட்ட நடவடிக்கை குறித்து சண்முகதாசனின் ஆட்களிடம் சிலர் கேள்வியெழுப்பிய போது, தாம்

முதலாளித்துவ பரீட்சை முறையை எதிர்ப்பதற்காகவே அவ்வாறு நடந்து கொண்டதாக புரட்டுக் கதை கூறினர். அதற்கு கட்சித் தோழர் ரகுநாதன் தானா கிடைத்தார் என தோழர்கள் கேள்வியெழுப்பினர்.

இவையெல்லாவற்றுக்கும் சிகரம் வைப்பது போன்ற நிகழ்ச்சி கார்த்திகேசன் 1977 செப்ரெம்பரில் மரணித்த போது நிகழ்ந்தது. அவருக்கென சொந்த வீடு எதுவும் இல்லாதபடியால், அவரது மரணச் சடங்கு வட்டுக்கோட்டையிலிருந்த அவரது சகோதரியின் வீட்டில் நிகழ்ந்தது. அந்த மரணச் சடங்கில் தமது கட்சியினர் யாரும் பங்குபற்றக் கூடாது என, சண்முகதாசனின் கட்சியினர் சங்கானையில் கூடி முடிவெடுத்தனர். பின்னர் அவர்களது முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான கே.ஏ.சுப்பிரமணியம் மட்டும், தனது மனைவியுடன் மரண வீட்டுக்கு வந்தார். அவரும் கூட உள்ளே சென்று கார்த்திகேசனுக்கு எவ்வித அஞ்சலியும் செலுத்தவில்லை. தனது மனைவியை மட்டும் உள்ளே அனுப்பி வைத்துவிட்டு, தான் வீதியில் நின்று கொண்டார். சிறிது நேரத்தில் மனைவியையும் திரும்பக் கூட்டிச் சென்றுவிட்டார்.

சண்முகதாசன் குழுவினரின் இந்த மிக அநாகரிகமான செயல் குறித்து பின்னர் சொல்லி மனம் வருந்திய, முன்னாள் சங்கானை பட்டினசபை உறுப்பினரும், முக்கியமான கட்சித் தோழருமான மான் முத்தையா, கட்சி கட்டுப்பாடு என்ற போர்வையில் தம்மையெல்லாம் கார்த்திகேசனின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவிடாமல் தடைசெய்துவிட்டு, கே.ஏ.சுப்பிரமணியம் மட்டும் தான் நல்ல பிள்ளைப் பெயர் எடுப்பதற்காக அங்கு சென்று வந்துள்ளார் என்று வருந்தினார். அத்துடன் தனது வாள்நாளில் செய்த மிகப் பெரிய தவறும், தான் வாழ்க்கை முழுக்க வருந்த நேர்ந்த சம்பவமும் என்னவென்றால், சண்முகதாசன் கட்சியினரின் சொல்லைக் கேட்டு கார்த்திகேசனின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளாமல் விட்டதுதான் என வேதனைப்பட்டார்.

ஆனால் சண்முகதாசன் குழுவினர் அவ்வாறு காடைத்தனமாக நடந்து கொண்ட போதிலும், கார்த்திகேசன் உயிருடன் இருந்த காலத்தில், அவர் ஒருபோதும் நிதானம் இழந்தோ, அநாகரிகமாகவோ நடந்து கொண்டது கிடையாது. அவர்களுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என சில தோழர்கள் உணர்ச்சி வசப்பட்ட போதும், அவர் அவர்களைச் சாந்தப்படுத்தி, சண்முகதாசன் குழுவினரின் இந்த நடவடிக்கைகள் சித்தாந்தரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அவர்கள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதையே எடுத்துக் காட்டுகின்றன. இது தற்காலிகமானது.

இவர்களில் சிலர் வருங்காலத்தில் உண்மையை உணர்ந்து சரியான பாதைக்கு வரக்கூடும். வேறு சிலர் அரசியலிலிருந்து ஒதுங்கி விடக்கூடும். மக்களுக்காக அரசியலில் ஈடுபடும் நாம் மிகவும் பொறுமையாகவும் நிதானமாகவும் செயலாற்ற வேண்டும் என அறிவுரை கூறினார்.

தோழர் கார்த்திகேசன் குறிப்பிட்டது போலவே பின்னர் சம்பவங்கள் நிகழ்ந்தன. யாழ்ப்பாணத்திலிருந்த சண்முகதாசனின் ஆதரவாளர்களில் ஓரிருவரைத் தவிர ஏனையோர், 1972ல் முன்பு மார்க்சிச – லெனினிச கட்சியினர் முன்வைத்த அதே குற்றச்சாட்டுகளை ஆறு வருடங்கள் கழித்து சண்முகதாசன் மீது முன்வைத்துவிட்டு, அவரைவிட்டு விலகி தனியாக செயல்படத் தொடங்கினர். (ஆனால் அவர்கள் சண்முகதாசனையும் விட மோசமான நிலைக்குச் சென்று, தமிழ் தேசியவாதத்துக்கு மார்க்சிசம் என்று முலாம் பூசியதுடன், மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்ட பாசிச புலிகளையும் ஆதரிக்கும் நிலைக்கும் சென்றனர். அத்துடன் பழைய பாணியில் தம்முடன் முரண்படுபவர்கள் மீது சேறு பூசும் வேலையையும் செய்து வருகின்றனர்) சண்முகதாசனுடன் தொடர்ந்து ஒட்டியிருந்த சிலர், அவரது மரணத்தின் பின்னர் அரசியலிலிருந்து முற்றாக ஒதுங்கிக் கொண்டனர்.

இந்த இடத்தில் தான், ஒரு கம்யூனிஸ்ட் எவ்வாறான அரசியல் கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கு, கார்த்திகேசன் எமக்கு வழங்கிய ஒரு அறிவுரையை நினைவுகூர வேண்டியிருக்கிறது. அதாவது, சண்முகதாசன் 1972ல் அவரது கட்சி விரோத நடவடிக்கைகள் காரணமாக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், முதல் தடவையாக கருத்தரங்கு ஒன்றின் நிமித்தம் அவரது ஆதரவாளர்களால் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்ட போது, அவரது வருகையை எதிர்த்து மார்க்சிச – லெனினிச கட்சித் தோழர்கள், யாழ்.நகரமெங்கும் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தனர். அதில் ஒரு சுவரொட்டியில், "றெஸ்ற்ஹவுஸ் (வாடிவீட்டு) புரட்சிவாதி சண்முகதாசனே திரும்பிப் போ" என்ற ஒரு சுலோகமும் இருந்தது.

இதன் அர்த்தம் என்னவென்றால், சண்முகதாசன் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த காலத்தில், நாட்டின் பல பகுதிகளுக்கும் கட்சி நிகழ்வுகளுக்காக செல்லும் போது, அங்குள்ள தோழர்களுக்கு வசதியான வீடுகள் இருந்தாலும் கூட, அவர் அங்கு தங்குவதில்லை. ஏதாவது ஒரு வாடிவீட்டில் தான் தங்குவார். ஆனால் கட்சியின் மற்றைய தலைவர்கள் எவரும் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. உதாரணத்துக்கு தென்னிலங்கையில் மிகவும் உயர்ந்த குடும்ப பாரம்பரியத்தைக் கொண்ட

முன்னாள் கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்க கூட, எமது கட்சியில் அங்கம் வகித்த காலத்தில் ஒருமுறை ஐந்து நாள் பயணமாக கிளிநொச்சிப் பிரதேசத்துக்குச் சென்றபோது, ஐந்து நாட்களும் சாதாரண விவசாயிகளின் வீடுகளிலேயே உண்டு உறங்கினார்.

சண்முகதாசனின் இந்த வாழ்க்கை முறை கட்சித் தோழர்களிடம் விமர்சனங்களைத் தோற்றுவித்தது மட்டுமின்றி, கட்சியின் எதிரிகளின் கிண்டல் கேலிக்கும் உள்ளானது. இப்படியான ஒருவர் மிகவும் சவால்களையும், துன்பங்களையும் கொடுக்கும் ஒரு புரட்சிக்கு எவ்வாறு தலைமைதாங்கப் போகின்றார் என்பதே, கட்சி ஆதரவாளர்களதும், எதிரிகளதும் ஒருமித்த கேள்வியாக இருந்தது. எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்று தனது ஜே.வி.பி. கட்சியை ஆரம்பித்த விஜேவீர கூட, ஆரம்பகாலத்தில் சண்முகதாசனுக்கு எதிரான பிரச்சாரத்துக்கு, சண்முகதாசன் தங்கிய வாடிவீடுகளில் தான் திரட்டிய, அவரது ஆடம்பரச் செலவுக்கான பற்றுச் சீட்டுகளையே பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தோழர் கார்த்திகேசன், எமது தோழர்களால் சண்முகதாசனை விமர்ச்சித்து எழுதிய அந்த சுலோகத்தை, வேறு விதமாக நோக்கினார். எனவே காலையில் தான் பாடசாலை செல்லும் போது அந்த சுலோகத்தை சுவர்களில் அவதானித்த தோழர் கார்த்திகேசன், அன்று மாலை எமது தோழர்களைத் தனது வீட்டுக்கு அழைத்து, அவ்வாறான சுலோகங்களை இனிமேல் எழுததக்கூடாது என சற்று கண்டிப்புடன் கேட்டுக் கொண்டார்.

அதற்கு அவர் கூறிய காரணம், ஒருவருடன் அரசியல் ரீதியாக ஏற்படும் முரண்பாட்டை நாம் அரசியல்ரீதியாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான வழிமுறைகள் விவாதங்கள், கலந்துரையாடல்கள் என்பனவே. எந்தக் காரணம் கொண்டும் முரண்பாட்டைத் தீர்க்க வன்முறைகளை நாடுவதோ, தற்போது செய்தது போன்ற தனிப்பட்ட விமர்சனத் தாக்குதல்களில் ஈடுபடுவதோ தவறு என விளக்கினார். தனிப்பட்ட தாக்குதல்கள், அரசியல்ரீதியிலான எமது குற்றச்சாட்டுகளை மலினப்படுத்தி, பலவீனப்படுத்தி விடும் என்பதே எப்பொழுதும் அவரது கருத்தாக இருந்து வந்துள்ளது.

இன்றும் தம்மை மார்க்சியவாதிகள் என்று சொல்லிக் கொண்டு தனிப்பட்ட அவதூறுகளைப் பொழிந்து வரும் போலி மார்க்சியவாதிகள் முன்னே, கார்த்திகேசன் போன்ற உண்மையான கம்யூனிஸ்ட் மாணிக்கங்களின் முன்னுதாரணம் எங்கே?

கார்த்திகேசனைப் பொறுத்த வரையில், ஒரே கட்சியில் முன்னர் ஒன்றாக இருந்து பின்னர் நவீன திரிபுவாதப் பாதைக்குச் சென்றுவிட்டவர்களுடன் கூட, அவர் ஒருபோதும் எதிரியுடன் நடப்பது போல நடந்து கொள்வதில்லை. அவர்களைச் சந்திக்க நேர்ந்தால் நட்புடன் அளவளாவுவார். அதேபோல முதலாளித்துவக் கட்சிகளைச் சேர்ந்தவர்களைச் சந்திக்க நேர்ந்தால் கூட, அவர்களுடனும் மிகவும் மரியாதையுடனும், நட்புடனும் பழகிக் கொள்வார். ஆனால் சண்முகதாசன் குழுவினர் மட்டும், கம்யூனிஸ்ட் உணர்வுகளுக்கு விரோதமாகச் செயல்பட்டு வந்தமை குறித்து அவருக்கு எப்பொழுதும் மிகுந்த கவலை உண்டு.

கார்த்திகேசனின் கண்ணோட்டத்தில், அனைத்து மனிதர்களும் பிறப்பால் மானிடப் பிறவிகளே. அவர்கள் வளரும் சூழலே அவர்களது வர்க்க நிலையையும், பழக்க வழக்கங்களையும் தீர்மானிக்கிறது. பல சாதாரண மக்கள் கூட தவறான வழி நடத்தல்களால் பிழையான நிலைப்பாட்டை எடுக்கக் கூடும். ஆகையால் எல்லா மனிதர்களுக்கும் தமது தவறுகளைத் திருத்திக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் இதுவே அவரது நிலைப்பாடு. இதுதான் கம்யூனிஸ்ட் நிலைப்பாடும் என்று சொல்லவும் வேண்டுமா?

'மனிதனது மதிக்க முடியாத உடமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒரு தடவை தான் வாழமுடியும். காலமெல்லாம் குறிக்கோளில்லாமல் பாழாக்கி விட்டேனென்ற வருத்தம் வதைப்பதற்கு இடம் கொடுக்காத வகையில் அவன் சீராக வாழ வேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் அவன் நேராக வாழ வேண்டும். உலகத்தின் தலைசிறந்த லட்சியத்துக்காக, மனித குலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற பொன்னான மார்க்கத்துக்காக என் வாழ்வு முழுவதையும் சக்தி அனைத்தையும் அர்ப் பணித்தேன் என்று இறக்கும் பொழுது கூறும் உரிமை பெறும் வகையில் அவன் வாழவேண்டும். திடீர் நோயோ, சோக விபத்தோ வாழ்வுக்கு வெடி வைக்கக் கூடுமாதலால், மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.'

அஸ்றாவஸ்க்கி

(வீரம்விளைந்தது நாவல்)

ISBN 978-955-1810-16-0

9 789551 810160